www.padippakam.com

15 நவம். '93 ரூ. 3.00

# புதிய ஜனநாயகம்



## மு.க. - வை.கோ. மோதல் கொள்கையும் இல்லை வெங்காயமும் இல்லை

படிப்பகம்

www.padippakam.com



# நவம்பர் புரட்சி நாள்: மீண்டும் செங்கொடி உயர்ந்தோங்கும்!

**நவம்பர் 7, 1917**

ரசியாவில் பாட்டாளி வர்க்க ஆட்சி மலர்ந்த நாள். பூமிப் பரப்பில் ஐந்தில் ஒரு பங்கில் உழைக்கும் மக்களின் ஆட்சி நிறுவப்பட்ட நாள். ஏகாதிபத்தியம் காகிதப் புலியே என நிரூபித்துக் காட்டி, ஒடுக்கப்பட்ட நாடுகளின் - மக்களின் மனங்களில் புரட்சிக் கனலை மூட்டிய நாள். முதலாளித்துவ சகாப்தம் முடிந்து சோசலிச சகாப்தம் தொடங்கிவிட்டதை உலகறியப் பறைசாற்றிய நாள். ரசியாவில் முதல் சோசலிச அரசு உதித்த அந்த நவம்பர் புரட்சிக்கு இன்று 77-வது ஆண்டு பிறந்த நாள்!

முதல் உலகப் போருக்குப் பிறகு ஏகாதிபத்திய நாடுகளிலே வறுமையும் வேலையின்மையும் தலைவிரித்தாடியபோது, அவற்றின் வாடைகூட இல்லாமல் சோசலிச ரசியா மண்ணுலக சொர்க்கமாக மலர்ந்தது. கொள்ளைச் சுரண்டலும் கொடூர அடக்குமுறையும் முதலாளித்துவ நாடுகளில் பெருகியோடியபோது, அச்சுரண்டல் அமைப்பை ஒழித்து, பாட்டாளிகளையே நாட்டின் எஜமானர்களாக்கி ஜனநாயகத்தை நிலைநாட்டி வளர்த்தது சோசலிசம். சமத்துவம், மனித நேயம், பொதுநலம் என உழைப்பின் உன்னதத்தை, ஏகாதிபத்தியச் சீரழிவுகளுக்கு எதிராக பாட்டாளி வர்க்கப் புரட்சிகர கலாச்சாரத்தை சோசலிச ரசியா உலகிற்கு வழங்கியது.

உலகப் புரட்சியின் கலங்கரை விளக்கமாகத் திகழ்ந்த் சோசலிச ரசியா, தோழர் ஸ்டாலின் மறைவுக்குப் பின்னர் கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிய முதலாளித்துவப் பாதையாளர்களால் சீரழிக்கப்பட்டு, இன்று கோர்பி - யெல்ட்சின் காலத்தில் அம்மணமான ஏகாதிபத்தியமாக உருமாறி நிற்கிறது. சோவியத் ஒன்றியமும் சிதறுண்டு போய்விட்டது. ரசியாவின் வழியில் சென்ற கிழக்கு ஐரோப்பிய நாடுகளும் முதலாளித்துவ நரகத்தில் வீழ்ந்துவிட்டன.

இவற்றைக் காட்டி 'கம்யூனிசம் தோற்றுவிட்டது' என்று எக்காளமிட்ட ஏகாதிபத்தியவாதிகள், ரசிய - கிழக்கு ஐரோப்பிய நாடுகளுக்கு கொடுத்ததெல்லாம் வறுமை, வேலையின்மை, சீரழிவு, இனவெறி முதலானவற்றைத்தான்! இதை வெகுவிரைவிலேயே அனுபவ ரீதியாக உணர்ந்த ரசிய மக்கள் செங்கொடி ஏந்தி, லெனின் - ஸ்டாலின் உருவப் படங்களுடன் முதலாளித்துவ ஆட்சியாளர்களுக்கு எதிராகப் போராடத் தொடங்கி விட்டார்கள். பலகட்சி ஆட்சிமுறை - ஜனநாயகம்தான் உன்னதமானது என்று ஊளையிட்ட ஏகாதிபத்தியவாதிகள் இன்று ரசியாவில் துப்பாக்கியுடன் நிற்கும் யெல்ட்சின் சர்வாதிகாரத்தைத்தான் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறார்கள். முதலாளித்துவ பொருளாதார முறைதான் ஒரே தீர்வு என்று பெருங்கூச்சல் போடும் ஏகாதிபத்திய நாடுகளிலேயே நெருக்கடிகள் முற்றி வறுமையும், வேலையின்மையும், இனவெறியும் பெருகி வழிந்தோடுகிறது.

இவை யாவும் 'கம்யூனிசம் தோற்றுவிட்டது; முதலாளித்துவம்தான் ஒரே தீர்வு' என்கிற மாயையை - அண்டப் புளுகை அம்பலப்படுத்திக் காட்டுகின்றன. மறுபுறம், அமெரிக்க ஏகாதிபத்தியத்தின் வாசலிலேயே இடி முழக்கமென, பெரு நாட்டின் மார்க்சிய - லெனினிய கம்யூனிஸ்ட் கட்சித் தலைமையில் புரட்சிப் போராட்டங்கள் முன்னேறி வருகின்றன.

உலகில் மீண்டும் நவம்பர்கள் தோன்றும்; ஏகாதிபத்தியம் வீழ்த்தப்படும்; செங்கொடி உயர்ந்தோங்க கம்யூனிசமே வெல்லும்!

## தடைகளைக் கடந்து 9-வது ஆண்டில் "புதிய ஜனநாயகம்"

அன்பார்ந்த தோழர்களே,

நமது புதிய ஜனநாயகம் ஏட்டிற்கு இந்த இதழோடு 8-வது ஆண்டு நிறைவெய்துகிறது. கடந்த எட்டாண்டுகளில் நமது பத்திரிகை எதிர்கொண்ட இடர்ப்பாடுகள் ஏராளம். குறிப்பாக, ஈராண்டுகளுக்கு முன்பு பார்ப்பன - பாசிச ஜெயா கும்பலின் அடக்குமுறை காரணமாக நமது இதழ் முறையாக வெளிவரவில்லை. அதையொட்டி ஏற்பட்ட கடுமையான நிதி நெருக்கடியால் 8-ஆம் ஆண்டிலும் நமது இதழ் தொடர்ச்சியாக வெளிவராமல் போயுள்ளது. அடக்குமுறைகளை துணிவுடன் எதிர்கொண்டு முறியடித்த நாம், நிதி நெருக்கடி எனும் நிழலாய்த் தொடரும் இடர்ப்பாட்டையும் நிச்சயம் முறியடிக்க முடியும்.

முகவர்கள் உடனுக்குடன் நிலுவையை அனுப்பி வைத்தும், வாசகர்கள் சந்தா - நன்கொடை திரட்டியும் உதவுவதோடு, மேலும் அதிக அளவில் உழைக்கும் மக்களிடம் நமது இதழை அறிமுகப்படுத்துங்கள். மேலும் இதழின் உள்ளடக்கம், வடிவம் தொடர்பாக புதிய ஆலோசனைகளை எதிர்பார்க்கிறோம். பாசிச இருள் சூழ்ந்துள்ள இன்றைய நிலையில் பரந்துபட்ட மக்களிடம் அரசியல் விழிப்புணர்வூட்டி வரும் புதிய ஜனநாயகம் இதழுக்குத் தோள் கொடுங்கள்.

உங்களது ஊக்கமான ஆதரவுடன், உறுதியான ஒத்துழைப்புடன் எல்லா வகையான இடர்ப்பாடுகளையும் தகர்த்தெறிந்து முன்னேற முடியும் என்ற நம்பிக்கையுடன் 9-ஆம் ஆண்டில் எமது பயணத்தைத் தொடர்கிறோம். தோழமையுடன்,

ஆசிரியர் குழு.

## அறிவிப்பு

அன்பார்ந்த வாசகர்களே!

இந்த இதழில் "ஆர்.எஸ்.எஸ், பார்ப்பன - பாசிச பாரம்பரியம்" மற்றும் "பத்தாண்டுகளில் ஈழம்: மீளாய்வு" ஆகிய கட்டுரைத் தொடர் பிற அலுவல் காரணமாக தயாரிப்பின்மையால் இடம் பெறவில்லை என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

— ஆசிரியர் குழு



படிப்பகம்

www.padippakam.com

புதிய
ஜனநாயகம்

மார்க்சிய — லெனினிய
அரசியல் ஏடு

எட்டாம் ஆண்டு

23-24

16 அக். - 15 நவம். '93

உள்நாடு:
தனி இதழ்: ரூ.3.00
ஆண்டு சந்தா: ரூ.72.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 16

படைப்புகள் அனுப்பவும்
மற்றும்
அனைத்துத் தொடர்புக்கும்
இரா. சண்முகராஜ்,
ஆசிரியர், புதிய ஜனநாயகம்,
4, சாமியார் தோட்டம்,
ஆலந்தூர் சாலை,
சைதாப்பேட்டை,
சென்னை - 600 015.

# காஷ்மீர் ஹஸ்ரத்பால் மசூதி முற்றுகை ஆப்பசைத்த குரங்கு நிலையில் இந்தியா

இந்திய ராணுவத்தின் கொலைவெறி காட்டுமிராண்டித்தனத்தையும், இந்திய அரசின் காந்தீய கபட வேடத்தையும் காஷ்மீர் விவகாரத்தின் சமீபத்திய நிகழ்ச்சிகள் தோலுரித்துக் காட்டிவிட்டன. தீவிரவாதிகளை வெளியேற்றுவது என்ற பெயரில் கடந்த அக்டோபர் 15-ந் தேதி முதலாக ஸ்ரீநகரிலுள்ள ஹஸ்ரத்பால் மசூதியைச் சுற்றி இந்திய ராணுவம் 20 நாட்களுக்கும் மேலாக நடத்தும் முற்றுகைப் போரானது, உலக அரங்கில் இந்தியாவை மேலும் தனிமைப் படுத்திவிட்டது. காஷ்மீரில் அரச பயங்கரவாதத்தைத் தீவிரப்படுத்தப்போய், இப்போது ஆப்பசைத்த குரங்காக இந்திய அரசு சிக்கிக் கொண்டு திணறுகிறது.

இஸ்லாமியர்களின் மத நம்பிக்கையின்படி, முகமது நபியின் தலைமுடி பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள புனிதஸ்தலமாகிய ஹஸ்ரத்பால் மசூதியினுள் போராளிகள் சிலர் ஆயுதங்களுடன் தஞ்சமடைந்திருந்தனர். இதை அறிந்த காஷ்மீர் அரசும், ராணுவமும் அவர்களைப் பிடிக்கும் நோக்கத்தோடு மசூதியை முற்றுகையிட்டன. 1983-ல் சீக்கிய தீவிரவாதிகளைப் பிடிக்க பஞ்சாபிலுள்ள அமிர்தசரஸ் பொற்கோயில் மீது நீலநட்சத்திர தாக்குதல் நடவடிக்கையை மேற்கொண்டதைப் போல, ஹஸ்ரத்பால் மசூதி மீது அதிரடி தாக்குதல் நடத்துவதே அவர்களது பயங்கரவாதத் திட்டமாக இருந்தது.

மசூதியைத் தாக்கினால் இந்தியா மட்டுமன்றி உலகெங்கும் அது வெறுப்பையும் ஆத்திரத்தையும் கிளறிவிடும் என்பதால், மசூதியினுள் நபிகள் நாயகத்தின் தலைமுடி வைக்கப்பட்டுள்ள அறையின் பூட்டு உடைக்கப்பட்டுள்ளதாக அரச பயங்கரவாதிகள் வதந்தியைக் கிளப்பிவிட்டனர். ஏற்கனவே இப்புனித முடி காணாமற் போனதாக பீதி கிளப்பி 1963-ல் காஷ்மீர் கொந்தளித்தது. இப்போது அதேபோன்ற நிலையைத் தோற்றுவித்தால் முஸ்லிம்களின் கோபம் போராளிகளை நோக்கித் திரும்பும்; அவர்களைத் தனிமைப்படுத்தி தாக்கி அழித்துவிடலாம் என்று அவர்கள் கனவு கண்டனர். இதன்படி புனிதஸ்தலத்தை தீவிரவாதிகளிடமிருந்து மீட்பது என்ற பெயரில் எல்லைப் பாதுகாப்புப் படையும் துணை ராணுவப் படைகளும் மசூதியை முற்றுகையிட்டன. அக். 15-ந் தேதி வெள்ளிக்கிழமை தொழுகைக்கு வந்து திரும்பியவர்களில் எஞ்சியிருந்தோர் போராளிகளோடு சேர்த்து மசூதியினுள் சிக்கிக் கொண்டனர். ஸ்ரீநகர் முழுவதும் ஊரடங்கு உத்திரவு போடப்பட்டதோடு மசூதியை ஒட்டியுள்ள குடியிருப்புகளிலிருந்து 3000க்கும் மேற்பட்ட மக்கள் வலுக்கட்டாயமாக வெளியேற்றப்பட்டனர். அடுத்த நாளே 8 கம்பெனிகள் கொண்ட ராணுவப் படைகள் அப்பகுதியை ஆக்கிரமித்துக் கொண்டன.

''தீவிரவாதிகள் மசூதியினுள் தொழுகைக்கு வந்தவர்களை பிணைக் கைதிகளாக வைத்துக் கொண்டு மிரட்டுகிறார்கள்; மசூதியைத் தகர்க்கப் போவதாக அச்சுறுத்துகிறார்கள்'' என்று இந்திய அரசும் பத்திரிகைகளும் கூசாமல் புளுகின. ஆனால் அடுத்தநாளே மசூதியின் பொறுப்பாளர், புனிதமுடி பாதுகாப்பாக உள்ளதாக அறிவித்தார். இருப்பினும் அரச பயங்கரவாதிகளின் முற்றுகை நீக்கப்படவில்லை.

அதன் பின்னரே போராளிகள் எச்சரிக்கத் தொடங்கினர். அவர்களது கோரிக்கையும்கூட சாதாரணமாகவே இருந்தது. ராணுவத்தின் முற்றுகை நீக்கப்படவேண்டும்; தொழுகைக்கு பொது மக்களை அனுமதிக்க வேண்டும்; யாரையும் கைது செய்யக்கூடாது என்றே அவர்கள் கோரினர். அவ்வாறு செய்தால் மக்கள் கூட்டத்தோடு போராளிகள் தப்பிவிடுவார்கள் என்பதால் இந்திய ராணுவம் முற்றுகையை நீக்க மறுத்தது. மசூதியினுள் தாங்கள் வெடிமருந்துகளை வைத்திருப்பதால், இந்திய ராணுவம் தாக்கினால் மசூதிக்கு பெருமளவு பாதிப்பு ஏற்படும் என்று போராளிகள் எச்சரித்தனர். ஆனால் இதையே திரித்துப்புரட்டி, மசூதியை குண்டு வைத்து தகர்க்கப் போவதாக தீவிரவாதிகள் மிரட்டுகிறார்கள் என்று அரசு பயங்கரவாதிகள் பீதியூட்டினர்.

அரச பயங்கரவாதிகள் கட்டவிழ்த்துவிட்டுள்ள அண்டப்புளுகையும் அவதூறையும் காஷ்மீரிலுள்ள தெருநாய்கூட நம்பத் தயாராக இல்லை. மசூதியினுள் இருப்போரிடம் டெலிபோனில் தொடர்பு கொண்டு உறவினர்கள் பேசியபோது, தாங்கள் போராளிகளால் ஒருபோதும் பிணைக் கைதிகளாக வைக்கப்படவில்லை என்றும் அரசு தரப்பில் கூறப்படுவது அத்தனையும் பொய் என்றும் தெளிவுபடுத்தியுள்ளனர். காஷ்மீரின் பெரும் வர்த்தகரான தமது கணவர் மற்றும் இரு குழந்தைகளுடன் மசூதியினுள் இருக்கும் திருமதி அப்துர்ரஹ்மான் தமது உறவினர்களுடன் டெலிபோனில் பேசிய போது, இந்திய ராணுவத்தின் ஆக்கிரமிப்பைச் சாடியதோடு, அமைதியான தீர்வு ஏற்படாவிட்டால் தாங்கள் மசூதியைவிட்டு வெளியே வரப் போவதில்லை என்றும் உறுதியாகக் கூறியுள்ளார். இந்த தொலைபேசி உரையாடல் பத்திரிகையாளர்கள் முன்னிலையிலேயே நடந்துள்ளது.

இந்திய அரச பயங்கரவாதிகளின் சூழ்ச்சிகள், சதிகள் எதற்குமே காஷ்மீர் மக்கள் பலியாகத் தயாராக இல்லை. எனவேதான் போதிய உணவோ, குடிநீரோ, மருத்துவ வசதிகளோ கிடைக்காத போதிலும் கடுங்குளிரில் அவதிப்பட்டபோதிலும் மசூதியினுள் சிக்கியுள்ள மக்களின் உறுதி குலையவில்லை. மாநிலம் முழுவதும் ஊரடங்கு உத்திரவு போடப்பட்டிருப்பினும் தடையை மீறி தன்னெழுச்சியாக காஷ்மீரி மக்கள் வீதிகளில் திரண்டு ஆர்ப்பாட்டங்களை நடத்துகின்றனர். ராணுவத்தின் முற்றுகையை நீக்கக் கோரியும், தொழுகைக்கு அனுமதிக்கக் கோரியும் அக். 22 வெள்ளியன்று அலை அலையாக மக்கள் ஊர்வலமாகத் திரண்டு வந்த போது, அரசு பயங்கரவாதிகள் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தி பிஜபெகரா பகுதியில் நூற்றுக்கும் மேற்பட்டோரை கொன்றொழித்துள்ளனர். போராளிகள் மற்றும் மக்கள் திரள்

படிப்பகம்

www.padippakam.com

அமைப்புகளின் கூட்டமைப்பான ''ஹுரியத்''தின் தலைமையில் இப்படுகொலையைக் கண்டித்து ஊர்வலமாகச் சென்றபோது, ராணுவம் நடத்திய மிருகத்தனமான தாக்குதலில் நூற்றுக் கணக்கானோர் படுகாயமடைந்துள்ளனர். ஹுரியத் கூட்டமைப்பின் தலைவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.



ஹஸ்ரத்பால் மசூதியை முற்றுகையிட்டுள்ள இந்திய ராணுவம், சந்தேகப்பட்டவர்களை எல்லாம் கைதுசெய்து வெறியாட்டம் போடுகிறது.

காஷ்மீரிலுள்ள இந்திய ஓட்டுப் பொறுக்கிகள், துரோகத் தலைவர்கள் கூட தற்போதைய முற்றுகையையும், தாக்குதலையும் கடுமையாகவே எதிர்க்கின்றனர். போராளிகளுடன் சமரசப் பேச்சுவார்த்தை நடத்தக்கூட ஆள் கிடைக்காமல் இந்திய அரசு தனிமைப்பட்டுப் போயுள்ளது. சமரசப் பேச்சு வார்த்தைக்குச் சென்ற ''ஹுரியத்'' அமைப்பின் தலைவர்கள், தங்கள் ஆலோசனைகளை அரசு புறக்கணித்துவிட்ட நிலையில் தொடர்ந்து பேச்சுவார்த்தைக்குச் செல்ல மறுத்துவிட்டனர். காஷ்மீர் மாநில வழக்கறிஞர்கள் சங்கம், முற்றுகையை எதிர்த்து உயர்நீதி மன்றத்தில் ''ரிட்'' மனு தாக்கல் செய்ததோடு, மசூதியினுள் இருப்பவர்களுக்கு உணவும் மருத்துவ வசதியும் செய்துதரக்கோரி தனி வழக்கு தொடுத்து அதில் வெற்றியும் பெற்றனர். காஷ்மீரை இந்தியாவுடன் இணைக்கும் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட முன்னாள் அரசர் அரிசிங்கின் மகனும், இந்தியாவின் அமெரிக்கத் தூதராகச் செயல்பட்டவருமான டாக்டர் கரண்சிங்கூட, ''1947 அக்டோபரில் நிர்பந்தத்தின் பேரில்தான் காஷ்மீர் இந்தியாவுடன் இணைக்கப்பட்டது; சுய விருப்பத்தின் அடிப்படையில் அல்ல. எனவே காஷ்மீர் பிரச்சினை குறித்து பேச்சுவார்த்தையும், மக்களிடம் கருத்துக் கணிப்பும் நடத்த வேண்டும்'' என்கிறார்.

இந்திய அரசின் காந்தீய கபடவேடம் உலகம் முழுவதும் அம்பலப்பட்டுப் போயுள்ள நிலையில் இதைப் பயன்படுத்திக் கொண்டு அரபு மற்றும் மேற்கத்திய நாடுகளின் ஆதரவைத் திரட்டுவதில் பாகிஸ்தான் வெற்றி பெற்றுவிட்டது. ஹஸ்ரத்பால் மசூதி முற்றுகையைத் தொடர்ந்து பாகிஸ்தானில் இந்தியாவுக்கு எதிராக ஆர்ப்பாட்டங்களும், தூதரகத்துக்கு எதிரே வாகன எரிப்புகளும் நடந்துள்ளன. முற்றுகையை நீக்காவிட்டால், காஷ்மீர் குறித்து இந்தியாவுடன் பேச்சு வார்த்தைக்கே வரமாட்டோம் என்று பாகிஸ்தான் கொக்கரிக்கிறது. இஸ்லாமிய கூட்டமைப்பு நாடுகள் இந்தியாவுக்கு கண்டனம் தெரிவித்துள்ளன.

பதற்றமான இந்நிலைமையைச் சாதகமாக்கிக் கொண்டு, அமெரிக்க மேல்நிலை வல்லரசு இப்போது காஷ்மீர் விவகாரத்தில் தலையிட ஆரம்பித்துள்ளது. காஷ்மீரில் மனித உரிமைகள் மீறப்படுவதாகவும், இந்தியா - பாகிஸ்தானிடையே போர் மூளும் அபாயம் நிலவுவதாகவும் அது முதலைக் கண்ணீர் வடிக்கிறது. ''காஷ்மீர் மாநிலம் சர்ச்சைக்குரிய பகுதி'' என்று இப்போது அமெரிக்கா பகிரங்கமாக அறிவித்துள்ளது. ஐ.நா. மன்றத்தில் அண்மையில் உரையாற்றிய அமெரிக்க அதிபர் காஷ்மீர் பற்றி குறிப்பிட்டிருப்பதும், ஐ.நா. பொதுச்செயலாளர் காஷ்மீரில் பதற்றநிலையை தணிக்க வேண்டும் என்று பேசி வருவதும், இந்தியத் துணைக் கண்டத்தில் அமெரிக்கத் தலையீடு நடக்கப் போவதையே எச்சரிக்கின்றன.

காஷ்மீர் யுத்த தந்திர ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பகுதியாகும். இந்தியா, பாக், ஆப்கான், சீனா ஆகிய நாடுகளை ஒட்டியுள்ள பகுதி என்பதால் எந்த நேரத்திலும் இந்த நாடுகளில் அமெரிக்கா நேரடியாகத் தலையிட முடியும். அத்துடன் மேற்காசியாவையும் அச்சுறுத்த முடியும். இந்த நோக்கத்தோடு அமெரிக்கா காய்களை நகர்த்துகிறது. உலகமெங்கும் மனித உரிமை, ஜனநாயகம், பதற்றத்தைத் தணிப்பது என்ற பெயரில் வெளிப்படையாகவே ஆக்கிரமிப்பு யுத்தங்களை நடத்திவரும் அமெரிக்க வல்லரசு - போஸ்னியா, சோமாலியா, ஹெய்தியைத் தொடர்ந்து இப்போது காஷ்மீரிலும் காலூன்ற முயற்சிக்கிறது. இந்திய - பாக். போர் நிறுத்த எல்லைக் கோட்டருகே அமைதிப்படை என்ற பெயரில் ஐ.நா. படைகளை நிறுத்தி அமெரிக்கா ஆக்கிரமித்து விட்டால், அது இந்தியாவுக்கு மட்டுமல்ல; சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் காஷ்மீர் மக்களுக்கும், பிற தெற்காசிய - மேற்காசிய நாடுகளுக்கும் பேரபாயமாக மாறிவிடும்.

காஷ்மீர் விவகாரத்தில் தலையிடாதே என்று அமெரிக்காவை பகிரங்கமாக எச்சரிக்க இந்திய எடுபிடி ஆட்சியாளர்களுக்கு எள்ளளவும் தைரியம் கிடையாது. இருப்பினும் அரசுரீதியாக அல்லாமல், தமது கட்சி ரீதியாக அமெரிக்காவை எதிர்த்து சவடால் அடித்தும், காஷ்மீரை இந்தியாவிலிருந்து பிரிக்க முடியாது என்று ஊளையிட்டுக் கொண்டும் அப்பட்டமாக தேசிய வெறியையும் இந்து வெறியையும் தூண்டிவிட்டு ஆதாயம் தேடுவதைத் தவிர அவர்களுக்கு வேறு வழியும் கிடையாது. காங்கிரசுப் பெருச்சாளிகள் இப்போது தேசபக்த வேடம் கட்டிக் கொண்டு அமெரிக்க எதிர்ப்பு ஊர்வலம் - ஆர்ப்பாட்டங்களை நடத்தக் கிளம்பிவிட்டனர். அனைத்து ஓட்டுக் கட்சிகளுமே இந்த விஷயத்தில் உடன்பட்டு ஓரணியில் நிற்கின்றனர்.

காஷ்மீரைக் காட்டி எல்லா வகையான தேசிய இன, சிறுபான்மையினரின் போராட்டங்களை பயங்கரவாத, பிரிவினைவாத முத்திரை குத்தி மிருகத்தனமாக ஒடுக்குவது, குறுகிய தேசிய வெறி மதவெறியைக் கிளறிவிட்டு இந்து வெறி பாசிசத்தை நிலை நாட்டுவது என்று நோக்கத்தோடுதான் 20 நாட்களுக்கும் மேலாக அரசு பயங்கரவாதிகள் முற்றுகையிட்டு வருகின்றனர். மறுபுறம் அமெரிக்கா தலையிடுமானால் இந்தியா இன்னுமொரு போஸ்னியாவாக மாறிவிடும்.

ஆகவே, அரசு பயங்கரவாதத்தை மேலும் தீவிரமாக்கியோ, மதவெறி - தேசிய வெறியூட்டி பாக். மீது போர் தொடுத்தோ, காஷ்மீர் பிரச்சினையைத் தீர்க்க இந்திய அரசு முயலுவது வெற்றி பெறாது. அதேபோல, நாசவேலைக் காரர்களை ஏவி காஷ்மீரைத் துண்டாடி தன்னுடன் இணைத்துக் கொள்ள பாகிஸ்தான் முயற்சியும் பலிக்காது. முதலைக் கண்ணீர் வடித்து ஆக்கிரமிக்கத் துடிக்கும் அமெரிக்காவின் சூழ்ச்சிகளுக்கும் பலியாகிவிட முடியாது. இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுமே தாம் ஆக்கிரமித்துக் கொண்டுள்ள பகுதிகளிலிருந்து வெளியேறிவிட வேண்டும். காஷ்மீர் மக்கள் தமது எதிர்காலத் தகுதியைத் தீர்மானித்துக் கொள்ளும் சுய நிர்ணய உரிமையை அங்கீகரித்து அமுல்படுத்த வேண்டும். இதில் கட்டைப் பஞ்சாயத்து செய்ய அமெரிக்கா உள்ளிட்ட எந்த ஏகாதிபத்திய நாய்களுக்கும் உரிமையோ, அருகதையோ கிடையாது என்று எச்சரிக்க வேண்டும். இதுவொன்றே காஷ்மீர் பிரச்சினைக்கு நேர்மையான ஜனநாயக பூர்வமான ஒரே தீர்வாகும். ●


படிப்பகம்

www.padippakam.com

# மு.க.— வை.கோ. மோதல்
# கொள்கையும் இல்லை வெங்காயமும் இல்லை

வெடித்து கிளம்பியுள்ள தி.மு.க.வின் உட்கட்சிப் பூசல், ஜெயலலிதாவையும், காங்கிரசையும், 'சோ', சுப்பிரமணியசாமி முதலான பார்ப்பன சதி கும்பலையும் மிகுந்த மகிழ்ச்சிக்கு உள்ளாக்கியுள்ளது. பார்ப்பன மற்றும் கிசுகிசு பத்திரிகைகளோ யூகத்தையும் வதந்தியையுமே பரப்பி நாரதராக கலகமூட்டிக் கொண்டுள்ளன. தி.மு.க. தொண்டர்களும் அரசியல் ஆர்வலர்களும் முடிவை எதிர்பார்த்து கருணாநிதி மற்றும் வை.கோபால்சாமியின் நடவடிக்கைகளை உற்றுப்பார்த்துக்கொண்டுள்ளனர். தி.மு.க-விற்கு இது இன்னொரு 'கண்டம்' என்றால், கருணாநிதிக்கு 'வேதனை மிகுந்த சோதனை காலம்!'

வை.கோபால்சாமியை தி.மு.க.வின் தலைவராக்குவதற்காக கருணாநிதியை கொல்ல புலிகள் முயல்வதாக உளவுத்துறையின் உறுதிப்படுத்தப்படாத தகவலை மாநில அரசு மூலம் மத்திய அரசு கருணாநிதிக்கு அனுப்பியது. இதுவரை உட்கட்சி பூசலுக்கு "தி.மு.க.வைப் பிளக்க உளவுத்துறை சதி" என்று கூறிவந்த கருணாநிதிக்கு இது அத்தகைய ஒன்றே என்பது தெரியாததோ, புரியாததோ அல்ல. ஆனால் இதையே, ஸ்டாலினை வாரிசாக்கும் முயற்சிக்கு தடையாக உள்ள வை.கோ.விற்கு எதிரான அம்பாகப் பயன்படுத்தி ஆதாயம் தேட முனைந்தார். உளவுத்துறையின் பொய்யை மறுத்தோ, எவ்வித கருத்தோ சொல்லாமல் தாமே முன்வந்து முதலில் வெளியிட்ட கருணாநிதி, அரசு பாதுகாப்பையும் ஏற்றுக் கொண்டார். புலிகளின் கொலை சதி முயற்சியில் கோபால்சாமிக்கும் பங்குண்டு என்று சித்தரிக்கப்பட்ட உளவுத்துறை அறிக்கையை ஆமோதித்து பேட்டியும் அளித்தார்.

தனது உயிருக்கு ஆபத்து என்றால் தொண்டர்கள் துடித்து விடுவார்கள்; வை.கோ.வை அந்நியப்படுத்தி விடுவார்கள்; கோபால்சாமியே ஓடிவந்து காலில் விழுந்து விடுவார்; பிறகு வேண்டுமானால் தாமே "தம்பிக்கு இச்சதியில் தொடர்பில்லை" என அறிவித்து விடலாம்; இதன் மூலம் கட்சியில் வை.கோபால்சாமியின் வளர்ச்சி பாதிக்கும் என்றெல்லாம் கருணாநிதியின் 'ராஜதந்திர மூளை' கணக்குப் போட்டிருக்க வேண்டும்! கருணாநிதியின் அறிவிப்பை அவருடைய எதிரிகள் உட்பட எந்த முட்டாளும் நம்பவில்லை. விளைவு? வை.கோ.வையும் அவரது ஆதரவாளர்களையும் ஆத்திரமூட்டி எதிர்நிலைக்கே தள்ளியது. தி.மு.க.வில் பகிரங்கமான வாரிசுப் போருக்கு முதல் சுற்று நாஞ்சில் மனோகரன் விவகாரம் என்றால் இவ்விவகாரம் இரண்டாவது சுற்று.

கருணாநிதியின் அறிவிப்புக்கு கட்சியில் கண்டனங்கள் பெருகி, வை.கோ. கோஷ்டியும் எதிர் நடவடிக்கையில் இறங்கியது. உடன் கருணாநிதி, பிரச்சினையை - தொண்டர்களின் கவனத்தை தன்னை நோக்கி குவியச் செய்வதற்காக, தான் அரசியலில் இருந்து விலகுவதாக அறிவித்தார். இது வெறும் நாடகம்தான் என்பது எல்லோருக்கும் தெரிந்தது. அதனால்தான் வை.கோ.வை எதிர்க்கும் மாவட்டச் செயலாளர்கள் பலர் கருணாநிதியைப் பார்க்க ஓடோடி வரவில்லை; அல்லது ஜெயலலிதா காவிரி நீருக்காக உண்ணாவிரதம் இருந்தபோது அவரது சகபாடிகள் லாரிகளில் ஆளைபிடித்து வந்து குவித்தது போல் கருணாநிதியின் தம்பிகள் குவிக்கவுமில்லை. 300 பேர் அளவிலேயே கருணாநிதி வீடுமுன் தொண்டர்கள் குழுமினர்.

கருணாநிதிக்காக இரண்டுபேர் தீக்குளித்தனர் என்றால் வை.கோ.விற்காகவும் இரண்டுபேர் தீக்குளித்தனர். உண்ணாவிரதம், சுவரொட்டி, சுவரெழுத்து, கூட்டங்கள் வாயிலாக கண்டனங்கள் இரு தரப்பிலும் இருந்தாலும் வை.கோ. ஆதரவு செயல்பாடுகளே அதிகமிருந்தன. பசும்பொன், தென் சென்னை ஆகிய மாவட்டச் செயற்குழு மட்டுமே கோபால்சாமியை வெளியேற்றும்படி கோரி தீர்மானம் போட்டன. அதேசமயம் தி.மு.க.வின் வக்கீல் சங்கங்கள் கருணாநிதியை, பதவியை ராஜினாமா செய்யக் கோரி தீர்மானம் போட்டன. மாணவர் மற்றும் இளைஞர் அணியினர் கருணாநிதியின் அரசியல் விலகலை வரவேற்று நன்றி தெரிவித்தும், "தி.மு.க. என்ன மு.க. குடும்பத்தின் சொத்தா?" முதலான கண்டன முழக்கங்களும் மதுரை நகர் சுவர்களில் பரவலாக தென்பட்டன. மதுரை, நெல்லை, குமரி மாவட்டங்களில் கருணாநிதியின் கொடும்பாவிகளும் கொளுத்தப்பட்டன.

தொண்டர்களிடையே தனக்கு ஈடாகவும் வை.கோ. கோஷ்டிக்கு ஆதரவு இருந்ததைக் கண்டு திகைத்தார், கருணாநிதி. வை.கோ. தரப்பிலிருந்தும் மன்னிப்போ, சமரச - சமாதான முயற்சியோ வரவில்லை. நொந்துபோன கருணாநிதி, "தொண்டர்களின் கண்ணீர் தன்மனதைக் கரைத்துவிட்டதாகக்" கூறி அரசியல் விலகல் முடிவை மாற்றிக் கொள்வதாக அறிவித்தார். 70-ல் ஈ.வெ.கி. சம்பத், தலைமையை எதிர்த்து உண்ணாவிரதம் இருந்தபோது அண்ணாவும் இப்படித்தான் செய்தார். "என்னையே பலி கொடுக்கப் போகிறேன்; அரசியல் வாழ்க்கையை கைவிடப் போகிறேன்" என்று மிரட்டித்தான் எல்லோரையும் பணியவைத்தார். அதற்குப்பின் தற்காலிகமாக திருவொற்றியூர் காவலர் கூட்டத்திலே சம்பத் கோஷ்டியினர் சமாதானமானார்கள். அண்ணாவின் தம்பிக்கு தற்காலிக வெற்றி கூட கிடைக்கவில்லை.

கருணாநிதியின் விலகல் நாடகத்திற்குப் பின் வை.கோ. கோஷ்டி புதுத் தெம்போடு முனைப்பாக செயல்பாடுகளில் குதித்தது. வை.கோ. நீதிகேட்டு கண்டன அறிக்கை வெளியிட்டார். தனக்காக தீக்கிரையான தண்டபாணி, 'இடிமழை' உதயனுக்கு நடந்த இரங்கல் கூட்டங்களில் தலைமைக்கு எதிராக முழங்கினார். பொன். முத்துராமலிங்கம், செஞ்சி ராமச்சந்திரன், கோவை கண்ணப்பன், நெல்லை லக்குமணன், திருச்சி எம்.செல்வராஜ் முதலான 8 மாவட்ட செயலாளர்கள் வை.கோ.விற்கு ஆதரவாக அறிக்கை வெளியிட்டனர். பொதுக்குழுவைக் கூட்டி முடிவெடுத்து நீதி வழங்கும்படி தலைமையிடம் கோருகிறது வை.கோ. கோஷ்டி.

கருணாநிதிக்கும் கோபால்சாமிக்கும் இடையே அறிக்கைப் போர் நடந்து கொண்டிருக்கிற அதேசமயம் இரு கோஷ்டியினரும் பொதுக்குழு உறுப்பினர்கள், தொண்டர்களிடையே ஆதரவு கோரி கையெழுத்து வேட்டையையும், ரகசிய கூட்டங்களையும், பொதுக்கூட்டங்களையும் நடத்தி வருகின்றனர். பொதுக்குழுவில் பலப்பரீட்சை செய்வது கருணாநிதி

**'ராஜதந்திரி' கருணாநிதிக்கு மாறன் ஆலோசகராம்; குடும்ப அரசியல்**





படிப்பகம்

www.padippakam.com

தியின் தனி ஆளுமை, கௌரவத்திற்கு இழுக்கல்லவா? இதனால் பொதுக்குழு கூட்ட அவசியமில்லை என மறுத்துவருகிறார். இதுவரை அவசியம் கருதித்தான் பொதுக்குழு கூட்டப்பட்டதா என எதிர் கேள்வி போடுகிறது, வை.கோ. கோஷ்டி.

காங்கிரசு, ஜெயா, சோ மற்றும் பார்ப்பன கும்பல் வை.கோபால்சாமியை கட்சியைவிட்டு வெளியேற்றுவதில் கருணாநிதியை ஆதரித்து நிற்கின்றன. தி.க., பா.ம.க., தமிழின அமைப்புகள், போலிக் கம்யூனிஸ்டுகள் கருணாநிதி காங்கிரசின் சதிக்குப் பலியானதாகவும் கூட்டு சேர முயல்வதாகவும் கூறி எதிர்த்தும் சில, வை.கோ.-வை நேரடியாக ஆதரித்தும் வருகின்றன. — இவை கட்சிக்கு வெளியிலிருக்கும் நெருக்கடிகள். மாறன், ஸ்டாலின், அழகிரி, தமிழரசு முதலான கருணாநிதி குடும்பத்தினர் மற்றும் கருணாநிதியின் 'ஜால்ராக்கள்', வை.கோ. கோஷ்டியையே முற்றிலும் வெளியேற்ற சதிவேலைகளில், சதியாலோசனைகளில் ஈடுபடுகின்றனர். தொண்டர்களில் பெரும்பான்மையோர் தீவிரமாக வை.கோ.-வை ஆதரித்தோ, நடுநிலைமையாக இருந்தோ வை.கோ.-வை வெளியேற்றும் முயற்சியை எதிர்க்கின்றனர். — இவை கட்சிக்குள்ளிருக்கும் நெருக்கடிகள். இந்நிலையில் கருணாநிதி என்ன முடிவெடுக்கப் போகிறார் என்று மாற்று கட்சியினர் எல்லோரும் எதிர்பார்த்து காத்திருக்கிறார்கள். நம்புங்கள், தி.மு.க. ஜனநாயக அமைப்புதான்; ஆனால், கருணாநிதிக்கு மட்டுமே முடிவெடுக்கும் அதிகாரம் உண்டு! அவருக்கு தனி அதிகார போதை ஊட்டியவர்கள்; பணிந்து 'சலாம்' போட்டவர்கள்தான் இன்று தங்கள் சுயநலத்திற்காக கலகம் செய்கிறார்கள்.

குடும்பத்தினரின் நிர்பந்தம், தி.மு.க.-வை தனது வாரிசே ஆள வேண்டும் என்கிற கருணாநிதியின் இயல்பான ரத்தபாசம், தனக்கே உள்ள பொறுக்கி - பிழைப்புவாத அரசியலின் அடிப்படை காரணமாகவே கருணாநிதியால் கொள்கை, தகுதி, செயல் துடிப்பு, திறமையுள்ள ஒருவருக்கு கட்சித் தலைமையை விட்டுக்கொடுக்க முடியவில்லை. ஆனால், பலர் வை.கோ. உட்பட ''மாறன், அழகிரி, ஸ்டாலின் முதலான சதிகாரர்களின் பிடியில் சிக்கியதால்தான் இப்படி செயல்படுகிறார்'' என்று கூறி கருணாநிதியை சொக்கத் தங்கமாக்க முயற்சிக்கிறார்கள். கலைஞரா - வை.கோ.வா என்று போட்டியிருப்பின் என்ன நிலைப்பாடு, ஸ்டாலினா - வை.கோ.வா என்று கேட்டால் யார் பக்கம் என்றெல்லாம் பட்டிமன்றம், போட்டி மும்முரமாக நடக்கிறது. இந்த அளவிற்கு கோஷ்டி பூசல் முற்றியதற்கு கருணாநிதிதான் விதையும் உரமும் இட்டவர். விதை ஒன்று விதைக்க சுரை ஒன்று முளைத்த கதையாகிவிட்டது.

நேரு, இந்திராபோல் பிரச்சினையே இல்லாமல் கட்சியின் கோடிக்கணக்கான சொத்துக்கும், கோடிக்கணக்கான ரூபாய் சம்பாதிக்கும் வாய்ப்புள்ள பதவிக்கும் தனது வாரிசையே சொந்தமாக்கிட வேண்



**ராஜராஜ சோழனும் மூன்று இளவரசர்களும்; 'பட்டாபிஷேகம்' நடத்த முடியவில்லை.**

டும் என தொடக்கத்தில் இருந்தே துடித்தவர்தான், கருணாநிதி. இன்றுவரை அவருக்கு கிடைத்தது தோல்வியே! கட்சியில் எம்.ஜி.ஆர். வளர்ந்தபோது மு.க.முத்துவை அவருக்கு நிகராக நிறுத்தி வளர்த்தார். இறுதியில் எம்.ஜி.ஆரும் வெளியேறி ஆட்சியையே பிடித்தார்; முத்துவோ முரண்பட்டு, தந்தையை எதிர்த்து அரசியல் நடத்துகிறார். மு.க.அழகிரிக்கும் இத்தகைய முயற்சி நடந்தது. ஆனால், அழகிரியை மாநிலத் தலைமையளவிற்கு உயர்த்த முடியவில்லை. அடுத்த முயற்சி ஸ்டாலினை வைத்து நடக்கிறது. தொண்டர்களோ வை.கோ.-வைத்தான் அடுத்த தலைமையாகப் பார்க்கிறார்கள்.

இவர்கள் மட்டுமல்ல மாறன், மு.க.தமிழரசு எல்லோரும் கட்சிக்குள்ளோ தலைமைக்கோ வலிந்து கருணாநிதியால் திணிக்கப்பட்டதால்தான் கட்சி போராட்டங்களில் அடிபட்டு, தொண்டர்களின் துயரங்களில் பங்கெடுக்காதவர்கள் என்பதால்தான் புறக்கணிக்கப்பட்டும் அந்நியப்பட்டும் நிற்கிறார்கள். 'எமர்ஜன்சி' காலத்தில் ஸ்டாலின் சிறைக்குச் சென்றது ஒரு விபத்து. இதையே மூலதனமாக வைத்து தலைமைப் பதவியில் திணித்தும், நியாயப்படுத்தி பேசியும் பார்த்தார், கருணாநிதி. தன்னுடைய அனுபவம் மற்றும் எம்.ஜி.ஆரால் கிடைத்த அனுபவத்திலிருந்து நடிகர்கள், கலைஞர்கள், பேச்சாளர்கள் எழுத்தாளர்கள் என்றாலே கட்சிக்குள் 'அளந்து வைத்த' கருணாநிதி, ஸ்டாலினை நடிப்பு, இலக்கியம், பேச்சுத்துறையில் நுழைத்து பெயரெடுக்க அனுமதித்தார். ஆனால் எதுவும் எடுபடவில்லை.

தனி ஈழம் மற்றும் விடுதலைப் புலிகள் விவகாரத்தில் கருணாநிதியின் துரோகம், சந்தர்ப்பவாதத்தால் இருந்த வெற்றிடத்தை, கோபால்சாமி தனது அதிரடி பேச்சுக்களாலும், அதிரடி நடவடிக்கைகளாலும் நிரப்பியதால் தொண்டர்களிடையே தனித்த செல்வாக்கைப் பெற்றார்; தொண்டர்களுக்கு வை.கோ. நம்பிக்கை நட்சத்திரமாக தெரிகிறார். தமிழகம் முழுவதும் அணிகளிடையே ஆதரவும் கூட்டமும் பெருகுகிறது. ஒரு கட்டத்தில் ஸ்டாலினையும் வை.கோ.-வையும் இணைத்து பொதுக்கூட்டங்களடங்கிய சுற்றுப்பயணம் மேற்கொள்ளச் செய்து வெள்ளோட்டமும் பார்க்கப்பட்டது. ஸ்டாலினுக்கு பட்டாபிஷேகம் நடக்க வேண்டுமானால் வை.கோ. 'வனவாசம்' போக வேண்டும் என்பதை உணர்ந்த கருணாநிதியும் அவரது குடும்பத்தினரும் வை.கோ.-வை ஓரங்கட்டுவதில் தீவிரம் காட்டினர். இருந்தும் பலனில்லாததால் விரக்தியில் பிதற்றியதுதான் கருணாநிதியின் - உளவுத்துறை தகவல்!

தனது எதேச்சதிகார, சந்தர்ப்பவாத, பிழைப்புவாத குணநலன்களால் - நடவடிக்கைகளால் அணிகளிடையே தனிமைப்பட்டுவந்த கருணாநிதி, ஸ்டாலினை வாரிசாக முன்னிறுத்தியதற்குப்பின் மிக அதிகமாகவே தனிமைப்பட ஆரம்பித்தார். இப்படி கருணாநிதியால் பாதிக்கப்பட்ட பெருந்தலைவர்கள் — ஆதாயமிழந்தவர்கள், பதவியிழந்தவர்கள், 'சீட்' கிடைக்காதவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், அவமானப்படுத்தப்பட்டவர்கள் — எல்லாம் இதுவரை உள்ளுக்குள் குமுறிக் கொண்டிருந்தார்கள்; இன்று தக்க வாய்ப்பு அமையவே வை.கோ. பின்னால் அணி திரண்டிருக்கிறார்கள். மற்றபடி 'கொள்கை'ப் பற்றோ, தமிழின உணர்வோ கொண்டவர்களல்ல. அதுவும் பிழைப்புவாத - சந்தர்ப்பவாத சுயநலக்கூட்டமே. தி.மு.க.வின் கட்சித் தலைமையே இத்தகையோரின் கூடாரமாகி விட்டதோடு அதையே தனது அரசியல் பாரம்பரியமாக கொண்டிருக்கையில் 'கொள்கை'ப் பூர்வமானவர்கள் எப்படி வருவார்கள்? கள்ளிச் செடியில் ரோஜாவா பூக்கும்?

அண்மையில் நடந்த உட்கட்சித் தேர்தலிலேயே கொலைகள் எல்லாம் விழுந்து தி.மு.க.வின் ஜனநாயக, கட்டுப்பாடு



படிப்பகம்

www.padippakam.com

உணர்வெல்லாம் உலகுக்கு தெரிந்ததே?! நாஞ்சில் மனோகரன் விவகாரத்திற்குப் பின்னே நடந்த கோஷ்டி மோதல்களிலும் நிரூபணமானது. கோவில்பட்டியில் நடந்த மோதலில் வை.கோ. கோஷ்டியினரால் எதிர் கோஷ்டியைச் சேர்ந்த ஜெயச்சந்திரன் வெட்டிக் கொல்லப்பட்டார். மதுரைக்கு வந்த கருணாநிதியை வரவேற்பதில் மு.க. அழகிரி கோஷ்டியும் பொன்.முத்துராம லிங்கம் கோஷ்டியும் மோதிக் கொண்டதில் இரண்டு முறையும் செருப்பு, வேட்டி, புடவை எல்லாம் பறந்தன. ரத்தக் காயங்களால் வீரத்தழும்புகள் பெற்றார்கள், கழகக் கண்மணிகள். திருமண விழாக்களிலும், பிறந்தநாள் விழாக்களிலும், இழவு வீட்டிலும் இரு கோஷ்டியினரும் அநாகரிகமாக பேசிக்கொண்டதும், நடந்துகொண்டதும் ஊர்நாறியது. கருணாநிதியால் களையெடுக்கப்பட்ட வை.கோ., பொன்.முத்துராம லிங்கம் கோஷ்டியினர் உள்ள நெல்லை, மதுரை மாவட்டங்களே முக்கிய யுத்தகளமாகி உள்ளன.

பெரும்பான்மை தொண்டர்களால் முன்னிறுத்தப்படும் வை.கோ.வும் அண்ணா, எம்.ஜி.ஆர்., கருணாநிதி போன்றே சந்தர்ப்பவாத, பிழைப்புவாத, கவர்ச்சிவாத தன்மை கொண்ட நபரே. அவர் சொல்லிக் கொள்கிற 'கொள்கை'களான தமிழினம், தமிழ்மொழி, தனி ஈழம் எல்லாம் வெறும் முகமூடிகள்தான். இவற்றிற்காக வை.கோ. அதிரடி - சாகச நடவடிக்கைகள்தான் செய்தாரே ஒழிய ஆக்கப்பூர்வ பங்களிப்பு இல்லை; தெளிந்த - ஆழ்ந்த அறிவும் இல்லை.

கட்சி தலைமையின் கட்டுப்பாடு, அரசின் தாக்குதலைப் பொருத்து மேற்படி 'கொள்கை' முழக்கங்களைக்கூட அடக்கி வாசித்தவர்தான் வை.கோ. இதுதான் சந்தர்ப்பவாதத்திற்கே அடிப்படை. புலிகளை ஆதரிப்பதை கருணாநிதி கட்டுப்படுத்தும் போது குறிப்பாக ராஜீவ் கொலைக்குப் பின்னும், ரவிச்சந்திரனின் (கோபால்சாமியின் தம்பி) கைதுக்குப் பின்னும் இருந்த நிலைமையை சாதகமாக்கிக் கொண்டு கருணாநிதி, அறவே ஓரங்கட்டினாரே அப்பொழுதெல்லாம் கோபால்சாமி எதிர்த்து 'கொள்கை' முழக்கமிடவில்லையே ஏன்? ஈழப் பிரச்சினையில் பல்டியடித்த கருணாநிதியை எதிர்க்காமல் அன்றும் இன்றும் வாய் மூடித்தானே இருக்கிறார்? பார்ப்பன ஆதிக்கம், ஹிந்தி ஆதிக்கம் ஜெயா மற்றும் ஆர்.எஸ்.எஸ். பாசிஸ்டுகளால் வீதிக்கு வந்து தலைவிரித்தாடுகிற பொழுது கருணாநிதி தோல்வியடைந்த ஆத்திரத்தில் வீட்டுக்குள் முடங்கி வேடிக்கைப் பார்த்ததை வை.கோ பால்சாமி எதிர்க்கத் துணியவில்லை. தலைமையுடன் எல்லாவற்றிலும் சமரசம் செய்து கொண்டது, ராஜதந்திரமாகவும் ஆக முடியாது. இத்தகைய சுயநலமிக்க 'ராஜதந்திரத்தை'த்தான் 24 ஆண்டு காலமாக கருணாநிதி கடைபிடித்து தி.மு.க.விற்கு தக்க சன்மானத்தைப் பெற்றுக் கொடுத்துள்ளார்.

தி.மு.க. சொல்லிக்கொள்கிற மாநில



தீக்குளித்தவரை நலம் விசாரிக்கும் வை.கோ.

**தொண்டர்களுக்கு நம்பிக்கை நட்சத்திரமாகத் தெரியும் வை.கோ, தி.மு.க.விற்கு மாற்று பாதையை தந்துவிட முடியாது**

சுயாட்சியாகட்டும், ஹிந்தி எதிர்ப்பாகட்டும், பார்ப்பன எதிர்ப்பாகட்டும், தமிழ் மொழிக்கு முன்னுரிமை - ஆட்சிமொழி உரிமையாகட்டும், ஈழத்திற்கு தனிநாடு கோரிக்கையாகட்டும் எல்லாம் என்ன ஆகியது? கழுதை தேய்ந்து கட்டெறும்பாகி அதுவும் தேய்ந்து காணாமல் போன கதை தானே?! இவையெல்லாம் ஆட்சியைப் பிடிப்பதற்கு, தக்கவைப்பதற்கு மட்டுமே என்பதை தி.மு.க. நடைமுறையில் காட்டி நிற்கிறது. ஆங்கில மழலையர் பள்ளிகளை புற்றீசலாக தமிழகத்தில் படரவிட்டது, கருணாநிதி ஆட்சி. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் அமைக்க எம்.ஜி.ஆருக்கும், அதன் அறிவியல் - ஆராய்ச்சி பணிகளுக்கு பணம் ஒதுக்க ஜெயலலிதாவிற்கும் விட்டுக்கொடுத்த பெருந்தன்மையுள்ள தமிழ்ப்பற்றாளர், கருணாநிதி! பார்ப்பன எதிர்ப்பு, ஹிந்தி எதிர்ப்பு ஆட்சியில் இல்லாதபோது அரிப்புக்கு சொரிந்து கொள்வதற்கு மட்டுமே! மாநில சுயாட்சி, ஈழம் - தனிநாடு கோரிக்கையெல்லாம் 'தேசிய லட்சியத்திற்காக' கைவிடப்பட்டுவிட்டது. கடமை, கட்டுப்பாடு, கண்ணியம் கூட வேட்டியவிழ்த்து அடித்துக்கொண்டு காற்றில் பறக்க விட்டுவிட்டார்கள். மிச்சம் என்ன இருக்கிறது?

இவற்றிற்கெல்லாம் வை.கோ. என்ன மாற்று சொல்லிவிட்டார்; வெறும் மேடை அதிரும் உரைவீச்சைத் தவிர? ஏதாவது ஒன்றிலாவது கருணாநிதியை விமர்சித்திருக்கிறாரா? ''தனி ஈழம்தான் சரியானது'', ''ஒருமொழிக் கொள்கைதான் சரியானது'' என்று தி.மு.க.வை எதிர்த்து பகிரங்கமாக முழங்கினாரா? இன்னமும் தி.மு.க.வின் கொள்கை(?)தான் என் கொள்கை என்று சொல்லிக் கொண்டுள்ளார். ஆனால் இவற்றிற்கு நேர்முரணான கருத்துடைய தமிழின - தனிஈழ - விடுதலை புலி ஆதரவாளர்கள், அத்தகைய அமைப்பினர், பிரபஞ்சன் முதலான 'முற்போக்கு'வாதிகள் வை.கோ.வை தூக்கிப் பிடிக்கிறார்கள். முன்பு நெடுமாறன், அடுத்து ராமதாஸ், தற்போது வை.கோ! இப்படி யாராவது ஒருவரின் நிழலில் அண்டி சுகம் தேடுவதே இவர்களது பிழைப்பாகிவிட்டது!

துணிவுமிக்க செயல்வீரர், மொழி-இனப் பற்றுள்ளவர், உணர்ச்சிமிகு பேச்சாளர் என்கிற திறமை வை.கோ.விற்கு இருக்கலாம்; இவை மட்டுமே எந்தவிதத்திலும் தி.மு.க.விற்கு மாற்று தலைமையையோ, மாற்றுப் பாதையையோ தந்துவிட முடியாது. வை.கோ.வும் அவரது கோஷ்டியினரும் எதிர்பார்ப்பதுபோல் வெற்றியை உடனடியாக அறுவடை செய்துவிடவும் முடியாது. கருணாநிதிக்குப் பின் கட்சியை வேண்டுமானால் பிடிக்கலாம்; ஆட்சியை அவ்வளவு சுலபமாகப் பிடிக்க முடியாது. தேர்தல் வெற்றிக்கு கணிசமான பங்குள்ள கிராமத்து பாமர மக்களும் குறிப்பாக பெண்களும் எம்.ஜி.ஆரால் கவரப்பட்டதால், அவர் வெற்றியீட்டினார். கருணாநிதியின் இலக்கிய, பேச்சுத் திறனுக்கு அக்கவர்ச்சி இல்லாததால்தான் தோற்றார். வை.கோ பால்சாமியை அம்மக்களுக்கு எத்தனை பேருக்கு தெரியும்?

இதனால்தான் வை.கோ-வும் கருணாநிதியும் உடனடி முடிவு - நடவடிக்கை எடுக்கத் தயங்குகின்றனர். அண்மை இடைத் தேர்தலில் தி.மு.க.விற்கு எண்ணிக்கையளவில் ஓட்டு அதிகம் கிடைத்து வெற்றிப்படிக்கு அருகாமையில் நிற்கிறது என பத்திரிகைகள் கருத்துகூறிக் கொண்டிருக்கிற நிலையில் கருணாநிதியை விட்டுப் பிரிந்தாலும் சரி, வை.கோ. தலைமையிலான செயல் துடிப்புள்ளவர்களை இழந்தாலும் சரி தி.மு.க.விற்கு ஆபத்துதான் என்பதை இருவருமே நன்கு உணர்ந்து வைத்திருக்கிறார்கள். ஆனால் சுயநலமும் ஆசையும் நீங்கிவிடாது; வாரிசுப் போர் முற்றவே செய்யும். வெகுநாள் யோசித்து, பின்னரே கட்சிக் கட்டுப்பாடுகளை மீறியதற்காக ஏன் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கக்கூடாது எனக் கேட்டு வை.கோ.விற்கு கடிதம் அனுப்பியுள்ளார் கருணாநிதி.

''ஒரு உறையில் இரண்டு போர்வாள் இருக்க முடியாது'' என்பதற்கிணங்க வை.கோ. சமாதானமாக போய்விட்டாலும் சரி, ''தனித்தனி உறையில் இரண்டு போர் வாள்கள் இருக்கலாம்'' என்பதற்கிணங்க வை.கோ. கோஷ்டி 'வெளியேற்றப் பட்டோ, தனியாகப் பிரிந்தோ போனாலும் சரி இதனால் தமிழக மக்களுக்கோ, தி.மு.க. தொண்டர்களுக்கோ எவ்வித பயனுமில்லை.

● ராசு

படிப்பகம்

www.padippakam.com

## வட மாநிலத் தேர்தல்:

# கறுப்புப் பணத் திருவிழா

**அனைவருக்கும் வாக்குரிமை என்ற மூடுதிரையின் பின்னே, கறுப்புப்பண ஜனநாயகம் நாலு கால் பாய்ச்சலில் முன்னேறுகிறது.**

டெல்லி, உ.பி., ம.பி., ராஜஸ்தான், இமாசலப் பிரதேசம் ஆகிய இந்தி பேசும் வட மாநிலங்களிலும் வடகிழக்கு மாநிலமான மிஜோரத்திலும் வரும் நவம்பர் மாதத்தில் நடைபெறவுள்ள இடைத்தேர்தல் திருவிழா இப்போதே களைகட்டத் தொடங்கிவிட்டது. மக்களை ஏய்ப்பதிலும் புளுகுவதிலும் யார் திறமைசாலி என்பதற்கான போட்டியில் எல்லா ஓட்டுப் கட்சிகளும் தீவிரமாக இறங்கிவிட்டன. ஓட்டு வேட்டைக்கு முன்பாகவே பெரு முதலாளிகளிடம் நோட்டு வேட்டையாடுவதில் எல்லா கட்சிகளுமே மும்முரமாக உள்ளன.


பெருமுதலாளிகளிடம் வெளிப்படையாகவே தேர்தல் நிதி கோரி காங்கிரசுக் கட்சி பத்திரிகைகளில் அறிக்கை விடுக்கிறது. அர்ஷத் மேத்தா சூட்கேசில் வைத்து ஒரு கோடி ரூபாயை நரசிம்மராவுக்குக் கொடுத்த விவகாரம் அம்பலமான பிறகு, "சூட்கேஸ் வேண்டாம்; காசோலையாக கொடுங்கள்!" என்கிறது பாரதீய ஜனதா. இவ்விரு பெரிய கட்சிகளுக்கும் முதலாளிகளிடம் நன்கொடை திரட்டுவதற்கென்றே சில வசூல் மன்னர்கள் இருக்கிறார்கள். காங்கிரசில் சரத்பவார், வி.என். காட்கில், சதீஷ் சர்மா, டைட்லர், சுக்லா, ஜாபர் ஷெரீப், முரளிதியோரா, சுக்ராம், மூப்பனார் முதலானோர் பெருமுதலாளிகளிடம் நோட்டு வேட்டைக்குக் கிளம்பியிருக்கிறார்கள். பாரதீய ஜனதாவில் பிரமோத் மகஜன், மதன்லால் குரானா, கேதார்நாத் சாஹ்னி, கல்யாண்சிங் முதலானோர் நோட்டு வேட்டைக்கு நியமிக்கப்பட்டுள்ளார்கள். ஜனதா தளத்தில் ராம்விலாஸ் பஸ்வான், பொம்மை முதலானோர் வசூல் வேட்டையைக் கவனித்துக் கொள்கின்றனர். பணபலத்தைவிட ஊழியர் பலம்தான் எங்களுக்கு முக்கியம் என்று கூறும் போலிக் கம்யூனிஸ்டுகள் கூட, இப்போது பெருமுதலாளிகளிடம் வசூல் வேட்டைக்குக் கிளம்பியுள்ளனர்.

தற்போதைய இடைத்தேர்தல் செலவுக்குக்காக ரூ 55 கோடி வசூலிப்பதென காங்கிரசுக் கட்சி திட்டமிட்டுள்ளது. பாரதீய ஜனதா கட்சி ரூ 40 கோடி என இலக்கு நிர்ணயித்துள்ளது. ஜனதாதள தேசிய முன்னணிக் கட்சிகள் ரூ 10 கோடியும், போலிக் கம்யூனிஸ்டுகள் 5 கோடியும் வசூலிக்கத் திட்ட மிட்டுள்ளனர்.

சரி; இவ்வளவு பணமும் இவர்களுக்கு எங்கிருந்து கிடைக்கிறது? கட்சி ஊழியர்களிடமும் பொதுமக்களிடமும் உண்டியல் ஏந்தி நன்கொடை திரட்டினால் கூட அதிகப்பட்சம் 10 சதவிகிதத்தை தாண்ட முடியாது. தரகுப் பெருமுதலாளிகள், வெளிநாட்டில் வாழும் இந்திய முதலாளிகள், நிலப்பிரபுக்கள், கந்துவட்டி லேவாதேவிக்காரர்கள், வர்த்தக சூதாடிகளிடமிருந்துதான் ஓட்டுக் கட்சிகள் 90% நிதியைத் திரட்டுகின்றன.

பெருமுதலாளிகளும் நிலப் பிரபுக்களும் தங்களது நன்கொடையைக் காசோலையாகக் கொடுத்ததாக வரலாறே கிடையாது. எல்லாமே சூட்கேஸ் பட்டுவாடாக்கள்தான். அத்தனையும் கணக்கில் வராத கருப்புப் பணம். தேர்தல் வந்துவிட்டால் பெருமுதலாளிகள் தாங்கள் பதுக்கி வைத்துள்ள கருப்புப் பணத்தை வாரியிறைத்து தமக்குச் சாதகமான கட்சியை அல்லது வேட்பாளரை ஏலத்தில் எடுக்கிறார்கள். தமக்கு எதிரான கட்சியைத் தோற்கடிக்கிறார்கள்.

"பெருமுதலாளிகளிடம் தேர்தல் நிதி பெறுவதில் தவறேதுமில்லை. உலகெங்கும் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு முறை நிலவும் நாடுகளில் இது ஏற்றுக் கொள்ளப் பட்டதுதான்" 1988-லேயே பாசிச ராஜீவ் இதை நியாயப்படுத்தினார். தரகுப் பெருமுதலாளிகளான அம்பானி - இந்துஜா கும்பல் ஏலத்தில் எடுத்த சந்திரசேகரின் ஆட்சி, சர்வதேச கிரிமினல் - மாஃபியாக்களிடம் இருந்துகூட பகிரங்கமாக "நன்கொடை" பெற்றுக் கொண்டு இந்திய அரசியலில் ஒரு புதிய பாரம்பரியத்தையே உருவாக்கியது. ஆட்சியாளர்களின் கள்ளக்குழந்தையான கருப்புப் பணம் இந்திய ஓட்டுக்கட்சி அரசியலின் பிரிக்க முடியாத அங்கமாகிவிட்டது. இன்றைய உத்தேச மதிப்பீட்டின்படி ஏறத்தாழ 100 கோடி ரூபாய் அளவுக்கு கருப்புப் பணம் தற்போதைய தேர்தல் திருவிழாவில் வாரியிறைக்கப்படும் என்று முதலாளித்துவ மூதறிஞர்களே ஒப்புக் கொள்கின்றனர்.



இப்படி கோடிக்கணக்கில் வாரியிறைக்கப்படும் பணம், விவசாயம் - தொழில் போன்ற எந்தவொரு ஆக்கபூர்வ திட்டத்திற்கும் செலவிடப்படுவதில்லை. தீபாவளி பட்டாசு கொளுத்தி கரியாக்குவதைப் போல, விளம்பரம், சுவரொட்டி, கொடி, "வீடியோ" சினிமா, வாகனச் செலவு, குண்டர்களுக்குத் தீனி என்று அழிவு வேலைக்காகவே நாசமாக்கப்படுகிறது.

இன்றைய நிலையில் ஒரு பலவண்ண சுவரொட்டி தயாரிக்க ஆகும் செலவு 5 ரூபாய். ஒரு வேட்பாளருக்கு குறைந்த பட்சம் 10,000 சுவரொட்டிகளாவது தேவை. பிளாஸ்டிக் கொடிகள் கட்டுவதென்றால் அதற்கென ரூ 25,000 செலவிட வேண்டும். உள்ளூர் நாளிதழ்களில் ஒருபக்க அளவுக்கு விளம்பரம் செய்ய 2 முதல் 5 லட்சம் ரூபாய் தேவை. அரை மணி நேரத்திற்கு ஓடும் வீடியோ பிரச்சார சினிமாவை தொகுதி முழுவதும் திரையிட ரூ 2 லட்சம் செலவிட வேண்டும். வேட்பாளரின் பிரச்சாரத்துக்கான கார், ஜீப், ஆட்டோ முதலானவற்றின் வாடகை மற்றும் பெட்ரோல் செலவுக்காக 2 லட்ச ரூபாய் தேவை. முக்கிய புள்ளிகள் என்றால் 5 லட்சம் வரை செலவாகும்.

வேட்பாளரின் 20 அடி "கட்-அவுட்" தயாரிக்க ரூ 30,000 செலவாகிறது. ஒரு தொகுதிக்கு 5 "கட் அவுட்"கள் என்றால் கூட ஒன்றரை லட்ச ரூபாய் தேவை. இதுதவிர பேனர்கள், சுவரெழுத்து விளம்பரங்கள் செய்ய ரூ 2 லட்சம் ஒதுக்க வேண்டும். இன்னும் வாக்காளர்களைக் கவர ஸ்டிக்கர்கள், பொட்டுகள், சாவிக் கொத்துகள், பேனாக்கள், தொப்பிகள், பிரசுரம், பாடல் கேசட் முதலானவற்றுக்காக மேலும் 2 லட்ச ரூபாய் செலவிட வேண்டும்.


தேர்தல் வேலை செய்ய கூலிக்கு அமர்த்திக் கொண்டுள்ளவர்களுக்கு ஒரு நாளைக்கு ரூ. 25 தரப்படுகிறது. ஒரு வேட்பாளருக்கு 200 பேர் விதம் 20 நாட்களுக்கு வேலை செய்தால் ஒரு லட்ச ரூபாய் தேவை. இதுதவிர குண்டர்கள் - அடியாட்களுக்கு இன்னுமொரு லட்சம் செலவிட வேண்டும். சுருக்கமாகச் சொன்னால் ஒரு வேட்பாளர் இத்தேர்தலில் குறைந்தபட்சம் 15 லட்ச ரூபாய் வரை செலவிட வேண்டும்.

ஆனால், ஒரு சட்டமன்றத் தொகுதியில் போட்டியிடும் வேட்பாளர் ரூ 50,000 தான் செலவிட வேண்டும் என்று தேர்தல்



படிப்பகம்

www.padippakam.com




கமிஷன் வரையறுத்துள்ளது. இந்த வரம்பை மீறியதாக நிரூபிக்கப்பட்டால் வேட்பாளரின் தேர்தல் வெற்றி செல்லாது. இதை அறிந்திருந்த போதிலும் வரம்புக்குட்பட்டு செலவு செய்ததாக கூசாமல் அவர்கள் பொய்க்கணக்குக் காட்டி ஏய்க்கின்றனர்.

காங்கிரசும், பாரதீய ஜனதாவும் கோடிக்கணக்கில் செலவிட்டு இப்போது வீடியோ பிரச்சார யுத்தத்தில் இறங்கியுள்ளன. பாரதீய ஜனதாவின் புரவலர்களில் ஒருவரான ஜே.கே.ஜெயின் 150 வீடியோ வாகனங்களையும் 75 வீடியோ ரதங்களையும் வைத்துள்ளார். அத்தனையும் தற்போதைய இடைத்தேர்தலில் பயன்படுத்தப்பட உள்ளது. தேர்தல் பிரச்சாரத்துககாக மூன்று வகையான வீடியோ நிகழ்ச்சிகளை பாரதீய ஜனதா தயாரித்துள்ளது. இதற்குப் போட்டியாக, பிரபல இந்தித் திரைப்படப் பாடல் காட்சிகளுடன் தேர்தல் பிரச்சாரம் கொண்டதாக் காங்கிரசுக் கட்சி தயாரித்துள்ளது. இதுதவிர செயற்கைக் கோள் உதவியுடன் தனி சேனல் வழியே தொலைக்காட்சி மூலம் பிரச்சாரம் செய்யவும் இக்கட்சிகள் தீர்மானித்துள்ளன. இவ்விரு கட்சிகளும் அதிநவீன உத்திகளுடன் தேர்தல் பிரச்சாரம் செய்யும்போது, அதற்கு ஈடு கொடுக்க முடியாமல் ஜனதாதள, போலிக்கம்யூனிஸ்ட் கட்சிகள் பீதியடைந்து தடுமாறி நிற்கின்றன.

அரசியலை ஆட்டிப் படைக்குமளவுக்கு கருப்புப் பணம் முக்கிய பங்காற்றும் போது, இந்திய அரசியல் சட்டம் அதை அங்கீகரிக்கவே செய்கிறது. பெருமுதலாளிகள், அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிப்பதைப் பற்றி 1956-ம் ஆண்டின் அரசியல் சட்டத்தில் எதுவும் குறிப்பிடப்படவில்லை. பின்னர் 1960-ல் ரூ 25,000 வரை நன்கொடை அளிக்கலாம் என கம்பெனிகள் சட்டத்தில் புதிய விதி சேர்க்கப்பட்டது. அதன்பிறகு 1969-ல் முதலாளிகள் அரசியல் கட்சிகளுக்கு நன்கொடை அளிக்கத் தடைவிதிக்கப்பட்டது. பாசிச ராஜீவ் ஆட்சிக்கு வந்த பிறகு 1985-ல் முதலாளிகள் தமது லாபத்தில் 5% வரை நன்கொடை தரலாம் என்று சட்டபூர்வமாகவே அங்கீகரிக்கப்பட்டது. "வரையறுக்கப்பட்ட விதிகளுக்கு உட்பட்ட பெருமுதலாளித்துவ நிறுவனங்கள், ஜனநாயகத்தில் தமக்குரிய பங்கை ஆற்ற சட்டபூர்வ உரிமை அளிப்பது" என்று ஆட்சியாளர்களால் இது நியாயப்படுத்தப்பட்டது.

போலிக் கம்யூனிஸ்டுகளும் போலிப் புரட்சியாளர்களும் நாடாளுமன்ற ஜனநாயகத்தை புரட்சிக்கான மேடையாகப் பயன்படுத்தப் போவதாகப் பிதற்றிக் கொண்டு திரிகிறார்கள். ஆனால் இந்திய நாடாளுமன்ற ஜனநாயகமோ, கருப்புப் பண மூட்டைகளுக்கு அடியில் சிக்கி மூர்ச்சையடைந்து கிடக்கிறது.

● குமார்.

### பாழாகும் காகிதம்

ஒரு வேட்பாளர் 3 போஸ்டர், 6 வகை துண்டுப் பிரசுரம் ஆகியன அச்சிட குறைந்தபட்சம் 1 டன் (1000 கிலோ) காகிதம் தேவை. ஒரு தொகுதியில் 4 வேட்பாளர் போட்டியிட்டால் 4 டன் காகிதம் செலவாகும். தற்போது தேர்தல் நடைபெறும் 1135 தொகுதிகளுக்கு X 4 டன் = 4540 டன்கள்; ஒரு டன் காகிதத்தின் விலை ரூ 30,000 எனில் 4540 டன்களுக்கு = ரூ. 13 கோடியே 62 லட்ச ரூபாய் பாழ்.

ஒரு நோட்டுப் புத்தகத்தின் விலை ரூ. 5 எனில், இத்தொகையைக் கொண்டு 27,24,000 நோட்டுப் புத்தகங்களைத் தயாரிக்க முடியும்.

### பாழாகும் பெட்ரோல்

தேர்தல் பிரச்சாரம், ஓட்டுப் போட வாக்காளர்களைத் திரட்டி வருவது முதலானவற்றுக்காக ஒரு வேட்பாளருக்கு 60 வாகனங்களாவது தேவை. உத்தேசமாக 4540 வேட்பாளர்கள் போடியிடுவதாகக் கொண்டால் 2,72,400 வாகனங்கள் பயன்படுத்தப்படும். ஒரு வாகனத்திற்கு நாளொன்றுக்கு 20 லிட்டர் பெட்ரோல் செலவாகிறது எனில் 20 நாட்களுக்கு 400 லிட்டர் செலவாகும். ஆக, 10,89,60,000 லிட்டர் பெட்ரோல் செலவாகும். ஒரு லிட்டர் பெட்ரோல் விலை ரூ. 16 எனில் மொத்தச் செலவு ரூ. 17 கோடியே 43 லட்சம்.

ஒரு ஆரம்பப் பள்ளியைக் கட்ட ரூ. 2 லட்சம் தேவையெனில், பாழாகும் இத்தொகையைக் கொண்டு 870 பள்ளிகளை துவக்க முடியும்.

### பாழாகும் துணி

ஒரு விளம்பர பேனருக்கு 2 மீட்டர் துணி தேவை. ஒரு வேட்பாளர் 50 பேனர்களைத் தயாரிக்கிறார் என்றால் 100 மீ. துணி செலவாகும். உத்தேசமாக 4540 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் என்றால் 4,54,000 மீ. துணி தேவை. ஒரு மீ. துணியின் விலை ரூ 10 எனில் மொத்தச் செலவு 45 லட்சத்து 40 ஆயிரம் ரூபாய்.

ஒரு மனிதனுக்கு ஓராண்டுக்கு சராசரியாக 40 மீ. துணி தேவையெனில் பாழாகும் இத்தொகையைக் கொண்டு 1,14,000 ஏழைகள் ஓராண்டுக்காவது மானத்துடன் வாழ முடியும்.

### இதர செலவுகளும் பாழாகும் பணமும்

பொதுக்கூட்டம், கொடிகள், தோரணங்கள், விளம்பரங்கள், வீடியோ பிரச்சாரம், கட்-அவுட்கள், தொண்டர்கள் - குண்டர்களுக்கான செலவுகள் முதலானவற்றைக் கணக்கிட்டால் குறைந்தது ரூ. 10 லட்சம் ஒரு வேட்பாளருக்குத் தேவை. 4540 வேட்பாளர்கள் போட்டியிடுகிறார்கள் எனில், 454 கோடி ரூபாய் பாழாகும்.

காகிதம், பெட்ரோல், துணி மற்றும் இதர செலவுகளைச் சேர்த்தால் 485 கோடி ரூபாய் ஆகிறது. இதுதவிர அரசு சார்பாக தேர்தல் செலவுகள், முக்கிய பிரமுகர்களுக்கு பாதுகாப்பு அளிப்பது முதலானவற்றையும் சேர்த்துக் கணக்கிட்டால் ஏறத்தாழ 1000 கோடி ரூபாய் பாழடிக்கப்படுகிறது.

படிப்பகம்

www.padippakam.com

# நிலநடுக்க ஆபத்து! அறிவியல் ஆதாரம்! அரசு மெத்தனம்!

**நிலநடுக்கத்தை கண்டறிவதற்கு விஞ்ஞானிகளுக்கு வசதி செய்து கொடுக்காத இந்திய அரசு நிலநடுக்க அபாயப் பகுதியில் வாழும் மக்களுக்கு பாதுகாப்பு வசதிகளை எங்கே செய்யப்போகிறது?**

மஹாராஷ்டிரத்தில் சுமார் 30,000 மக்களை பலிகொண்ட நிலநடுக்கத்தைத் தொடர்ந்து, இதை விஞ்ஞானிகள் முன்கூட்டியே எச்சரித்தும் அரசுதான் அலட்சியப்படுத்தியது; இல்லை, "விஞ்ஞானிகள் எச்சரிக்கவில்லை, பூகம்ப அபாயம் இல்லை என்றே கூறினர்" என இருவித கருத்துக்கள் வந்துள்ளன. தென்னிந்தியாவில் குறிப்பாக தமிழகத்தில் பூகம்ப அபாயம் இல்லை; உண்டு என்ற முரண்பட்ட தகவலை விஞ்ஞானிகள் பெயரிலேயே பத்திரிகைகள் வெளியிடுகின்றன. "பாவிகள், மனித உயிர்கள் விசயத்தில் இப்படி விளையாடுகிறார்களே" என்று ஆத்திரப்பட்டு விஞ்ஞானிகளையும் அரசையும் சாடுகிறவர்கள் உண்டு. "பூகம்பத்தை முன்கூட்டியே கண்டுபிடிக்க முடியுமா, முடியாதா" என்று உண்மை அறிய முயல்வோரும் பலர். "உலகம் அழியத் தொடங்கி விட்டது. நாம் என்ன செய்ய முடியும்" என்று நொந்து ஒதுங்கி கொள்வோரும் ஏராளம். சரி, இதில் என்னதான் பிரச்சினை? எது உண்மை? பூகம்ப பேரழிவிலிருந்து மனிதனை காப்பாற்ற வழியே இல்லையா?


நிலநடுக்கம் வருவதை சற்றே முன் கூட்டி உணரக்கூடிய பறவைகள், விலங்குகள் மூலமே மனிதர்கள் (குறிப்பாக ஜப்பானியர்களும், சீனர்களும்) கண்டறிந்து தம்மை பாதுகாத்துக் கொண்டனர். கி.மு. 132-ல் தைக்கோ எனும் சீன தத்துவஞானி, நிலநடுக்கத்தை கருவிகள் கொண்டு முன்னமே கண்டறிய முடிவதோடு அதனை அளக்கவும் முடியும் என்று கூறி முயற்சியெடுத்தார். ஆனால் இன்றைய விஞ்ஞான முன்னேற்றத்தால் எந்தெந்தப் பகுதிகள் பூகம்ப அபாயம் உள்ள பகுதிகள் என்பதைக் கண்டுணரவும் அதன் அளவை 'ரிக்டர்' எனும் அளவால் அளக்கவும் முடியும்.

பூமியின் மையப்பகுதி, இறுக்கமான திடக்கோளமாகவும் அதைச் சுற்றி திரவப் பொருளாகவும் முட்டையின் மஞ்சள் கருவைப் போல் அமைந்துள்ளது. அதற்கும் மேலே நகரக்கூடிய அரை நீர்ம நிலையில் உள்ள பொருள் முட்டையின் வெள்ளைக் கருவைப் போலுள்ளது. மேலே நகரக்கூடிய கற்பாறைகளாலான பல தட்டுகள் (லித்தோஸ்பியர் - Lithosphere - tectonic plates), முட்டையின் வெள்ளை ஓடு போல் இடம் பெற்றுள்ளது. இவற்றிற்கு மேலே வெகு அருகாமையில்தான் நிலப்பரப்பும் நீர்ப்பரப்பும் அமைந்துள்ளன.

பூமிக்கடியிலுள்ள தட்டுகள் ஒன்றோடு ஒன்று மோதுவதாலோ, எரிமலைப் பாறைகள் வெடிப்பதாலோ, பாறைகளும் மண் முகடுகளும் மேலெழும்புவதாலோ, நீண்ட - ஆழமான வெடிப்புகளினாலோ, பூமி இறுக்கம் அடைவதாலோ, அழுத்தம் கூடுவதாலோ பூகம்பமும் நிலநடுக்கமும் ஏற்படுகின்றன. செயற்கையாக மனிதன் உருவாக்கும் அணைகளாலும் சுரங்கங்களாலுமே அழுத்தம் அதிகமாகி நிலநடுக்கம் ஏற்படுகிறது என்ற வாதமும் உண்டு. இவற்றில் குறிப்பாக எதன் மூலம், எங்கு, எப்பொழுது நிலநடுக்கம் ஏற்படும் என்ற விவாதமும் ஆராய்ச்சியும் மட்டுமே தொடர்கின்றன.

இந்திய துணைகண்டத்தில் நடைபெறும் பூகம்பமும் நிலநடுக்கமும் பூமிக்கடியிலுள்ள நகரக்கூடிய தட்டுகள் ஒன்றோடு ஒன்று மோதுவதாலேயே நிகழ்கிறது என விஞ்ஞானிகள் பலர், ஆய்வுகளை முன்வைத்து ஆதாரங்களைக் காட்டுகிறார்கள். இதில் பாரதிதாசன் பல்கலைக் கழகத்தின் புவி அறிவியல் ஆய்வு துறைத் தலைவர் பேராசிரியர் சோ.ராமசாமி அவர்களின் குழு முன்வைக்கும் ஆதாரங்களை நாம் நேரடியாக கண்டுணரலாம். தென்னிந்தியா குறிப்பாக தமிழகம் உறுதியான பாறைகளைக் கொண்ட பகுதி, நிலநடுக்கம் ஏற்பட்வே வாய்ப்பில்லை என்ற பழைய கருத்தை, இவர்கள் செயற்கை கோள் பட உதவியுடன் கண்டுணர்ந்த ஆய்வுகள் - ஆதாரங்கள் மூலம் தகர்த்தெறிகின்றனர்.

பூமிக்கடியில் "லித்தோஸ்பியர்" பகுதியில் வடக்கு தெற்காகவும், வடகிழக்கு தென் மேற்காகவும், வடமேற்கு தென் கிழக்காகவும் பல வெடிப்புகள் காணப்படுகின்றன. கிழக்கு மேற்காக வளைவுகளும் (arches), குழிகளும் (grabens) காணப்படுகின்றன. பாறை தட்டுகள் நகர்வதன் காரணமாகவும் அழுத்தத்தின் காரணமாகவும் இவைகள் மேலும் மேலும் விரிவடைந்தும், பெரிதாகியும், ஆழமாகியும் வருகின்றன. இவற்றோடு நிலத்தடி நீரின் சுழற்சி அதிகரிப்பதாலும் சுழற்காற்று, சுரங்கங்கள், அணைகளால் அழுத்தம் கூடுவதாலும் பூமி மேலும் மேலும் இறுக்கமடைந்து வருகிறது. இவையனைத்தும் பூகம்பமும் நிலநடுக்கமும் வருவதற்கான காரணங்களாக உள்ளன. ஆறுகள் மணலை அரிப்பதும், அரித்த மணலை கடலில் சேர்ப்பதும் பூமி இறுக்கமடைந்து வருவதற்கான அறிகுறிகள். நிலம் மேலும் கீழுமாக நகர்வதும், நதிகள் திசை மாறுவதும் வளைவதும் சுருளுவதும் பூமி வெடிப்புகள், வளைவுகள், குழிகள் இடம் பெயர்வதை குறிக்கின்றன.




தென்னிந்தியாவில் ராமேஸ்வரம் - கொச்சி, மங்களூர் - சென்னை, பம்பாய் - மகேந்திரகிரி ஆகிய அச்சுகளில் பூமி மேலெழும்பிய வண்ணம் உள்ளது. இதனால் கடலோரப் பகுதிகள் கடலுக்குள் புகுந்தவண்ணம் உள்ளன. இவ்வச்சுப்பகு



படிப்பகம்

www.padippakam.com

திகளில் தெரியும் மணல்மேடுகள் பூமி மெல்ல மேலெழும்பி வளைந்து வருவதற்கு ஆதாரங்கள். இப்பகுதியில் உள்ள நிலவெடிப்புகளால் நிலத்தடி நீர் கொஞ்சம் கொஞ்சமாக கீழே செல்கின்றன. இம்மூன்று அச்சுகளுக்கும் இடைப்பட்ட பகுதிகளில் கிழக்கு மேற்காக பாலக்காடு வழியாக ஒரு பள்ளமும் துங்கபத்திரா பகுதியில் ஒரு பள்ளமும் தெரிவது பூமி அச்சு பகுதிகளில் மேலே வருவதையே குறிக்கின்றன. இப்பகுதியைச் சுற்றியுள்ள ஆறுகள் மணலை அதிகமாக அரிப்பதோடு திசைவிலகியும் செல்கின்றன. உதாரணமாக மங்களூர் - சென்னை அச்சுக்கு வடக்கேயுள்ள பெண்ணாறு, சுவர்ணமுகி நதிகள் மேலும் வடக்கு நோக்கியும் தெற்கேயுள்ள பாலாறு, தென் பெண்ணை மேலும் தெற்கு நோக்கியும் நகர்கின்றன. இதேப்போல் கொச்சி - ராமேஸ்வரம் அச்சுக்கு வடக்கேயுள்ள வைகை, வெள்ளாறு மேலும் வடக்கேயும் தெற்கிலுள்ள தாமிரபரணி மேலும் தெற்கேயும் மெல்ல நகர்ந்து வருகின்றன.

வடக்கு தெற்காக உள்ள நிலவெடிப்புகளின் அகலம் பெரிதாகி வருவதாலும் நகர்ந்து வருவதாலும் பல மாற்றங்கள் நிகழ்வதைக் கண்டுணர முடியும். ஒரு காலத்தில் மேட்டூரிலிருந்து வடகிழக்காக சென்னை வரை ஓடிய காவிரி தெற்கே திரும்பியதற்கும், பழங்காவிரி - கொள்ளிடம் - தென்பெண்ணை ஆறுகள் அதிசயமாக வளைவுகளை காண்பிப்பதற்கும், வெள்ளாறு சேத்தியாதோப்பு அருகே பாம்பு போல் சுருண்டு செல்வதற்கும் நிலவெடிப்புகளின் இயக்கமே காரணம். இவ்வெடிப்புக்கு இடைப்பட்ட மன்னார்குடி - பட்டுக்கோட்டை நிலப்பரப்புகள் மெல்ல மேலெழும்பி வருகின்றன. தஞ்சை - வல்லத்தின் மேட்டுப்பாங்கான பகுதி மெல்ல மேலெழும்புகின்றன. ஊத்தங்கரையிலிருந்து திண்டுக்கல் வரை செல்லும் மற்றொரு பூமி வெடிப்பு சுற்றியுள்ள நதிகளை திசை விலக்கியுள்ளது. ஜலகண்டபுரத்திற்கும் சேலத்திற்கும் நடுவிலும் நதிகள் திசைமாறியுள்ளன.

பூமிக்கடியிலுள்ள தட்டுகள் நகர்வதாலும், அவற்றின் அழுத்தத்தினாலும் இந்திய துணைகண்டம் ''கொண்ட்வனாலேண்ட்'' (Gondwanaland) எனும் மாகண்டத்திலிருந்து பிரிந்து வடக்கு நோக்கி நகர்ந்து சுமார் 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன் திபெத்து பீடபூமியுடன் (ஆசிய கண்டத்துடன்) இணைந்தது. தற்போதும் தெற்கிலிருந்து வரும் அழுத்த சக்தி காரணமாக வடக்கு நோக்கி ஆண்டுக்கு 5.5 செ.மீ. அளவிற்கு தென்னிந்திய நிலப்பகுதி நகர்ந்து கொண்டுள்ளது. இதை வடக்கிலிருந்து திபெத் பீடபூமி தடுப்பதன் காரணமாக ஏற்படும் அழுத்தத்தால்தான் இந்திய பூமியிலுள்ள வெடிப்புகள், வளைவுகள், குழிகள் மாற்றத்திற்குள்ளாகி நிலநடுக்கமும் பூகம்பமும் ஏற்படுகின்றன.

இவற்றின் அடிப்படையில் பார்த்தால் தென்னிந்தியாவில் முருது, ஓஸ்மனாபாத், கம்மம், ஹாயன், பெங்களூர், சித்தூர், சென்னை, சாத்தூர், முதுகுளத்தூர் ஆகியவை மிக அதிக அபாயமான பகுதிகளாகவும் மஹ்பூப் நகர், மச்செர்லா, கடப்பா, பீஜப்பூர், மொர்க்காரா, தும்கூர், ராய்சோத்தி, தருமபுரி, கோயம்புத்தூர், சேலம், சாத்தனூர், மதுரை, பாண்டிச்சேரி, உதகமண்டலம், தஞ்சாவூர் ஆகியவை அடுத்த அபாய நிலையில் உள்ள பகுதிகளாகவும் விளங்குகின்றன என்று பாரதிதாசன் பல்கலைக்கழக ஆய்வுக் குழுவினர் தெரிவிக்கின்றனர். நர்மதா, தப்தி நதிகள் மேற்கு நோக்கி நகர்வதைச் சுட்டிக்காட்டி கட்ச் வளைகுடாவிலிருந்து கன்னியாகுமரி வரையுள்ள மேற்கு கடற்கரை பகுதிகளில் நிலநடுக்கத்திற்கான வெடிப்புகள் உள்ளதாக தென்னிந்தியாவை ஆய்வு செய்துவரும் மற்ற ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

மேலும் வடக்கில் இமயமலையின் மிகப்பெரிய ஆபத்துக்குரிய அச்சும் அதைச் சுற்றியுள்ள விந்தியம், ஆரவள்ளி, நர்மதா, சாத்பூரா, ஜாம்நகர் - ஜலவார், அல்லாஹ் பண்ட் - கேத்திரி அச்சுகளும் நிலநடுக்கம், பூகம்பத்திற்கு காத்திருக்கக்கூடிய அபாய பகுதிகள் என பிற இந்திய விஞ்ஞானிகள் தெரிவிக்கின்றனர். இமயமலை வெடிப்புகளால் 8 'ரிக்டர்' அளவுக்கு மேலுள்ள மிகப்பெரிய நிலநடுக்கம் நான்கு முறை (கங்ரா, பீகார், அஸ்ஸாமில்) இது வரை ஏற்பட்டுள்ளது. இதில் ஏற்பட்ட சேதமும் உயிரிழப்பும் தற்போதைய மஹாராஷ்டிராவில் நிகழ்ந்த அளவிற்கு ஈடானது. இமயமலையின் பெரிய அச்சில் பூகம்பம் நிகழுமாயின் சுற்றியுள்ள 450 மில்லியன் மக்களும் தேஹ்ரி உட்பட 100-க்கும் மேற்பட்ட அணைக்கட்டுகளும், இதனால் நீர் - மின்சார வசதிபெறும் கோடிக்கணக்கான ஏக்கர் விவசாய நிலங்களும், தங்கம் - யுரேனியம் மற்றும் எண்ணெய் வளமும் நாசமாகும். காஷ்மீர், கார்வால், நாகாலாந்து வழியாக செல்லும் மூன்று பெரிய வெடிப்புகள் அதிக அழுத்தம் கொண்டு வெடிக்கும் அபாய நிலையிலுள்ளன என ஆய்வாளர்கள் எச்சரித்துள்ளனர். ஆரவள்ளி மலை ரப்பரை போல் வளைந்து வருவது; சிம்லாவிற்கு 60 கி.மீ. தொலைவிலுள்ள ராம்பூர் பகுதியில் நிலப்பரப்பு கீழிறங்குவது; சிவாலய மலை சரிந்தும், பற்களாக பிளந்தும் வருவது; இமயமலைத் தொடரில் புதிய மலைகள் மேலெழும்பி வருவது; கங்கை, பிரம்மபுத்திரா ஆறுகள் தெற்கே இடம்பெயர்வது; காடுகள் மெல்ல பூமிக்குள் செல்வது; ஆறுகளில் மணல் அரிப்பு, வண்டல் - சேற்று மண் படிதல் அதிகமிருப்பது முதலியவை இவற்றிற்கு அறுகுறிகளாக குறிப்பிடுகிறார்கள்.

ஹோலி கிராமத்திற்கு 3 நாள் தாமதமாக வந்துதான் சிறிய கூடாரம் கட்ட உதவி செய்தது இக்கேடுகெட்ட அரசு.



தென்னிந்திய நிலநடுக்கத்திற்கு அப்பாற்பட்ட பகுதி என்று ஒதுக்கிவிட்டு, புவி ஆய்வாளர்களின் ஆய்வுகள் இமயமலை மற்றும் வடமாநிலங்களைச் சுற்றியே நடந்துவந்தது. 1967-ல் மஹாராஷ்டிரா - கொய்னா நிலநடுக்கத்திற்குப் பின்தான் ஆய்வாளர்களின் கவனம் தென்னிந்திய பகுதிகள் பக்கம் திரும்பியது. மேலும் இதில் கொய்னா அணை வெடித்து சிதறியதால் விளைந்த பாதிப்பே அதிகம் இருந்ததால் அவர்களின் கவனம் அணையை நோக்கியும் சென்றது. ஏற்கனவே பக்ராநங்கல் அணையருகே பஞ்சாப்பில், தேஹ்ரி அணையருகே உத்தரகாசியில் மற்றும் எகிப்து, அமெரிக்கா போன்ற நாடுகளில் அணைகள் உள்ள பகுதிகளில் நிலநடுக்கம் நிகழ்ந்து இருந்ததால் அணைக்கட்டுகள், சுரங்கங்கள் நிலநடுக்கத்தை தூண்டிவிடுகின்றனவா என ஆய்வு செய்தனர். அணைகளில் தேங்கும் நீரின் சுமைதாங்காமல் பூமிக்குள் அழுத்தம்கூடி நிலநடுக்கத்தை தூண்டுவதாகவும், பூமியின் மண் விலகலால் கசியும் அணை நீர், நில வெடிப்புகளில் நிரம்பி நிலநடுக்கத்தை தூண்டுவதாகவும் இவர்களின் ஆய்வு முடிவுகள் தெரிவிக்கின்றன. மஹாராஷ்டிரா - லத்தூர் பகுதியில் கடந்த ஆண்டு ஆகஸ்டு மாதமும் தற்போது செப்டம்பரிலும் நிலநடுக்கம் வந்ததற்கு, சரியா அந்த இரு மாதங்களிலும் அருகிலுள்ள கொய்னா அணை முழுவதும் நீர் நிரம்பியிருந்ததை ஆதாரமாகக் காட்டுகிறார்கள். சுற்றியுள்ள மக்னி, உஜ்ஜயினி, ஜயகவாடி அணைகளும் நிலநடுக்கத்திற்கு காரணமாக இருந்தனவாம். தேஹ்ரி, கொய்னா, நர்மதா முதலான பெரிய அணைக்கட்டுகள் எல்லாம் ஆபத்தான நில வெடிப்புகள் மேலேயே அமைந்துள்ளன. நர்மதா சாகர் மற்றும் சர்தார் சரோவர் அணைக்கட்டுகளால் நிலநடுக்க அபாயத்தைச் சுட்டிகாட்டி பல ஆய்வாளர்கள் எச்சரித்தும், எதிர்ப்பு தெரிவித்தும் மீறி அரசு முனைப்பாக கட்டி வருகிறது.

பொதுநலன் அக்கறையோடு சுய ஆர்வம் - முயற்சியிலும், இருக்கும் குறைவான வசதிகளையும் வைத்துக் கொண்டே புவி

படிப்பகம்

www.padippakam.com

ஆய்வாளர்கள் பலர் பல ஆய்வுகளை நடத்தி நிலநடுக்கத்திற்கான காரணங்களை இந்த அளவிற்கு வெளிகொண்டு வந்துள்ளனர். தங்களுடைய ஆய்வுகளை மேலே தொடர்வதற்கு வசதியின்றி அரசிடம் நிதியுதவி கோரி பலர் பல ஆண்டுகளாக காத்திருக்கிறார்கள். பாரதிதாசன் பல்கலைக் கழக ஆய்வுக் குழுத் தலைவர் சோம.ராமசாமியும் இதில் ஒருவர். நிலநடுக்கத்தை ஆய்வு செய்வதற்காக உள்ள அரசின் நேரடி நிறுவனத்திலும் (NGRI), நிலநடுக்கம் வருவதை கண்காணிப்பதற்காக உள்ள 20 நிலையங்களிலும் இத்தகைய நிலைதான். உலக அளவில் நவீன எண்ணியல் கணிப்பொறி முறைகளால் ஆய்வாளர்கள் நிலநடுக்கத்தை அளந்து வருகையில், இவர்களிடம் இருப்பவை மூன்று தலைமுறைக்கு முந்தியவை. பயன்படாத நிலையிலும் பல உள்ளன. 20 இடங்கள் தவிர பிற இடங்களில் சென்று ஆய்வு செய்ய நடமாடும் ஆய்வுக் குழுவோ, போதிய கண்காணிப்பாளர்களோ, வாகன - கருவி வசதிகளோ இல்லை. அணு உலை நிலையங்கள், சுரங்கங்களில் உள்ள கருவிகள் மூலம் (இதன் மூலம் நிலநடுக்க அலையை எப்பொழுதாவது, எதேச்சையாகத்தான் காண முடியும்) நிலநடுக்க அதிர்வலையை கண்டு ஆய்வு செய்யவேண்டிய மற்றும் அபாயத்தை எச்சரிக்கை செய்ய வேண்டிய அவல நிலையுள்ளது.

இத்தகைய பற்றாக்குறையோடு, ஓட்டை உடைசல் கருவிகளோடு போட்டியிட்டு நிலநடுக்கத்தை கண்டறிந்தாலும் அதை முறையாக பெறுவதற்கு தகவல் வலைப்பின்னல் எதுவுமில்லை. நிலநடுக்க மானிகளின் அளவீட்டை, ஹைதாராபாத்திலுள்ள ஆய்வு மையம் (NGRI) பெறுவதற்கும் சைனாவிலுள்ள ஷாங்காய் நிலையத்திற்கும் போலந்திலுள்ள வார்சா நிலையத்திற்கும் தகவல் இணைப்பை செயற்கை கோள்மூலம் செய்துதரக் கோரி, பல ஆண்டுகளாகி விட்டன. நிலநடுக்க தகவல் கிடைத்தால் மாற்று நடவடிக்கை எடுப்பதற்கான அமைப்பு முறைகளும் எதுவும் அரசிடம் இல்லை.

மஹாராஷ்டிரா, லத்தூரில் கடந்த ஆகஸ்டு மாதம் நிலநடுக்கம் ஏற்பட்ட பிறகும்கூட அங்கு நிலநடுக்க கண்காணிப்பு நிலையத்தை அரசு நிறுவவில்லை. நிலநடுக்க கண்காணிப்பு நிலையங்கள், இந்திய வானியலாராய்ச்சித் துறை(IMD)யின் கட்டுப்பாட்டில் இருப்பதால் தலைமைக்கு தகவல் தருவதா, NGRI- ஆய்வு மையத்திற்கு தகவல் தருவதா, சம்பந்தப்பட்ட பகுதி அரசு நிர்வாக அதிகாரிகளுக்கு தகவல் தருவதா என்றே தெரியவில்லை என்கிறார், ஒரு கண்காணிப்பாளர். ''லத்தூர் நிலநடுக்கம், ஒரு வருடம் காலமாக பல்வேறு 'ரிக்டர்' அளவுகளில் இருந்ததை புனேயில் உள்ள நிலையத்தின் மூலம் உணர்ந்து தெரிவித்தும் அரசும், IMD -ஆராய்ச்சித் துறையும் தாமதமாகவே நடவடிக்கையில் இறங்கியது'' என்று கூறும், நிலநடுக்க கண்காணிப்பாளர் சி.வி.ர்ரமகிருஷ்ண ராவ், அரசின் சிவப்பு நாடா முறையைத்தான் குற்றவாளி என்கிறார்.


லத்தூர் நிர்வாகம், ஆகஸ்டு 92 நிலநடுக்கத்திற்குப் பிறகு இந்திய வானியலராய்ச்சித் துறை இயக்குனர் ஆர்.கே.துபேயிடம் முறையிட்ட பிறகு அவர் புவி ஆய்வாளர்கள் சிலரை அழைத்து வந்து ஆய்வு நடத்திவிட்டு 11-12-92 அன்று ஆபத்து ஒன்றுமில்லையென அறிக்கை வெளியிட்டார். இதுபோன்ற அதிகாரவர்க்க, பொறுப்பற்ற நபர்களின் ஆய்வுகளைத்தான் அரசு தலையில் தூக்கி வைத்துக் கொண்டு ஆடுகிறது. தமக்கு ஆதாயம் இருப்பதால் வலிந்து இதை பிரச்சாரம் செய்கிறார்கள், ஆட்சியாளர்கள்.

உதாரணத்திற்கு, கில்லாரி பகுதியில் மிகுதியாக விளையும் கோதுமை, கரும்பு, திராட்சை முதலியவற்றால் பயனடையும் நிலப்பிரபுக்கள், பெருவியாபாரிகள், கட்சிப் பிரமுகர்கள் ஆகியோர், முதல் முறை நடுக்கம் நிகழ்ந்து வெளியேறிய கிராம மக்களை ''இனி நிலநடுக்கம் வராது'' எனக் கூறி மீண்டும் கிராமத்திற்கு அழைத்து வந்துள்ளனர். தமது கொள்ளைக்கு வசதியாக பெருவீத உற்பத்தி நடக்கும் பகுதிகளையோ, நர்மதா அணை போன்ற திட்டத்தையோ மற்றும் சாதாரண மக்கள் நெருங்கி வாழும் பகுதியையோ புவி ஆய்வாளர்கள் நிலநடுக்க அபாயமிக்கதாக சுட்டிக்காட்டினால் அதை ஆட்சியாளர்கள் ஒதுக்கி தள்ளிவிடுகிறார்கள். 1973-லேயே, ஜனார்த்தன நேகி, என்.கிருஷ்ண பிரம்மம் என்ற இரு இந்திய ஆய்வாளர்கள் லத்தூர் பகுதியில் குருத்வாடி நில்வெடிப்பு அபாயமிக்கதாக உள்ளதாகக் கூறி மேலும் ஆய்வு நடத்த வேண்டுமென கோரி அறிக்கை சமர்ப்பித்தனர். ஆனால், இது அரசால் அலட்சியப்படுத்தப்பட்டது.

அரசின் அலட்சியம், தாமதமான நிவாரணப் பணிகள், ஆட்சியாளர்களின் சிறிதும் பொறுப்பற்ற மக்கள்விரோத தன்மை காரணமாகவே மஹாராஷ்டிரா, லத்தூரில் மிகப்பெரிய அளவிற்கு 30,000 பேரை பறிகொடுத்திருக்கிறோம். ஏனெனில் இதே 'ரிக்டர்' அளவுகொண்ட நிலநடுக்கம் அமெரிக்காவில் சான் பிரான்சிஸ்கோ நகரில் நிகழ்ந்தபோது 65 பேரே இறந்தனர். இதிலும் அதிர்ச்சியால் மாரடைப்பு வந்து இறந்தவர்களே பலர். ஜப்பானில் எரிமலைக் குழம்புகள் வெடித்துக் கொண்டிருந்தாலும் நிலநடுக்கம் வருடம் இரண்டு நடந்தாலும் பாதிப்புகள் மிகவும் குறைவுதான். பூகம்ப அபாய பகுதிகளில் குறைவான மக்களையே பாதுகாப்பான அமைப்புகொண்ட வீடுகளில் வசிக்க அனுமதிக்க வேண்டும்; மற்றவர்களுக்கு மாற்று ஏற்பாடு செய்து தரப்பட வேண்டும்; பூகம்ப செய்தி உடனுக்குடன் கிடைத்து அப்பகுதியிலிருக்கும் மக்களும் வெளியேற உரிய வசதிகள் இருக்க வேண்டும். அப்பொழுதுதான் மேலைநாடுகளைப் போல் பூகம்ப சேதத்தை இந்தியாவிலும் குறைக்க முடியும்.

நிலநடுக்கம் ஆபத்தான பகுதிகளை கண்டறிவதற்கே விஞ்ஞானிகளுக்கு வசதி செய்து கொடுக்காத இந்திய அரசு, மக்களுக்கு இத்தகைய பாதுகாப்பு வசதியை எங்கே செய்யப் போகிறது? மக்கள் திரட்டித் தரும் பூகம்ப நிவாரண நிதியிலும், பொருட்களிலும் கொள்ளையடிக்கும் ஆட்சியாளர்கள் எப்படி செய்வார்கள்? மஹாராஷ்டிராவில் இன்றுவரை தினம் நிலநடுக்கச் செய்தி வந்து கொண்டிருக்கிற நிலையிலும் நிவாரணப் பணிகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மந்தகதியில் நடப்பதைத்தானே பார்க்கிறோம்? நிலநடுக்கம் தொடங்கும்போதே ஆளுங்கும்பலும், பண முதலைகளும்,தொழிலதிபர்களும் மிட்டா - மிராசுகளும், 'மாண்புமிகு'களும் விமானத்தில்கூட தப்பி பாதுகாத்துக் கொள்ள முடியும்.ஆனால் மக்கள் மாட்டு வண்டிகளை கட்டிக் கொண்டு என்ன செய்துவிட முடியும்? இயற்கையை வெற்றி கொள்ள வேண்டிய பணிக்கு தடையாக இருக்கும் கயவர் கும்பலும் இந்த அரசும் இனியும் நமக்கெதற்கு?

● மணி



பண முதலைகளும், 'மாண்புமிகு'களும் விமானத்தில் தப்பிவிட முடியும்; ஆனால் நிலநடுக்கம் வந்தால் சாதாரண மக்களுக்கு மாட்டுவண்டிதான் கதி.



படிப்பகம்

www.padippakam.com



# சிவந்த கண்கள் கவனிக்கட்டும்

★ பி.டி.ஐ. (PTI) செய்தி நிறுவனத்தைச் சேர்ந்த பெண் பத்திரிகையாளர் சுமா ஜோஸன் 'பம்பாயின் ரத்த யாத்திரை' என்ற செய்திப் படத்தை எடுத்ததன் காரணமாக வேலையை விட்டு நீக்கப்பட்டுள்ளார். இச் செய்திப்படம் பாதிக்கப்பட்டவர்களை நேரடியாகச் சந்தித்து, அவர்களின் வார்த்தைகளாலேயே இந்துமத வெறியர்கள் எவ்வளவு கொடூரமாக நடந்து கொண்டுள்ளனர் என்பதை அம்பலப்படுத்துவதாக அமைந்துள்ளது. இதன் காரணமாகவே இந்நிறுவனத்தின் உயர் பார்ப்பன அதிகாரிகள் படத்தைப் பார்த்த சிறிது நாட்களிலேயே பணியில் நிரந்தரமாக்கப்பட வேண்டியிருந்த இவரை வேலை நீக்கம் செய்துள்ளனர். இதனை எதிர்த்து இவர் 'பி.டி.ஐ., பா.ஜ.க. சார்பாக உள்ளது' என வெளிப்படையாகவே குற்றம் சுமத்தி வழக்குத் தொடுத்துள்ளார். பா.ஜ.க.வின் கள்ளக் கூட்டாளி ராவின் அரசும் தன் பங்கிற்கு தணிக்கைச் சான்றிதழ் தர மறுத்துள்ளது.

★ சர்வதேச சீரழிவு கலாச்சாரத்தின் பிரதிநிதியான மைக்கேல் ஜாக்சனை வரும் நவம்பரில் தில்லியில் இசை நிகழ்ச்சி ஒன்றினை நடத்த பெப்சிகோலா மற்றும் ஜீ.வி. திரைப்பட நிறுவனங்கள் அழைத்துள்ளன. ஒரு நாள் இசை நிகழ்ச்சிக்காக ஜாக்சனுக்கு இவர்கள் கொடுக்கும் ஊதியம் மட்டும் 9 கோடி ரூபாய். தற்பொழுது கோகோ கோலா நிறுவனம் சர்வதேச விபச்சாரி மடோனாவை டிசம்பரில் தில்லிக்கு வர ஏற்பாடு செய்துள்ளது. விற்பனையில் மட்டுமின்றி சீரழிவை வளர்ப்பதிலும் போட்டி தான்!

★ நேர்முகத்தேர்வு செய்யப்பட்ட 17 வயதுடைய 501 இளைஞர்களில் 90 சதவீதத்தினருக்கு இங்கிலாந்தை உலக வரைபடத்தில் சரியாகக் காட்டத் தெரியாது. 45 சதவீதத்தினருக்குப் போஸ்னியா எங்கிருக்கிறது என்றே தெரியாது. தனது நாட்டின் வரலாறு பற்றியும் 2-ம் உலகப் போர் பற்றியும் 60 சதவீதத்தினருக்குத் தெரியாது. இவையெல்லாம் பின்தங்கிய நாடுகளிலுள்ள இளைஞர்களிடம் கேட்கப்பட்டதல்ல; விஞ்ஞானத்தில் முன்னேறியுள்ள மேற்குலகைச் சேர்ந்த இங்கிலாந்து நாட்டு இளைஞர்களிடம் கேட்கப்பட்டவை. 98 சதவீத இளைஞர்களுக்குத் தெளிவாகத் தெரிந்த ஒரே விசயம் மதுவைப் பற்றியதுதான்.

★ காதரீன் ஆன் பவர் - அமெரிக்காவைச் சேர்ந்த இப்பெண்மணிக்கு 23 வருடங்கள் கழித்து ஒரு போலீஸ் அதிகாரியைக் கொன்ற வழக்கில் 12 வருட சிறைத் தண்டனை விதித்துத் தீர்ப்பளித்துள்ளது போஸ்டன் நீதிமன்றம். கணவருடனும் குழந்தையுடனும் வாழ்ந்து வரும் இவருக்குப் பல ஆண்டுகள் கழிந்த பின்னும் இத்தண்டனையை வழங்குவது பெரிய அளவில் மனோவியல் பாதிப்பை ஏற்படுத்தும் என ஆனின் வழக்குரைஞர்கள் எடுத்துரைத்ததை நீதிமன்றம் ஆத்திரத்துடன் மறுத்துள்ளது. 'வியட்நாம் போரில் அமெரிக்காவுக்கு எதிராகச் செயல்பட்டவர்களைத் தேடிப் பிடித்து பழி வாங்கும் அமெரிக்காவின் வெறியைத்தான் இது காட்டுகிறது' என இச்சம்பவத்தை பத்திரிகைகள் அம்பலப்படுத்தியுள்ளன. காரணம் காதரீன் வியட்நாம் ஆக்கிரமிப்புக்கு எதிராகச் செயல்பட்ட புகழ்பெற்ற மாணவர் தலைவர்.

★ 1991 ஆட்சிக் கவிழ்ப்பில் லெனின் மற்றும் பல கம்யூனிஸ்ட் தலைவர்களின் சிலைகளைத் தகர்த்தெறிந்தது யெல்ட்சின் கும்பல்; தற்பொழுது கிடைத்துள்ள வெற்றியில் மேலும் திமிர் கொண்டு லெனின் உடல் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள சமாதியில் சம்பிரதாய ராணுவ மரியாதையை நிறுத்திவிட்டது. அதனுடன் லெனின் அருங்காட்சியகத்தையும் மூடிவிட்டது. இதனுடன் பாதிரி மார்கஸ் லெனின் உடலை கிறிஸ்தவ முறைப்படி அடக்கம் செய்ய வேண்டும் எனக் கூச்சல் போட ஆரம்பித்துள்ளனர். செய்தியை அறிந்தவுடனேயே நூற்றுக்கணக்கான இளைஞர்களும் முதியவர்களும் லெனின் சமாதி முன் கூடி, 'சர்வதேசிய மக்களின் தலைவன் லெனினுக்காக ருஷ்யர்களாகிய நாம் பெருமை கொள்வோம்' என முழக்கமிட்டு யெல்ட்சின் கும்பலுக்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

★ தஸ்லீமா நஜ்ரீன் - வங்காள தேசத்தைச் சேர்ந்த பெண் எழுத்தாளர். இவர் அயோத்தி மசூதி இடிப்புச் சம்பவம் காரணமாக அந்நாட்டில் எழுந்த முஸ்லீம் தீவிரவாத வன்முறைகளை அம்பலப்படுத்தி 'லஜ்ஜா' (அவமானம்) எனும் நாவலை சமீபத்தில் வெளியிட்டுள்ளார். இதனால் அந்நாட்டிலுள்ள முஸ்லீம் மதவெறி அமைப்புகள் இவரின் மீது கொலைத் தண்டனையை (ஃபட்வா) நிறைவேற்றியுள்ளன. நமது நாட்டிலுள்ள இந்துவெறியர்களோ அயோத்தி மசூதி இடிப்புச் சம்பவத்தைக் காரணம் காட்டுவதை எதிர்த்துள்ளன. அதனுடன் தற்பொழுது அந்நாவலை கடத்தி வந்து குறைந்த விலையில் 'முஸ்லீம் மதவெறியை' அம்பலப்படுத்துவது எனும் பெயரில் விற்று வருகின்றன. தஸ்லீமா நஜ்ரீனோ இந்து மதவெறியர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ள முடியாதென்றும், 'சல்மான் ருஷ்டியைப் போல நான் மன்னிப்புக் கேட்கப் போவதில்லை' என்றும் அறிவித்துள்ளார்.

★ சென்ற பிப்ரவரியில்தான் உச்ச நீதிமன்றம் தனியார் கல்லூரிகள் தங்கள் விருப்பம் போல் மாணவர்களைத் தெரிவு செய்வதைத் தடை செய்தும், கட்டணங்களை நிர்ணயித்தும் தீர்ப்பளித்தது. இதன்படி கர்நாடகாவில் தொழிற் கல்விக்கு ரூ. 25,000/-, மருத்துவக் கல்விக்கு ரூ. 70,000/- எனக் கட்டணங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இதைக் கர்நாடக கல்வி வியாபாரிகள் ஏற்றுக் கொள்ளாததுடன், இதனை எதிர்த்து உச்ச நீதி மன்றத்தில் வழக்குத் தொடுத்தனர். இதில் முன்னணியாகச் செயல்பட்டவர்கள் சிருங்கேரி மடத்தையும் உள்ளிட்ட ஐந்து மடாதிபதிகள். தற்பொழுது உச்ச நீதிமன்றம் இவர்கள் 'கட்டணம் செலுத்திக் கல்வி பயிலும் மாணவர்களில் 15 சதவீத இடங்களை தங்கள் விருப்பம் போல் வெளிநாட்டு மாணவர்களாகத் தேர்ந்தெடுக்கலாம்' எனத் தனது முந்தைய தீர்ப்பை வளைத்துள்ளது. மேலும் இச் சலுகை இந்த ஒரு வருடத்துக்கு மட்டும்தான் எனக் கண்டிப்புடன்(!) கூறியுள்ளதாம்!

★ 1984 சீக்கியப் படுகொலையின் தளகர்த்தர்களான பகத், ஜகதீஷ் டைட்லர், சஜ்ஜன் குமார் போன்ற காங்கிரஸ் கயவாளிகளைக் குற்றமற்றவர்கள் எனச் சான்று தந்து தீர்ப்பளித்தது மிஸ்ரா கமிஷன். இதற்குப் பரிசாக இக் கமிஷனின் தலைவராகச் செயல்பட்ட முன்னால் உச்ச நீதிமன்ற 'நீதி'பதி ரெங்கநாத் மிஸ்ராவைத் தற்பொழுது தான் அமைத்துள்ள மனித உரிமைக் கமிஷனுக்குத் தலைவராக நியமித்துள்ளது மத்திய அரசு. கமிஷன் அமைப்பதற்கான சட்டம் பாராளுமன்றத்தின் ஒப்புதலைப் பெறுமுன்பே இவ்விஷயத்தில் துரிதமாகச்(!) செயல்பட்டுள்ளார் ராவ். குற்றமிழைத்த இராணுவத்தினரைத் தண்டிக்க அதிகாரமற்ற இக்கமிஷன் அமைக்கப்பட்டதன் நோக்கமே மேற்குலக எஜமானர்களைத் திருப்தி செய்வதற்குத் தானே யன்றி வேறு எதற்குமல்ல.

மொய்லியுடன் பேரம் நடத்தும் மடாதிபதிகள்





படிப்பகம்

www.padippakam.com

# பூலோகமே இவர்களுக்கு நரகம்தான்

**வாழ வழியில்லாததால் குப்பையினுள் நெட்டித் தள்ளப்படும் சிறுவர்கள். குப்பை பொருக்குவது சுதந்திரமான தொழில்; ஆனால் உத்திரவாதமில்லாத வாழ்க்கை; தொல்லைகள் ஏராளம்.**

பம்பாயில் வாழும் ஃபாஹ்மிதாவுக்கு வயது ஐந்துதான். ஆனாலும் இவள் ஒரு நாளைக்கு 12 மணி நேரம் உழைத்தாக வேண்டும். இவள் வயதையொத்த குழந்தைகளின் முதுகில் புத்தகப்பைகள் தொங்கிக் கொண்டிருக்கும் பொழுது இவளது கரங்களோ குப்பைக் கூடையை தலையில் தாங்கிப் பிடித்துக் கொண்டிருக்கிறது. சிறு பொம்மைகளுடன் விளையாட வேண்டிய பிஞ்சு விரல்கள் கரப்பான் பூச்சிகளும் கொசுக்களும் நிறைந்த குப்பைகளை வயிற்றுப்பாட்டுக்காகக் கிளறிக் கொண்டிருக்கிறது. இவளது அண்ணன் பதினேழே வயதான சலீமின் நிலைமையும் இதுதான். இவர்களை இருவரும் தினமும் கொண்டுவரும் 50 ரூபாயில்தான் ஏழு பேர் கொண்ட முழுக் குடும்பமும் காலத்தை ஓட்டிக்கொண்டிருக்கிறது.

இவர்கள் மட்டுமல்ல; பம்பாயில் மட்டும் சுமார் பதினைந்தாயிரத்துக்கும் மேற்பட்டோர் இத்தொழில் ஒன்றை மட்டும்தான் நம்பி வாழ்கின்றனர். இவர்களில் மிகப் பெரும்பாலோர் சிறுவர்கள்; சிறுமிகள். அடுத்து கணவனால் கைவிடப்பட்ட அனாதரவான பெண்கள். சிறுவர் சிறுமிகளில் அனைவருமே ஆரம்பப் பள்ளியைத் தாண்டாதவர்கள்; மிகப் பெரும்பாலோருக்கு எழுத, படிக்கவே தெரியாது. ஆனாலும் இந்த இளம் பருவத்திலேயே குடும்ப பாரம் அனைத்தையுமே சுமக்குமளவுக்கு சமூக நிலைமைகள் இவர்களை இந்த நரகத்தில் தள்ளிவிட்டுள்ளது.

அப்துல் மஜீத் என்ற சிறுவனுக்குத் தனது வயது என்னவென்று கூடத் தெரியாது; ஆனாலும் இவன்தான் தனது வயதான தாயாரையும் உள்ளிட்ட ஐந்து பேரைக் காப்பாற்ற வேண்டும். பள்ளிக்குச் செல்ல சீருடை வாங்க முடியாததால் சிறுவன் சகாராம் தனது அண்ணன் புபேந்தருடன் சேர்ந்து இத்தொழிலில் ஈடுபட்டுள்ளான். எட்டே வயதான காஃபர் அலியின் நிலையும் இதுதான். இலவசக் கல்விக் கூடமான மதரஸா மூடப்பட்டதால் பகுதி நேரமாக பார்த்துக் கொண்டிருந்த இத்தொழிலை முழு நேரமாக ஏற்றுக் கொண்டுவிட்டான். தனது தந்தை பார்த்துக் கொண்டிருந்த வேலை திடீரென போய்விட்டதால் ஆறு வயதில் மஞ்சு குடும்ப பாரத்தைச் சுமப்பதில் தானும் ஒருவளாகிவிட்டாள். நிர்மலாவுக்கோ தனது கணவன் வேலை இழந்ததாலும் அதன்பின் அவன் வேறு ஒரு பெண்ணுடன் குடும்பம் நடத்தத் தொடங்கிவிட்டதாலும் தனது குழந்தைகளைக் காப்பாற்ற இத்தொழிலைத் தேர்ந்தெடுப்பதைத் தவிர வேறு வழியில்லை!

இந்தக் கொடிய நரகத்திலிருந்து எப்படியாவது வெளியேறிவிட வேண்டும் என்ற எண்ணமும் இவர்களுள் உண்டு. 15 வயதான பப்லுவுக்கு இந்த வேலையே பிடிக்கவில்லை. அவன் வேறு ஏதாவது நல்ல வேலை கிடைத்தால் இதை விட்டுவிடுவேன் என்கிறான். அப்துல்லாவுக்கு,அலுவலகங்களில் எழுத்தராக வேலை பார்க்க ஆசை. அதற்கு அவன் படிக்க வேண்டும். எனவே 'எங்கள் பகுதியில் இரவு நேர பள்ளிக்கூடங்களை அரசாங்கம் ஏற்படுத்த வேண்டும்' என்கிறான். மஞ்சுவுக்கோ பள்ளிக்கூடத்தில் மீண்டும் சேர்ந்து படிக்க வேண்டும் என்று ஆசை. 'ஏன் படிப்பைப் பாதியில் நிறுத்தினாய்' எனக் கேட்டால் விரக்தி நிறைந்த ஏளனச் சிரிப்புதான் பதிலாகக் கிடைக்கும். அது கேள்வி கேட்பவரையும் இச் சமூகத்தையும் சாடும் பொருள் பொதிந்தது. ஆனாலும் மிகப் பெரும்பாலோர் இந்த வாழ்க்கையுடன் ஒத்துப் போய் விடுகின்றனர். இருப்பினும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ள அனைவரும் தங்கள் வருங்கால சந்ததியினர் இக் குப்பையில் புரளக் கூடாது என்பதில் உறுதியாக உள்ளனர்.

இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களில் இரு பிரிவுகள் உண்டு. ஒரு பிரிவினர் குடும்பமாக வாழ்பவர்கள்; மற்றொரு பிரிவினர் வீட்டைவிட்டு ஓடி வந்தவர்கள். இவர்கள் அனைவருமே 10-லிருந்து 20 வயதுக்குள்ளான சிறுவர்கள் - இளைஞர்கள். வறுமை காரணமாக சிறு வயதிலேயே கடினமான வேலைகளுக்குச் செல்ல வேண்டிய சூழ்நிலை, தாய் அல்லது தந்தை மறுமணம் செய்து கொள்வதால் ஏற்படும் பிரச்னைகள், குடிகார தந்தைமார்கள், வீடுகளில் நிலவும் சுதந்திரமற்ற ஒருவித இறுக்கமான சூழல் இவையாவும் வீட்டைவிட்டு வெளியேற காரணங்களாகின்றன. இவர்களில் 50 சதவீதத்துக்கும் மேலானோர் குப்பை பொறுக்குவதைத்தான் விரும்பி ஏற்றுக் கொள்வதாக உள்ளது.

சென்னையில் தன்னார்வக் குழு ஒன்றினால் நடத்தப்படும் புகலிடத்தில் (Shelter) தங்கியிருக்கும் 12 வயதான குமார் மூன்று வருடங்களுக்கு முன்பு வீட்டைவிட்டு ஓடி வந்துள்ளான். தான் செய்துவந்த கட்டிட வேலை மிகக் கடினமாக இருந்ததும், தான் கொண்டு வந்த பணத்தை அவனது தந்தை குடித்தே அழித்ததும், இவனை அச் சிறுவயதிலேயே தான் சிறிதும் அறிந்திராத சென்னைக்கு லாரியில் தொத்திக் கொண்டுச் செல்லத் தூண்டியுள்ளது. இங்கு வந்த பின்பு காய்கறி மூட்டைகளைத் தூக்கி வயிற்றைக் கழுவியுள்ளான். அதுவும் மிகக் கடினமாக இருக்கவே இப்பொழுது குப்பை பொறுக்குவதுதான் இவனது முழுநேரத் தொழில். ஆம்! இது மற்ற வேலைகளை விட ஓரளவு எளிதானது; வருமானம் தரக் கூடியது. அதைவிடை முக்கியமாக இதில் யாரும் இவர்களைக் கட்டுப்படுத்த முடியாது.

குமார் இனி வீட்டுக்குத் திரும்ப

அக்கறையற்ற அமைப்பினால் குப்பையோடு குப்பையாக மாறிப்போன வாழ்க்கை





படிப்பகம்

www.padippakam.com

ாவது கிடையாது; வேறு லைக்குச் செல்லவும் மன லை; நிச்சயமாக படிக்கப் ாவதும் கிடையாது. இந்த மூன் கும் அவன் உறுதியாக, ஆணித் மாக 'இல்லை' என்ற ஒற்றைப் லைத் தவிர வேறு எதுவும் கூற ல்லை. குமார் மட்டுமல்ல, மிகப் ரும்பாலான சிறுவர்களின் பதி ம இதுதான். 'நாங்கள் இங்கு ப்பதற்கும் வேறு தொழிலைக் றுக் கொள்வதற்கும் ஏற்பாடு ய்துள்ளோம்; ஆனால் தங்குவ கு இவையெல்லாம் கட்டாய லை, வருகைப் பதிவேடுகூட வகு கிடையாது. விதிமுறையை ம கட்டாயத்தையும் கொண்டு தால் சிறுவர்கள் வெளியேறி டுகிறார்கள்' என்கிறார் சென் னயிலுள்ள புக்லிடக் காப்பாளர். பொழுது கார் மெக்கானிக் ாழில் பயின்றுவரும் இரபத்தி ாடு வயதான முத்து ''ஆரம்பத் ம இந்தக் கட்டுப்பாடுகள் மிகக் னமாக இருந்தது; பின் என்னை ற்றிக் கொண்டுவிட்டேன். னாலும் எல்லோரும் மாறிவிடு ர்கள் எனக் கூறமுடியாது. கார ம் அது எதற்கும் கவலை கொள் த வாழ்க்கை'' என நினைவு றுகிறார்.

மறுபுறம் இவர்கள் விரும்பும் 'சுதந்திரம்' இவர்களை எளிதா சீரழிவு படுகுழிக்குள் தள்ளிவி றது. வரும் வருமானத்தை ன்றே செலவழித்து விடுகின்ற ; நாளை என்பது பற்றி இவர் நினைப்பதே கிடையாது. வர்கள் வாழ்வில் இன்று... இந்நிமிடம் டும்தான் நிஜம். உணவுக்குப் போக ஞ்சினால் திரைப் படங்களுக்குச் செல் அல்லது சூதாடுவது. இதுதவிர சிறு பதிலேயே பீடி குடிப்பது; பின் வயது ஏற குடிப்பது, போதை மருந்து உட்கொள் எனத் தொடர்கிறது. மறுபுறம் பேட்டை ளடிகள் மிரட்டியே இச்சிறுவர்களைத் களின் சுயலாபத்துக்குப் பயன்படுத்து றனர்.

ஓரளவு வருமானம் வந்தாலும் ரும்பாலான சிறுவர்களின் உடமையாக நப்பது ஒரே ஒரு பல்பொடி டப்பா மட் தான்; சிலரிடம் மட்டும் கூடுதலாக ற்றி உடுத்திக் கொள்ள ஒரு ஜோடி துணி உண்டு. பல இளைஞர்கள் உடுத்திக் ாண்டுள்ள துணிகள் கிழியும்வரை ற்றி உடுத்திக் கொள்வது கிடையாது. னென்று வினவினால் 'நாங்கள் என்ன பிஸர் உத்தியோகமா பார்க்கிறோம்' ற பதில்தான் கிடைக்கும். அது போல் ளிநபர்களிடம் பேசும்பொழுது 'தான் ற்கும் அஞ்சாதவன்' என்ற தொனி நக்கும். அனைவரிடமும் தேவைக்கு திகமாக உணவு எடுத்துக் கொள்ளும் க்கமுண்டு. இவை இரண்டுக்கும் மனோ துவ காரணங்கள் உள்ளன. அடிக்கடி



**குப்பை வண்டிக்காக பலமணிநேரம் காத்திருந்து நாலுகாசு கிடைக்க முந்திக்கொள்ள வேண்டும்; இல்லையெனில் அன்று பட்டினிதான். இவர்களின் செயற்பாடு நின்றுபோனால் நகரமே நாறிவிடும்.**

போலீசாராலும் பகுதி ரௌடிகளாலும் மிரட்டப்படுவதால் தங்களது பேச்சு, செய்கைகளின் மூலம் தைரியசாலிகளாக காட்டிக் கொள்கின்றனர்; உடம்பு பலம் பொருந்தியதாக இருந்தால்தான் எதிராளி அச்சப்படுவான் என்பதால் தேவைக்கு அதிகமான உணவுப் பழக்கம்.

'நாளை என்பது நிச்சயமில்லை' என்பதனை நன்கு புரிந்து கொண்டுள்ளனர். இது இவர்களை மனத்தளவில் பயமுறுத்துவதாகவே உள்ளது. 'தங்களுக்கென்று யாரும் இல்லை' என்ற ஏக்கமும் இவர்களுக்கு உண்டு. இவை இச்சிறுவர் களிடையே ஒரு நெருக்கமான பிணைப்பை ஏற்படுத்துகிறது. எதார்த்த வாழ்க்கையைப் பற்றி நன்கு புரிந்து கொண்டு ள்ளனர். பேட்டி எடுக்கப் போகும் பத்திரிகை யாளர்களிடம் 'உங்களைவிட எங்களுக்கு அனுபவம் அதிகம்' என்கின்றனர்; 'எங்களை வைத்து பணம் சம்பாதிக் கிறீர்கள்' எனக் குற்றஞ் சாட்டுகிறார்கள். ஆனால் மறுநிமிடம் 'இதையெல்லாம் மனசுல வைச்சுக்காதீங்க சார்' என்கின்றனர். பெரும் பாலோருக்கு ஏதாவது ஒரு நடிகரைப் பிடித்திருக்கிறது; ஒரு அரசியல் கட்சியைப் பிடித்திருக்கிறது. அனைவருக்கும் தேர்தல் பிடித்திருக்கிறது; 'வருமானம் கூடும்' என்பதற்காக.

'விரிவடைந்துவரும் பெரு நகரங்களில் இவர்களின் செயற்பாடு நின்று போனால் நகரமே நாறிவிடும்' என்பது மிகைப்படுத்தப்பட்ட ஒன்றல்ல. ஆனாலும் அரசு 'இரவு நேரக் கல்விக் கூடங்களை ஏற்படுத்துவது', 'புகலிடங்களைக் கட்டித் தருவது', 'கையுறைகள் வழங்குவது' போன்ற அடிப்படைத் தேவைகளைக்கூட செய்ய மறுக்கிறது. 'போதிய நிதி வசதியில்லை' எனத் தட்டிக் கழித்துவிடுகிறது. அதனுடன் தெருவோரச் சிறுவர்களுக்குத் தன்னார்வக் குழுக்களால் வழங்கப்படும் அடையாள அட்டையை ஏற்றுக்கொள்ள மறுக்கிறது, காவல்துறை. மறுபுறம் அரசு இப்பிரச்சினையை எடுத்துக்கூறும் 'பசி' போன்ற திரைப்படங்களுக்கு விருது கொடுத்து தன்னை சமூக அக்கறையுள்ளவனாகத் தம்பட்டம் அடித்துக் கொள்கிறது. ஆனால் எதார்த்தத்தில் குப்பைகளையே கிளறிக் கொண்டிருப்பதால் ஏற்படும் தோல் வியாதிக்கும் அம்முடை நாற்றத்தை சுவாசிப்பதால் நுரையீரல் பாதிக்கப்படுவதற்கும் அரசு மருத்துவமனைகளில் இவர்கள் பெறும் இலவச சிகிச்சைதான் அரசு இவர்கள் மீது காட்டும் ஒரே அக்கறை!

— ரஹீம்.



படிப்பகம்

www.padippakam.com

## பூகம்பப் பேரழிவு: அவலத்தின் நடுவே அக்கிரமங்கள்

கடந்த செப்டம்பர் இறுதியில் நடந்த மிகக் கோர மான பூகம்பப் பேரழிவில் சிக்கி, தமது உற்றார் உறவினர் களையும் உடமைகளையும் இழந்து, வேதனையில் தவித் துக் கொண்டிருக்கும் லத்தூர் - உஸ்மானாபாத் மாவட்ட மக்களுக்கு இன்னமும் நிவாரண உதவிகள் முறையாகக் கிட்டவில்லை. அற்ப உதவிகளைச் செய்துவிட்டு ஆட்சி யாளர்களும் அரசியல்வாதிகளும் சுயவிளம்பரம் செய்து கொள்வதிலேயே குறியாக உள்ளனர். பாதிக்கப் பட்ட பகுதிகளின் துயரக் காட்சிகளே இவற்றை நிரூபித் துக் காட்டுகின்றன.

● ராஜோகோன் கிராமத்திற்கு பூனா நகர மேயர் புகைப் படக் கருவிகளுடன் பத்திரிகையாளர்கள் புடைசூழ பெரும் படையாக வந்தார். மேயர் வருகிறார் என்று ஒலி பெருக்கியில் முன்கூட்டியே அறிவிப்பு செய்யப்பட்டது. ஆயினும் நிவாரண உதவியின்றி தவிக்கும் கிராம மக் கள் எவரும் மேயரைக் காணச் செல்லவில்லை. தன்னை வரவேற்க யாருமே வராத ஆத்திரத்தில், அடுத்த நிமி டமே மேயர் திரும்பிச் சென்றுவிட்டார். பாதிக்கப்பட்ட மக்களிடம் அவர் ஆறுதல் கூடச் சொல்லவில்லை.

**பிற்பட்ட - தாழ்த்தப்பட்ட மக்களுக்கு தனிக்குடி யிருப்புகள்; சாதிவெறி அக்கிரமம்**

● சாஸ்தூர் கிராமத்தில் இரண்டரை ஏக்கர் சூரியகாந்தி பயிர்கள் அழிக்கப்பட்டு அவசரமாக ஹெலிகாப்டர் தள மாக மாற்றப்பட்டது. பிரதமரின் வருகைக்காகத்தான் இந்த ஏற்பாடு. இந்த அக்கிரமச் செயலுக்கு இதுவரை நட்ட ஈடு தரப்படவில்லை. பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு பிரதமர் வராததைக் கண்டித்து அப்பகுதி வாழ் மக்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். சில இடங்களில் பாதிக்கப் பட்ட மக்கள் பிரதமரிடம் முறையிடக்கூட அனுமதிக்கப் படவில்லை. இதை எதிர்த்து ஆர்ப்பாட்டம் செய்தோரை போலீசு தடியடி நடத்திக் கலைத்தது.

● பாரதீய ஜனதா தலைவர் அத்வானி தன்னுடன் வீடியோ படப்பதிவாளர்களையும், பத்திரிகை நிருபர்க ளையும் கும்பலாகத் திரட்டிக் கொண்டு பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு வந்து படம் பிடித்துக் கொண்டார். நிவா ரண உதவிகளைப் பற்றி மேலோட்டமாகக் குறிப்பிட்ட அவர், அயோத்தி விவகாரம் - இடைத்தேர்தல் என அரசியல் பிரச்சாரம் செய்து கொண்டு திரிந்தார்.

● அரசு நிவாரண முகாம்களிலும், ஆர்.எஸ்.எஸ். நடத் திய முகாம்களிலும் சாதி வெறி தலை விரித்தாடியது. மேல் சாதி நிலப்பிரபுக்களுக்கு தனி முகாம்; பிற்பட்ட சாதியினருக்கு ஒரு முகாம்; தாழ்த்தப்பட்ட - பழங்குடியி னருக்குத் தனி முகாம் என துயரத்தின் நடுவிலும் சாதிய இட ஒதுக்கீடு செய்யப்பட்டது.

● மகாராஷ்டிர அரசின் புதிய குடியிருப்பு திட்டத்துக்கு சாதி வெறியர்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர் குடியிருப்புகள் சாதிவாரியாக தனித்தனியே அமைய வேண்டுமென அவர்கள் கோரியுள்ளனர். நிலநடுக்கத் தால் பாதிக்கப்பட்ட 83 கிராமங்களுக்கு, அரசு ஒதுக்கி யுள்ள வீட்டு மனைகள்கூட, முன்பு அவர்கள் எந்த அளவு நிலம் வைத்திருந்தார்கள் என்பதைப் பொருத்தே ஒதுக்கப்பட்டுள்ளது.

● பூகம்பப் பேரழிவில் சிக்கி மாண்டவர்களில் யார் மேல்சாதி, யார் கீழ் சாதி என்று இனம் காண முடியாத தால், சாதிவெறி பிடித்த துணை ராணுவப்படைகள், பிணங்களை எரிக்கவோ, புதைக்கவோ செய்ய மறுத் தன. பாதிக்கப்பட்ட மக்களும் சில தன்னார்வக் குழுக்க ளுமே இப்பணியைச் செய்தன.

● கோடி கோடியாய் நிவாரண நிதி குவிந்துள்ளதாக அரசு பெருமைப்பட்டுக் கொள்கிறது. ஆனால் பாதிக்கப் பட்ட மக்களோ இன்னமும் திறந்த வெளியிலே குடும்பம் குடும்பாக வேதனையில் தவித்துக் கொண்டிருக்கிறார் கள்.

● எரிகிற வீட்டில் பிடுங்கியவரை லாபம் என்று நிவா ரண உதவிக்காக வெளிநாடுகளிலிருந்து வந்த பொருட் களை அதிகாரிகளும், போலீசும், ஓட்டுப் பொறுக்கித் தலைவர்களும் கொள்ளையடித்துச் செல்கின்றனர். லத் தூரிலுள்ள சுங்கச் சாவடி அதிகாரிகள் அமெரிக்காவிலி ருந்து வந்த புடவைகளையும் போர்வைகளையும் பதுக் கிக் கொண்டுள்ளதைக் கண்டு உள்ளூர் மக்களே போலீசி டம் புகார் கொடுத்தனர். துணிகளும் உணவுப் பொருட்க ளும் கொண்ட லாரியை மடக்கி உள்ளூர் காங்கிரசு மற் றும் குடியரசுக் கட்சித் தலைவர்கள் அபகரித்துச் சென்ற னர். சில இடங்களில் நிவாரணப் பொருட்களைப் பறித் துக் கொண்ட போலீசார் அவற்றை தமது ஏஜண்டுகள் மூலம் கள்ளச் சந்தையில் விற்றுக் கொடுக்கின்றனர். பல் வேறு தன்னார்வக் குழுக்களும், ஜனதாதளத் தலைவர் மிருணாள் கோரேவும் இவற்றை அம்பலப்படுத்தி புகார் செய்தும்கூட இன்று வரை நடவடிக்கை எடுக்கப்பட வில்லை.



## நாகா-குக்கி இனச்சண்டை: போராளிகளின் திசைத்தவறுகள்

மணிப்பூர் மாநிலத்தில் நாகா-குக்கி இனங்களுக்கி டையே தொடரும் தீராத மோதல்களின் விளைவாக அம்மாநிலமே சுடுகாடாக மாறிவருகிறது. கடந்த செப் 19-ந் தேதியன்று சில்தான் கிராமத்தில் 20-க்கும் மேலான பச்சிளம் குழந்தைகள் கோடரியால் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளனர். கிராம மக்கள் தாக்குதலுக்கு அஞ்சி ஓடியோடியதும் அக்கிராமமே நாகர்களால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டது. கடந்த செப்டம்பர் மாதத் தில் மட்டும் இதுபோன்ற திடீர் தாக்குதல்களில் 500-க்கும் மேலானோர் பலியாகியுள்ளனர். லாசன் கிரா மத்தில் 10 குக்கிகள் உயிரோடு கொளுத்தப்பட்டனர். முதியவர்களின் கைகள் கட்டப்பட்டு கோடரியால் வெட் டிக் கொல்லப்பட்டுள்ளனர்.

மணிப்பூரில் பெரிய தேசிய இனமாகிய மைத் இனத்தவர்கள் நீண்ட காலமாக சுய நிர்ணய உரிமை கோரி ஆயுதமேந்திப் போராடி வருகின்றனர். சிறு பான்மை இனத்தவர்களான நாகர்களும், குக்கிகளும் சுயாட்சி உரிமை கோரிப் போராடி வருகின்றனர். மணிப் பூர் மாநில ஓட்டுப் பொறுக்கிகளோ சிறுபான்மை இனத் வரைப் பகடைக் காயாக்கிக் கொண்டு இனவெறி தீயைக் கிளறிவிட்டு குளிர் காய்ந்து வருகின்றனர். குறிப் பாக தற்போதைய முதல்வர் தொரேந்திர சிங்கும் அவ ரது கூட்டணி மந்திரிசபையில் உள்ள கெய்சிங்குக்கு இடையே அதிகாரப் போட்டி நாய்ச்சண்டையாக முற்ற தொடங்கியதும், குக்கி இனத்து எம்.எல்.ஏ.க்களைத் தன் பக்கம் திரட்டிக் கொண்டு கெய்சிங்கை முதல்வர் வீழ்த்த முயன்றார். குக்கிகளுக்கு விரைவில் மாவட்ட சுயாட்



படிப்பகம்

www.padippakam.com

ஃன்சில் அமைக்கப் போவதாகவும் அறிவித்தார். இத ால் ஆத்திரமடைந்த நாகர்கள், எதிரிகளின் சூழ்ச்சி ளை அம்பலப்படுத்துவதற்குப் பதிலாக, தமது குட்டி தலாளித்துவ தலைமையின் காரணமாக, குக்கிக ளயே எதிரிகளாகப் பாவித்து இனவெறிக்குப் பலியா னர். கடந்த ஆண்டிலிருந்தே நாகா-குக்கி இனங்களுக் டையே சிறியதும் பெரியதுமாக நடந்துவந்த இன வறி மோதல்கள் இன்று மேலும் உக்கிரமடைந்துள்ளது. நிலத்தின் பல பகுதிகளில் ராணுவம் குவிக்கப்பட்டு, றிவிக்கப்படாத ராணுவ ஆட்சியே மணிப்பூரில் நிறு ப்பட்டுள்ளது. பாலியல் வன்முறை, கும்பல் கற்ப ப்பு, மோதலில் இறந்ததாகச் சுட்டுக் கொல்வது, மிரு தனமான சித்திரவதை என ராணுவ கும்பல் நடத்தும் ட்டூழியங்களால் மணிப்பூர் ரணகளமாகிக் கிடக்கிறது.

இதேபோல அசாமில் போடோ இனத்தவர்கள். ாடோ அல்லாத சிறுபான்மையினரான கப்ரி, மீஷிங், லுங், திவா, ராபா இனத்தவர்கள் மீது காட்டுமிராண் தனமான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர். சிறு ன்மை இனத்தவர்கள் முஸ்லீம்கள் மற்றும் பர்மீய ம்சா வழியினர் என்பதால் இனவெறியோடு இந்து வறி போதையும் தலைக்கேறி நரவேட்டையாடி வரு ன்றனர். கோக் ராஜ்கர், போங்கைகோன், நல்பாரி வட்டங்களில் போடோக்கள் நடத்தி வரும் தாக்குதல் ால் ஏறத்தாழ 2 லட்சம் சிறுபான்மையினர் இன்று கதிகளாகியுள்ளனர். போடோ ஒப்பந்தத்தில் சிறுபான் மயினர் பற்றியும், பிராந்திய எல்லையைப் பற்றியும் ளிவாக வரையறுக்காமல் ஆட்சியாளர்கள் செய்த ழ்ச்சியே இப்போதைய இனவெறிப் படுகொலை க்கு அடிப்படையாக உள்ளது. ஒப்பந்தப்படி வாக்கா பட்டியல் திருத்தப்படாததால், ஒரு சில பகுதிகளில் றுபான்மை இனத்தவர்களின் ஆதிக்கம் பெருகிவிடும் ன்று ஆத்திரமடைந்து, அவர்களை வெளியேற்றும் ாக்கத்தோடு இத்தாக்குதல்களைப் போடோக்கள் த்தி வருகின்றனர். சுயநிர்ணய உரிமைக்காக ம், சுயாட்சி உரிமைக்காகவும் நீண்ட காலமாகப் ாராடி வரும் வட கிழக்கிந்திய தேசிய இனங்கள், து குட்டி முதலாளித்துவ தலைமையின் காரணமாக னவெறிக்குப் பலியாகி அடிக்கடி திசை தவறி சீரழிந்து ருகின்றன. இனவெறித் தீ மூட்டி குளிர்காயும் ஆட்சி ளர்களோ, வடகிழக்கிந்தியாவை இரத்த வெள்ளத் ் மூழ்கடித்து 'தேசிய ஒருமைப்பாட்டை' நிலைநாட் துடிக்கின்றனர். இனவெறி - இந்துவெறிகளுக்கு எதி க ஐக்கியப்பட்டு பாட்டாளி வர்க்கத் தலைமையைக் டியமைத்து போராட்டத்தை முன்னேடுத்துச் செல்லா டில், வடகிழக்கிந்தியா குருதிச் சேற்றில் மூழ்கிவிடும் பாயமே நீடிக்கிறது.

## நேற்று சோமாலியா இன்று ஹெய்தி

சோமாலியாவைப் போலவே, மத்திய அமெ காவிலுள்ள சின்னஞ்சிறு நாடான ஹெய்தியில் அமை யையும் ஜனநாயகத்தையும் நிலைநாட்டுவது என்ற யரில் அந்நாட்டை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள மெரிக்கா, இப்போது புதிய நெருக்கடி புதைசேற்றில் கிக் கொண்டுள்ளது.

ஹெய்தியின் சர்வாதிகார துவாலியர் கும்பல் வீழ்த் பட்ட பிறகு, அமெரிக்க அடிவருடியும் கத்தோலிக்க மியாருமான அரிஸ்டைடு அந்நாட்டின் அதிபரானார். ாண்டுகளுக்கு முன்பு அரிஸ்டைடு ஆட்சியும் தூக்கி றியப்பட்டு ராணுவக் கும்பல் ஆட்சியைக் கைப்பற் கொண்டது. அதிபரும் அவரது எடுபிடிகளும் அமெ காவுக்குத் தப்பியோடி தஞ்சம் புகுந்தனர். "ஜனநா முறைப்படி அரிஸ்டைடுதான் அதிபர்; ஹெய்தியில் ண்டும் ஜனநாயகத்தை நிலைநாட்டுவோம்" என்று றிக் கொண்டு அமைதிப்படை என்ற பெயரில் அமெ ரிக்கா தனது படைகளைக் குவித்து ஹெய்தியை ஆக்கிர மித்துக் கொண்டது. ஐ.நா. மன்றமும் அமெரிக்காவின் அடாவடித்தனத்தை நியாயப்படுத்தியதோடு, ஹெய்தி மீது பொருளாதாரத் தடைகளையும் விதித்தது. பின்னர் கடந்த ஜூலையில் ராணுவக் கும்பலுடன் ஓர் சமரச



ஒப்பந்தம் கையெழுத்தானது. இதன்படி, அக்டோபர் இறுதிக்குள் ராணுவக் கும்பல் பதவி விலகி அதிகாரத்தை அரிஸ்டைடு கும்பலிடம் ஒப்படைக்க வேண்டும்; ஜனநா யகம் நிலைநாட்டப்பட்டதும் அமெரிக்கப்படைகள் வெளியேற வேண்டும் என்றும் முடிவானது.

ஆனால் அமெரிக்கா, தனது அடிவருடி அதிபர் அரிஸ்டைடை ஆட்சியில் அமர்த்தும் நோக்கத்தோடு, ஒப்பந்தத்தை மீறி மேலும் படைகளை அக்டோபர் துவக் கத்தில் ஹெய்திக்கு அனுப்பியது. அதிகாரச் சுவை கண்ட ராணுவக் கும்பலோ இந்நடவடிக்கையை எதிர்த்து, கடந்த அக். 10-ஆம் நாளன்று அமெரிக்கப் போர்க்கப் பல் மீதே தாக்குதல் நடத்தி, படைகளை நாட்டுக்குள் நுழைய விடாமல் துரத்தியடித்தது. "ஒப்பந்தத்தை மீறி ஹெய்தியின் உள் விவகாரங்களில் அமெரிக்கா தலையி டுவதை ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம்" என்று ராணுவத் தலைமை தளபதி செட்ராஸ் கொக்கரித்தார்.

ஆத்திரமடைந்த அமெரிக்கா, ஆறு போர்க் கப்பல் களை ஹெய்திக்கு அனுப்பி அந்நாட்டை முற்றுகை யிட்டு, ராணுவத் தளபதிகள் சரணடையாவிட்டால் தாக் குதல் நடத்துவோம் என்று அச்சுறுத்துகிறது. ஏகாதிபத்தி யங்களின் கைப்பாவையாகிவிட்ட ஐ.நா. மன்றமும் அமெரிக்காவின் 'பீரங்கிப் படகுத்தூது' நடவடிக்கையை நியாயப்படுத்தி, மீண்டும் பொருளாதாரத் தடைகளை விதிக்கப் போவதாக எச்சரித்துள்ளது.

**அமெரிக்க ராணுவ முற்றுகையை எதிர்த்து ஹெய்தி இளைஞர்கள் ஆர்ப்பாட்டம்**

தற்போது ஆட்சியிலுள்ள ராணுவக் கும்பலும் அமெரிக்க அடிவருடிகள்தான் என்றாலும், அதிகாரச் சுவையின் காரணமாகவே அமெரிக்காவை எதிர்த்து நிற் கிறது. ராணுவமும் முன்னாள் அதிபர் அரிஸ்டைடும் அதிகாரத்தைப் பங்கிட்டுக் கொள்ள வேண்டும்; முன்பு ஆட்சிக் கவிழ்ப்பில் ஈடுபட்ட ராணுவத்தினருக்கு பொது மன்னிப்பு வழங்க வேண்டும் என்றே ராணுவத் தளபதி சத்ராஸ் கோரியுள்ளார். இதற்காக அமெரிக்காவுடன் சம ரசப் பேச்சு வார்த்தை நடத்த தயாராக உள்ளதாகவும் கூறுகிறார்.

ஆனால், அமெரிக்காவுக்கு எதிர்ப்பு காட்ட ராணு வக் கும்பல் மேற்கொண்ட நடவடிக்கையானது ஹெய்தி மக்களிடம் வேறொரு விளைவை ஏற்படுத்திவிட்டது. "அமெரிக்க ஏகாதிபத்தியமே வெளியேறு!" என்று ஹெய்தி மக்கள் ஏகாதிபத்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங் களை தீவிரப்படுத்தி வருகின்றனர். துரோகி அரிஸ்டைடு ஆட்சியைத் திணிக்காதே என்று முழக்கமிட்டுக்

படிப்பகம்

கொண்டு ஆர்ப்பாட்டம் செய்த ஹெய்தி மக்கள், பிரின்ஸ் துறைமுகத்தில் வந்திறங்கிய அமெரிக்கப் போர் வீரர்களையும் தாக்கி விரட்டியடித்துள்ளனர்.

ஜனநாயகம், அமைதியை நிலைநாட்டுவது என்ற போர்வையில் அமெரிக்கா நடத்தும் ஆக்கிரமிப்பு - மேலாதிக்க நடவடிக்கைகள் இன்று உலகம் முழுவதும் மேலும் அம்பலமாகி வருகிறது. சோமாலியாவில் அதன் ஜனநாயக முகமூடி கிழிந்து கந்தலாகித் தொங்குகிறது. அமெரிக்க சிப்பாய்களைக் கொன்று, நாயைப் போல தெருவில் கட்டி இழுத்துச் சென்று, எச்சிலை உமிழ்ந்து, காலால் எட்டி உதைத்து சோமாலிய மக்கள் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகிறார்கள். அத்தகைய தொரு நிலைமையையே ஹெய்தியிலும் அமெரிக்கா எதிர்கொள்ளப் போகிறது.

**ஆட்சியைப் பிடித்த சந்தர்ப்பவாதி பெனாசிருக்கு தங்கக் கிரீடம் பரிசு அளிக்கும் தொண்டர்**

## பாக். தேர்தல் முடிவுகள் மீண்டும் செக்குமாட்டுப் பாதையில்

பாகிஸ்தானில் அண்மையில் நடந்தேறிய தேர்தலும் அதன் முடிவுகளும் நாடாளுமன்ற ஜனநாயகத்தின் இழிந்த இறுதி நிலையை மீண்டும் நிரூபித்துள்ளது. தேர்தல் வன்முறை காரணமாகவும், இரு பெரும் ஆளும் கட்சிகள் மீது மக்கள் நம்பிக்கை இழந்ததாலும் இத்தேர்தலில் 40% மக்களே வாக்களித்தனர். பெனாசிரின் பாக். மக்கள் கட்சி 86 இடங்களையும், முன்னாள் பிரதமர் நவாஸ் செரீபின் முஸ்லிம் லீக் கட்சி 72 இடங்களையும் கைப்பற்றியது. இருப்பினும் 217 பேர் கொண்ட நாடாளுமன்றத்தில் எந்தக் கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெற முடியாமல் தொங்கு நிலையில் சிக்கிக் கொண்டது. இவ்விரு கட்சிகளுமே சுயேட்சைகள் மற்றும் உதிரிக் கட்சிகளின் தயவில் ஆட்சி அமைக்க தீவிரமாக முயன்றன. அதைத் தொடர்ந்து சுயேட்சை எம்.பி.க்களின் 'குதிரை வியாபாரம் கொடி கட்டிப் பறந்தது. ஒப்பீட்டளவில் அதிக இடங்களைப் பெற்று, ராணுவ கும்பலின் மறைமுக ஆதரவு பெற்றுள்ள பெனாசிரின் கட்சியே சுயேட்சைகளின் தயவில் இப்போது ஆட்சி அமைத்துள்ளது.

முன்பு, ராணுவ சர்வாதிகாரத்தை எதிர்த்து வீரதீர சவடால் அடித்து ஆட்சியைப் பிடித்த பெனாசிர், அவரது ஆட்சி கலைக்கப்பட்ட பிறகு, ராணுவ கும்பலுடன் சந்தர்ப்பவாதமாக கூட்டு சேர்ந்து கொண்டு பெட்டிப் பாம்பாகிவிட்டார். முன்பு 'ஜனநாயக விடிவெள்ளி' என்று பெருமையாக அழைக்கப்பட்ட பெனாசிர் இப்போது பிழைப்புவாத அரசியல் நாயகியாக அம்பலப்பட்டுப்போயுள்ளார். பாக். ஜனநாயகத்தை ராணுவக் கும்பலிடம் அடகு வைத்துவிட்ட பிறகு பெனாசிர் இப்போது மயிரிழைப் பெரும்பான்மையில் ஆட்சி அமைத்தாலும் அது தொடர்ந்து நீடிப்பதற்கான அடிப்படையே இல்லை. ராணுவக் கும்பல் எந்த நேரமும் ஆட்சியைக் கவிழ்க்கலாம் என்பதால் நித்திய கண்டம், பூரண ஆயுசு என்ற நிலைமைதான். போதாக்குறைக்கு பெனாசிரின் கட்சியே ஒரு கூட்டணிக் கட்சிதான்; அதிலே தீராத கோஷ்டித் தகராறுகள். இதோடு, இன்று பெனாசிரை ஆதரிக்கும் சுயேட்சைகள் நாளை, காலை வாரிவிடலாம். சுருக்கமாகச் சொன்னால், பெருகிவரும் நாடாளுமன்ற அராஜகத்தைக் காட்டி, ராணுவக் கும்பலே மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றிக் கொள்வதற்கான அபாயமே நீடிக்கிறது. பாக். மக்கள் போராடிப் பெற்ற அற்ப உரிமைகளையும் பெயரளவிலான ஜனநாயகத்தையும் ராணுவ கும்பலின் காலடியில் வைத்துவிட்டு பாக். நாடாளுமன்ற ஜனநாயகம் மீண்டும் செக்குமாட்டுப் பாதையில் சென்று கொண்டிருக்கிறது.



## ஐரோப்பாவை அச்சுறுத்தும் கோடிக்கால் பூதம்

ஐரோப்பாவை மீண்டும் கோடிக்கால் பூதம் அச்சுறுத்தத் தொடங்கிவிட்டது. கடந்த அக்டோபர் 5-ம் நாளன்று பிரெஞ்சுத் தொழிலாளர்கள் நடத்திய நாடு தழுவிய வேலை நிறுத்தப் போராட்டத்தைக் கண்டு ஏகாதிபத்தியவாதிகள் பீதியில் உறைந்து போயுள்ளனர். தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டுவது, அரசு நிறுவனங்களைத் தனியாருக்குத் தாரை வார்ப்பது, உற்பத்தி சார்ந்த ஊதியம், ஊதிய முடக்கம், மருத்துவச் சலுகை குறைப்பு, கணக்கற்ற வரிகள், வேலையின்மை முதலானவற்றை எதிர்த்து ஐந்து தொழிற் சங்கங்களின் தலைமையில் நடந்த இவ்வேலை நிறுத்தப் போராட்டத்தால் பிரான்சு நாடே ஸ்தம்பித்துப் போனது. 1990-க்குப் பிறகு நடந்த மிகப் பெரிய போராட்டமாக இது கருதப்படுகிறது.

ஏகாதிபத்திய உற்பத்தி முறையால் எழும் நெருக்கடிகளின் விளைவாக பிரான்சு நாட்டில் 35 லட்சம் பேர் வேலையின்றித் தவிக்கின்றனர். பிரெஞ்சு மக்கள் தொகையில் இது ஏறத்தாழ ஆறில் ஒரு பங்காகும். பிரான்சு மட்டுமின்றி ஐரோப்பிய ஏகாதிபத்திய நாடுகள் முழுவதும் வேலையின்மை தீராத நோயாகப் பரவி வருகிறது. ஐரோப்பாவில் மட்டும் ஏறத்தாழ 2 கோடி பேர் வேலையின்றி அவதிப்படுகின்றனர். இவர்களில் கால் பங்கினர் முன்னாள் போலிக் கம்யூனிச நாடுகளைச் சேர்ந்தவர்கள். அதிலும் குறிப்பாக, கிழக்கு ஜெர்மனியில் ஆலை மூடல், ஆட்குறைப்பு, லே-ஆப் காரணமாக வேலையற்ற தொழிலாளர்களின் எண்ணிக்கை லட்சக் கணக்கில் தொடர்ந்து அதிகரித்துக் கொண்டே போகிறது.


இதன் காரணமாக, கடந்த அக். 3-ம் தேதியன்று நடைபெற்ற ஜெர்மனி இணைப்பு மூன்றாமாண்டு நிறைவு நாள் விழா உற்சாகமாக நடைபெறவில்லை. கிழக்கு ஜெர்மனியின் பல பகுதிகளில் மேற்கு ஜெர்மனியின் ஆதிக்கத்துக்கு எதிராக சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. சிதைக்கப்பட்டு நினைவுச் சின்னமாக நிற்கும் பெர்லின் மதிற்சுவரில், "பெர்லின் சுவரை மீண்டும் நாங்கள் விரும்புகிறோம்" "நவீன நாஜிகளுக்கு கி.ஜெர்மனியைக் காலனியாக்க முடியாது" என்கிற முழக்கங்கள் புதிதாக எழுதப்பட்டுள்ளன.

கம்யூனிசம் என்பது மாயப்பிசாசு; முதலாளித்துவ ஜனநாயகம்தான் ஒரே தீர்வு என்று எகிறிக் குதித்த ஏகாதிபத்தியவாதிகளோ, பெருகிவரும் நெருக்கடியையும் மக்களின் ஆத்திரத்தையும் கண்டு விழி பிதுங்கி நிற்கின்றனர்.



படிப்பகம்

www.padippakam.com



# ஜெயா ஆசியுடன் லாக்அப் கொலை கற்பழிப்புகள்

போலீசு மற்றும் கிரிமினல்களின் காட்டாட்சி இது என்பதைக் குரூரமாக - கேள்வி கேட்பாறின்றி நிகழ்த்திக் காட்டுகிறார் ஜெயலலிதா. இதற்காகப் பாராட்டி வேண்டுமானால் ஜெயலலிதாவிற்கு தனி பட்டமே கொடுக்கலாம்! ஏதோ ஒரு நந்த கோபாலுக்கும் பத்மினிக்கும் மட்டுமே (சிதம்பரம் அண்ணாமலை நகர் போலீசால் கொலை செய்யப்பட்ட, கற்பழிக்கப்பட்ட அப்பாவிகள்) அநீதி இழைக்கப்பட்டிருந்தால் 'சோ' முதலானவர் கூறுவதுபோல ''தற்செயலானது, தனிப்பட்ட சிலரின் தவறுகள்'' என்று விட்டுவிடலாம்! ஆனால் போலீசிற்கு அதுவே தொழிலாக இருக்கும் பொழுது - ஏராளமான நந்தகோபாலும் பத்மினிகளும் பாதிக்கப்படும்பொழுது போலீசு அமைப்பையும் இந்த ஆட்சியையும் ஒட்டுமொத்த இச்சமூக அமைப்பையும் குற்றவாளியாக்காமல் எப்படி இருக்க முடியும்?

வீதியில், போலீசு நிலையத்தில், நீதி மன்ற வளாகத்தில் என எங்கும் பெண்கள் கற்பழிக்கப்படுகிறார்கள்; அப்பாவிகள் கொல்லப்படுகிறார்கள். பத்திரிகைகளின், எதிர்க்கட்சி அரசியல்வாதிகளின் கண்களுக்கும் காதுகளுக்கும் எட்டுகிற நிகழ்ச்சிகள் ஒரு சிலவே இந்தளவு என்றால், எட்டாதவை எத்தனையோ! 'கிடப்பது கிடக்கட்டும் கிழவியைத் தூக்கி மனையில் வை' என்கிற கதையாக, போலீசுக்கு ஜெயலலிதா தரும் பாராட்டுகளும் பதக்கங்களும் குறையவே இல்லை. அண்மையில் நெல்லை, சிதம்பரனார் மாவட்டங்களில் நடந்த நிகழ்ச்சிகளில் சிறந்த சேவை புரிந்தோர் என ஒரு பெரிய பட்டாளத்திற்கே பதக்கங்களை வாரி வழங்கினார் ஜெயலலிதா. போலீசாரின் சாதனைகளை விளக்கி, சட்டம் - ஒழுங்கு பாதுகாக்கப்பட்டுள்ளதை எண்ணி புளகாங்கிதம் அடைந்தார்; பெண்கள் போலீசு நிலையங்களைத் திறந்து வைத்து வீர உரையாற்றினார். ஆட்சியைக் கவிழ்க்க பயமுறுத்தும் வாழப்பாடி கும்பலுக்கு வேண்டுமானால் இவை பதிலடியாக இருக்கலாம். ஆனால் தமிழக மக்களுக்கு உண்மையின் பரிணாமம் தெரியும். அண்மை காலத்தில் கடந்த ஜூன் மாதம் முதல் இன்று வரை நடந்த போலீசு லாக் அப் கொலைகளும், கற்பழிப்புகளும் தமிழகப் போலீசின் 'சிறந்த சேவைக்கு', ஜெயா ஆட்சியின் 'சட்டம் - ஒழுங்கு அமைதி'க்கு எடுத்துக்காட்டுகள்.

● தங்கம்மாள் - சேலம் மாவட்டம் தலைவாசல் 'காவல்' நிலைய மிருகங்களால் கற்பழிக்கப்பட்ட அபலை. ஊனத்தூர் கிராமத்தைச் சேர்ந்த சுப்பிரமணியன் என்பவர் கொலை தொடர்பாக, சந்தேகப்பட்ட இளைஞர்களை எல்லாம் கைது செய்து 'விசாரித்தது' போலீசு. இப்பகுதியைச் சேர்ந்த சிறிய கேடியான பழனிமுத்து, போலீசின் சித்திரவதைக்குப் பயந்து தலைமறைவாகிவிட்டார். ஆனால், தாய், மனைவி மற்றும் குழந்தைகளை இழுத்துப் போய் சித்திரவதை செய்தது போலீசு. இதைக் கேள்விப்பட்டு போலீசிடம் சரணடைந்தார் பழனிமுத்து. மனைவி தங்கம்மாளை மட்டும் வைத்துக் கொண்டு மற்றவர்களை விடுவித்த போலீசு, இக்கொலையை பழனிமுத்து செய்ததாகவும் அதற்கு தங்கம்மாளையே சாட்சியாக்கவும் முனைந்தது. இதற்கு இணங்க மறுத்த தங்கம்மாளை பூட்ஸ் காலும், லத்தியும் பதம் பார்த்தன. ''இப்பதாய்யா ஆபரேசன் செஞ்சுருக்கேன்... தயவு செஞ்சு விட்டுருங்கய்யா...'' என்ற தங்கம்மாளின் கெஞ்சலைப் பொருட்படுத்தவில்லை. 3 போலீசு மிருகங்கள் அவரை பலாத்காரப்படுத்தி தமது வெறியை தணித்துக் கொண்டன. தங்கம்மாள் சாட்சிக் கையெழுத்து போடும் வரை இவ்வாறு குதறப்பட்டார். நீதி மன்றத்தின் மீது நம்பிக்கை வைத்து நீதிபதியிடம் உண்மையை சொன்னார். ஆனால் இங்கு செவிடன் காதில் ஊதிய சங்காகிவிட்டது. ''ஆத்தூர் கோர்ட்டிலே இவங்களோட அக்கிரமத்தைச் சொன்னேன்... காதிலேயே வாங்காம எம் புருஷனை ஜெயில்ல அடைச்சுட்டாங்கய்யா'' என்று கதறுகிறார் தங்கம்மாள்.

● விஜயா - செஞ்சி அருகே உள்ள அத்தியூரைச் சேர்ந்த மலைசாதிப் பெண். அனந்தபுரம் போலீசு மற்றும் புதுவை போலீசால் கற்பழிக்கப்பட்ட அபலை. இவரது உறவுக்காரரான வெள்ளையனை திருட்டு வழக்குகள் தொடர்பாக தேடிய புதுவை போலீசார், தமிழகப் போலீசாரின் உதவியை நாடினர். விஜயாவையும் அவரது பெற்றோர்களையும் இன்னும் சிலரையும் கைது செய்தனர். வெள்ளையனைத் தேடி அவனது நிலமுள்ள வெள்ளாமை கிராமத்திற்குச் சென்ற போலீசு விஜயாவை மட்டும் தனியே வேனிலிருந்து இறக்கி அடையாளம் காட்டும்படி அழைத்துச் சென்றது. வெள்ளையனின் கொல்லையில் வைத்து விஜயாவைப் பலாத்காரப்படுத்தியது. ''விட்டுடுங்க... விட்டுடுங்க...'' என்று கதறியவளை ''சத்தம் போட்டா இங்கேயே கொன்னுடுவோம்'' என்று மிரட்டி 5 மிருகங்கள் அவளை அனுபவித்தன. மயங்கி விழுந்த பின்னரே 'இரக்கப்பட்டு' விட்டுள்ளனர். பின்னர் செய்தியறிந்த பெற்றோர்கள் புகார் கொடுக்கச் சென்று அனந்தபுரம் சப் இன்ஸ்பெக்டர் கிருஷ்ணமூர்த்தியால் மேலும் அவமானப்பட்டுத் திரும்பினர். ''இதையெல்லாம் பெரிசா சொல்ல வந்துட்டீங்க... தர்மபுரி போலீசுகாரங்க வருவாங்க... அவங்களையும் அனுப்பறேன்... கவனிங்க'' என்பதே திமிர் பிடித்த மிருகம் கிருஷ்ணமூர்த்தியின் பதில். பிறகு அத்தியூர் இருளர் சங்கத் தலைவர் மூலம் திண்டிவனம் துணை ஆட்சியாளரிடம் முறையிட்டனர். பல அதிகாரிகளின் விசாரணைக்குப்பின்னே ஆதாரமில்லை என்ற அடிப்படையில் இன்று நீதிமன்றத்தில் இவ்வழக்கு இழுபட்டுக் கொண்டுள்ளது.

● கற்பகவள்ளி - சாத்தூர் நீதிமன்ற வளாகத்தில் நீதிபதியின் கையாட்களால் கற்பழிக்கப்பட்ட இளம் பெண். சிவகாசியை அடுத்த திருத்தங்களைச் சேர்ந்த கற்பகவள்ளி நீதிமன்றம் வழியாக தமது உறவினர் ஒருவரை பார்க்க 31-8-93 அன்று சென்றார். அன்று மிலாதி நபி விடுமுறை என்பதால் நீதிமன்றத்தில் இருந்த 'பியூன்' சேகர், 'வாட்ச் மேன்' மாரியப்பன் இருவரும் தனிமையைப் பயன்படுத்தி நீதிமன்ற அறைக்குள்ளேயே ஓடஓட விரட்டி மானபங்கப்ப

படிப்பகம்

www.padippakam.com

டுத்தியுள்ளனர். கற்பகவள்ளியின் அலறல் கேட்டு சாலையில் நின்ற ரிக்ஷாகாரர்கள் ஓடிவந்து இருவரையும் மடக்கிப்பிடித்து நீதிபதிக்கு தகவல் கொடுத்தனர். ஆனால், நீதிபதி முருகனின் காமலீலைகள் மற்றும் அடாவடித்தனங்களுக்கு கையாட்களாக இருப்பவர்கள் இவர்களிருவரும் என்பதால் நடவடிக்கை தலைகீழானது. சாலையில் நின்று விபச்சாரத்திற்கு அழைத்ததாக கற்பகவள்ளி மீது வழக்கு போட்டு 15 நாள் காவலில் வைத்தனர். மாரியப்பனும் சேகரும் அபராதம் கட்டிவிட்டு விடுதலை செய்யப்பட்டனர். இச்செயல் வழக்கறிஞர்களை ஆத்திரத்திற்குள்ளாக்கியது. காமராசர் மாவட்டம் மற்றும் தமிழகத்தில் பல நீதிமன்றங்களிலும் இதைக் கண்டித்து வழக்கறிஞர்கள் ஒரு நாள் நீதிமன்றத்தைப் புறக்கணித்துப் போராடினர். இன்று கற்பகவள்ளி வழக்கு, விசாரணை என்ற கண் துடைப்பு நாடகத்தின் ஒரு காட்சிப் பொருளாகிவிட்டது.

● சுப்பையா - நெல்லை மாவட்டம், சீவலப்பேரி மற்றும் அம்பாசமுத்திரம் போலீசு நிலைய மிருகங்களால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட அப்பாவி. அம்பாசமுத்திரம் போலீசு தேடிக் கொண்டிருந்த கேடிகள் கல்யாணி மற்றும் கோவிந்தன் இருவரில் ஒருவரைக் கைது செய்தது. இக்கேடியிடம் திருடிய பொருள் வாங்கியவர்கள் எனப் பலரை இழுத்துவந்து சித்திரவதை செய்த போலீசு, அப்பொருட்களை அவர்களிடமிருந்து பெற்றும் 'விழுங்கி'க் கொண்டது. இதில் ஒருவர்தான் சுப்பையா. தான், திருட்டுப் பொருள் எனத் தெரியாமல் வாங்கியதை எல்லாம் போலீசிடம் ஒப்படைத்து விட்டார். அதற்கு மேலும் பொருளை வாங்கி மறைத்து வைத்திருப்பதாக சந்தேகப்பட்டு சித்திரவதை செய்தது போலீசு. சுப்பையா, "இல்லை" என்று எவ்வளவோ மன்றாடியும் கேட்காத போலீசு நகக் கண்ணில் ஊசி ஏற்றி, லத்தியால் ஆணுறுப்பைத் தாக்கி கொடுமைப் படுத்தியதில் சுப்பையா இறந்து போனார். ஆத்திரமடைந்த கிராம மக்கள் மாவட்ட ஆட்சியாளர் பங்களாவை முற்றுகையிட்டுப் போராடிய பின்னரே ஆட்சியாளர் விசாரணையைத் தொடங்கினார். இதில் தொகுதி எம்.எல்.ஏ. தர்மலிங்கம் நல்லாசியுடன் எஸ்.ஐ. சண்முக சுந்தரம், சுப்பையா மாரடைப்பால் இறந்ததாகப் போலி மருத்துவச் சான்றிதழ் தயாரித்து வழக்கை மூடி தப்பித்துக் கொள்ள முயல்கிறார்.

● சரவணன் - ஆற்காடு நகர போலீசால் சித்திரவதை செய்து கொல்லப்பட்ட இளைஞர். திருமண வீடு ஒன்றில் புகைப்படக்கருவி திருடு போனது தொடர்பாக சந்தேகப்பட்டு, அப்பாவி சரவணனைக் (பா.ம.க.வைச் சேர்ந்தவர்) கைது செய்து அடித்தே கொன்றது, போலீசு. இதைத் தொடர்ந்து கடை அடைப்பு, பஸ் மறியல் செய்து பகுதி மக்கள் எதிர்ப்புக் காட்டவே போலீசை ஏராளமாகக் குவித்துப் பதட்டத்தைத் தணித்தார்கள். போலீசு, அடித்து சாகவில்லை எனப் பொய் சான்றிதழ் தயாரிக்க முயன்றது. இவ்வழக்கும் விசாரணை என்ற பெயரில் கிடப்பில் கிடக்கிறது.





போலீசால் கொல்லப்பட்ட மாரிமுத்து (இடது), வில்சன்; "கண்டனங்களை பொருட்படுத்தாதீர்" என போலீசிற்கு தட்டிக் கொடுக்கிறார் ஜெயா

● வில்சன் - சென்னை - ராயப்பேட்டை போலீசால் வீதியிலேயே ஓடஓட விரட்டி அடித்துக் கொல்லப்பட்ட இளைஞர். சாலையில் தனது நண்பர்களுடன் குடித்து விட்டு ரகளை செய்ததால் தகவலறிந்து வந்த போலீசின் கையில் வில்சன் மட்டுமே சிக்கியுள்ளார். தனது வெறிதீர லத்தியால், மட்டுமல்ல இரும்புக் கம்பியாலும் அடித்து, மயங்கிய பின் ரத்தம் சொட்ட சொட்ட தெருவிலேயே நாயைப்போல் தரதரவென இழுத்துச் சென்றது. போலீசு நிலையம் செல்வதற்குள் வில்சனின் உயிர் பிரிந்தது. ஆனால் போலீசோ, தாம் துரத்தும்போது ஓடி விழுந்து, அடிபட்டு உயிர் போய்விட்டதாக ஜோடித்து வழக்கை முடித்துவிட்டது.



விஜயா (மேலே), தங்கம்மாள், சுப்பையா - போலீசின் குரூரத்திற்கு சாட்சிகள்

ஏராளமானோர் பார்வையில் நடந்த சம்பவத்திலேயே இப்படி அயோக்கியத்தனம் செய்கிறார்கள் என்றால் தட்டிக்கேட்க ஆளில்லை என்கிற திமிரைத் தவிர வேறென்ன இருக்கும்?

● ராஜாராம் - போலீசுக்கு மாமூல் தரமறுத்ததால் பல்லாவரம் போலீசால் சித்திரவதை செய்து கொல்லப்பட்டார். பல்லாவரத்தில் இவர் ஒரு சிறிய சாராய வியாபாரிதான்; குடிப்பதற்குப் போக்க கூடுதலாக சரக்கு வாங்கி விற்பவர் அவ்வளவுதான். மிகப் பெரிய தொகையை இவரிடம் மாமூல் கேட்டு போலீசு தொல்லை கொடுக்கவே தலைமறைவாகிப் போனார். பிறகு அகப்பட்டுக் கொண்டதும் ராஜாராமை நிர்வாணமாக்கிக் காட்டுத்தனமாக அடித்தே கொன்றது போலீசு. போலீசு நிலையத்தில் உள்ள கிணற்றில் விழுந்து தற்கொலை செய்து கொண்டதாக இவ்வழக்கும் ஜோடிக்கப்பட்டது. இதுவரை இப்படி 5 பேர் பல்லாவரம் போலீசு நிலைய 'கிணற்றில் விழுந்து செத்ததாக'க் கணக்கு உள்ளது. ராஜாராம் கொலைக்குப்பின் பகுதி இளைஞர்கள் திரண்டு போலீசு நிலையத்தை சூழ்ந்து தாக்கினர். இவர்களைக் "கட்டுப்படுத்த" என போலீசு தொடுத்த தாக்குதலால் கலவரம் நடந்ததில் பஸ் டிரைவர் ஒருவரும் அடிபட்டு உயிர்விட்டார்.

● மாரிமுத்து - மதுரை - அவனியாபுரம் போலீசு நிலையத்தின் சித்திரவதையால் இறந்து போன முன்னாள் சாராய வியாபாரி. சாராயம் விற்கும் தொழிலை விட்டுவிட்டு வேறு தொழிலுக்குச் சென்ற மாரிமுத்துவை மாமூல் பாதித்த ஆத்திரத்தில் 5.10.93 அன்று கைது செய்து வந்து







படிப்பகம்

www.padippakam.com

அடித்தே கொன்றது போலீசு. அவனியாபுரம் எஸ்.ஐ. அரசு, ஏட்டு சந்திரன், கான்ஸ்டபிள் ராஜகோபால் ஆகியோரே முக்கிய கொலையாளிகள். பொது மக்கள் சாலைமறியல் செய்த பின்னரே தாசில்தார், மாவட்ட வருவாய்துறை அதிகாரிகளின் விசாரணை நடந்துள்ளது.

பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பாலானோர் சிறுசிறு குற்றவாளிகளாக இருப்பதால் போலீசின் செயலை நியாயப்படுத்திவிடவும் முடியாது. இன்னும் சொல்லப் போனால் இச்சிறு குற்றவாளிகளை உருவாக்கியதே இந்த போலீசு கும்பல்தான்; போலீசுக்குப் பாராட்டுரை, பதக்கங்கள் வழங்கும் ஆளுங் கும்பல்தான். ஆபாசம், சாராயம், போதைப்பொருள், கிரிமினல் ரௌடித்தனம் முதலானவற்றை மக்களிடையே திணித்துக் குற்றவாளிகளை உருவாக்கி வளர்த்து ஆதாயமடைந்தது இவர்கள்தான். வறுமை, வேலையின்மை காரணமாகத் திருடவோ சாராயம் விற்கவோ வருகிறவர்களிடம் உறவுகொண்டு ஊக்குவித்து மாமூல் வாங்கும் போலீசுக்கு அவர்கள்மீது நடவடிக்கை எடுப்பதற்கு என்ன யோக்கியதை உள்ளது? கிரிமினல் ரௌடிகளை பயன்படுத்தி அரசியல் - சுயநல ஆதாயத்திற்காக எதிர்த்தரப்பினர் மீது ஏவிவிடும் ஆளுங்கும்பலுக்கு "குற்றவாளிகள் மீது தானே நடவடிக்கை எடுத்தோம்" என்று வக்காலத்து வாங்குவதற்கு என்ன அருகதையிருக்கிறது?

முன்பெல்லாம் போலீசின் இவை போன்ற நடவடிக்கைகள் அம்பலத்திற்கு வந்தால் ஆட்சியாளர்கள் 'அதிரடி' நடவடிக்கைகள் சிறிதாவது எடுத்துக் காட்டி தம் பட்டமடிப்பார்கள். இப்பொழுதோ ஆட்சியாளர்கள் கண்டு கொள்வதே இல்லை. மக்கள் போராடி சாலைமறியல், முற்றுகை என வந்தபிறகே அதிகாரிகள் நடவடிக்கையில் அதுவும் கண்துடைப்புக்காக ஈடுபடுகிறார்கள். இதற்கும் ஒருபடி மேலேபோய் "அதெல்லாம் சகஜம்தான்", "ஏதோ ஒரு சில இப்படி நிகழ்வது பெரிய விசயமல்ல" என்று நியாயப்படுத்திப் பேசுகிறார்கள். அதுவும் பாமரர்கள் தனியாகச் சென்று முறையிட்டால் திருப்பிக் கொண்டு அவர்களையே திட்டுவதும் மிரட்டுவதும் பொய் வழக்குப் போடுவதும் அதிகாரிகளின் வழமையாகிவிட்டது. அண்மையில் போலீசைப் பாராட்டி பரிசு வழங்கும்போது ஜெயலலிதா, "போலீசு மீது வைக்கும் குற்றச்சாட்டுகளையும், விமர்சனங்களையும் பொருட்படுத்த தேவையில்லை" என்று பேசினார் என்றால் பார்த்துக் கொள்ளுங்கள். போலீசின் அத்துமீறல்கள் அதிகரிப்பதற்குத் தட்டிக்கொடுக்க இதைவிட வேறு ஆள் தேவையா என்ன?

மூன்றுவேலை உணவிற்கும் வழியில்லை; மானத்தை, உரிமையை, உயிரை காப்பாற்றிக் கொள்ளவும் இச்சமூகத்தில் வழியில்லை. மாற்றுவழி தெரியாத பாமர மக்கள், ஒன்று சில தனிநபர்களின் மீது நம்பிக்கைவைத்து மனு, முறையீடு, வழக்கு என முயற்சிக்கிறவர்கள் அல்லது வாய்மூடி நொந்து ஒதுங்கிவிடுவதோ, விரக்தியில் தற்கொலை செய்து கொள்வதோ நடக்கிறது. இவற்றைச் சாதகமாக்கிக் கொண்ட கிசுகிசு பத்திரிகைகள் பரபரப்பூட்டி காசாக்குகின்றன. அரசியல்வாதிகளும், பிற சமூகநல பிரமுகர்களும் மூக்கை நுழைத்துப் புகழ் - ஆதாயம் தேடிக்கொள்கிறார்கள். "பெண்ணின் ஆட்சியில் பெண்களுக்கே இந்த கதியா, முதல்வர் களங்கத்தைப் போக்க வேண்டும்", "போலீசு துறைக்கு இது நல்லதல்ல; தங்களை மாற்றிக் கொள்ளாவிட்டால் மாற்றப்படுவீர்கள்", "போலீசு அதிகாரிகள் நடவடிக்கை எடுக்காவிட்டால் போலீசின்மீதே மக்கள் நம்பிக்கையிழந்து தீவிரவாதிகள் பின்னே போவதுதான் நடக்கும்." "உடனடியாக நீதிமன்ற விசாரணை வேண்டும்", "தனிக் கமிஷன் நியமிக்க வேண்டும்" — இப்படித்தான் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழிகாட்டுகிறார்கள்; இப்பிரச்சினைக்கு மாற்றுத் தீர்வை முன்வைக்கிறார்கள்.

ஆசிரியை கல்பனா சுமதி மற்றும் பத்மினியைக் கற்பழித்த போலீசு மிருகங்களுக்கு என்ன முறையான தண்டனை கிடைத்துவிட்டது இதுவரை? நந்தகோபால் போன்று எண்ணற்றவர்களைக் கொன்ற போலீசு நாய்களுக்கு என்ன தண்டனை கிடைத்துவிட்டது? பாதிக்கப்பட்டவர்களை இழுத்தடித்து அலட்சியப்படுத்தும், காசு வாங்கிக்கொண்டு அநீதிவழங்கும் நீதிபதிகளுக்கு, அதிகாரிகளுக்கு, அரசியல்வாதிக்கு என்ன தண்டனை கிடைத்தது? அல்லது யார் தண்டனை கொடுக்க இருக்கிறார்கள்? இச்சமூக அமைப்பிற்குள் எந்த அமைப்போ, தனிநபரோ, சட்டமோ தண்டனையை வழங்கவே முடியாது. இச்சமூக அமைப்பிற்கு வெளியே மக்களால் தான் இத்தகையோருக்கு தண்டனை வழங்க முடியும்; போலீசுக்குப் புரியும் மொழியிலேயே பதிலடி கொடுக்க முடியும்.

"நடக்குமா?" என்ற கேள்வி மலையேறிவிட்டது. நடக்கிறது; பீகாரில் 5 மாவட்டங்களில் மாவோயிச கம்யூனிச மையம் என்ற நக்சல்பாரி அமைப்பினரின் தலைமையில் லஞ்சம் வாங்கும், மக்கள் பணத்தைச் சூறையாடும், கற்பழிக்கும் அதிகாரிகள், அரசியல்வாதிகள், பண - நில முதலைகள், கிரிமினல்களுக்கு மட்டுமல்ல மக்களிடையே உள்ள குற்றவாளிகளுக்கும் தண்டனை, மக்கள் மத்தியிலேயே உடனுக்குடன் விசாரணை-தீர்ப்பு-நடவடிக்கை என நிறைவேறுகிறது. குற்றங்கள் குறைகின்றன; மக்கள் மீதான அநீதிகள் மறைகின்றன. போலீசின் கிரிமினல்களின் கற்பழிப்பும் கொலையும் நம் வீட்டின் கதவை தட்டுவதற்குள் நாமும் பீகார் மக்களின் வழியில் பயணமாவோம்.

● சுப்பு

## போலீசு அடக்குமுறையை மீறி இயக்கம்

இந்து மதவெறி பயங்கரவாதம் படம் எடுத்த பாம்பாக சீறி நிற்கிறது. அதன் நிழலடியில் தவளையாக மக்கள் வாழும் அபாயம் நிலவுவதால் இந்து மதவெறியை எதிர்த்த பொதுக்கூட்டம் 5.10.93 அன்று தருமபுரி கே.ஆர்.எம்.எஸ். திடலில் நடந்தது. முனிராஜ் (வி.வி.மு) தலைமையில் தஞ்சை காளியப்பன் (ம.க.இ.க.) சிறப்புரையாற்ற, திருச்சி ம.க.இ.க.-வின் 'அசுரகானம்' கலை நிகழ்ச்சியும் நடந்தது. தருமபுரி மாவட்டத்தை பொருத்தவரை போலீசு வைத்ததுதான் சட்டம். அதுவும் புரட்சிகர அமைப்புகள் என்றால் அதன் அடக்குமுறைக் கொடுமைகள் அதிகம். வி.வி.மு.-வின் இந்த பொதுக்கூட்டத்திற்குப் போலீசு அனுமதி மறுத்தது. தொடர்ந்து பல பொதுக் கூட்டங்களுக்கு இதுபோலவே செய்து வருவதால், இம்முறை நீதிமன்றம் சென்று அனுமதி பெற்று பொதுக்கூட்டம் நடத்தப் பட்டது.




ஆனாலும் போலீசு தனது அடக்குமுறையைக் கைவிட்டுவிடவில்லை. பொதுக்கூட்டத்தன்று வந்து பலவிதமாகத் தொல்லை கொடுத்தனர். ஒலிபெருக்கி வைக்கக் கூடாது என்று வற்புறுத்தியது போலீசு. வி.வி.மு.வினர் வேறுவழியில்லாமல் இதற்கும் இணங்கி ஒலிபெருக்கி இல்லாமல் (ஒலி பெருக்கி பெட்டி இரண்டு மட்டுமே போலீசு அனுமதித்தது) பொதுக்கூட்டம் நடத்த முயன்றனர். கூட்டம் தொடங்குகிற நேரத்தில் போலீசு படம் பிடிக்க முயன்றது. வி.வி.மு.வினர் இதைத் தடுத்து "ஆங்கிலேயர் காலத்தில் கூட இம்முறை இல்லை; இது முற்றிலும் ஜனநாயக விரோதம்" என்று பேசினர். போலீசு துணை கண்காணிப்பாளர் விஸ்வநாதன், பிடிவாதமாக எடுத்தே தீருவோம் என்றும் மேலிடத்துக் கட்டளை என்றும் நீங்கள் ஏன் பயப்படுகிறீர்கள் என்றும் கேட்டார். "இது ஜனநாயக விரோதமான முறை என்பதாலேயே தடுக்கிறோம்" என்று விளக்கிய வி.வி.மு.வினர் "சட்டப்படி எங்களுக்கு எழுதிக் கொடுத்துவிட்டு வேண்டுமானால் எடுத்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். இதற்குப் பிறகு ஆத்திரம் தீர கத்திவிட்டு, தடங்கல் செய்யாமல் விலகி கொண்டது போலீசு. இதனால் கூட்டம் தாமதமாகத் தொடங்கப்பட்டது. மழை தூறல் இருந்தபோதும் 200 பேர் அளவில் மக்கள் கூடி நின்று ஆதரவளித்தனர். பேச்சுக்கும் கலை நிகழ்ச்சிக்கும் மக்களிடையே சிறந்த வரவேற்பு இருந்தது. பின்னர், தொல்லை கொடுத்த போலீசே வந்து சிறப்பாக இருந்ததாகப் பாராட்டிச் சென்றது.

படிப்பகம்

www.padippakam.com

# இலங்கை கடற்படை அட்டூழியம்: தத்தளிக்கும் தமிழக மீனவர்கள்

## மத்திய - மாநில அரசுகள் நடவடிக்கையின்றி மெத்தனம் காட்டுகின்றன.

செப்டம்பர் 22-ஆம் நாள். நாகப்பட்டினத்தைச் சேர்ந்த செல்லபாபு, மாரியப்பன், சுந்தர் ராஜு, அஞ்சப்பன் ஆகிய மீனவர்கள் ஆழ்கடலில் மீன்பிடிக்கச் சென்று கொண்டிருந்த போது, வேதாரண்யத்துக்கு கிழக்கே திடீரென இலங்கை கடற்படையினரால் சுற்றி வளைக்கப்பட்டனர். எவ்வித விசாரணையுமின்றி அவர்கள் மீது இலங்கை ராணுவத்தினர் கண்மூடித்தனமாக துப்பாக்கிச் சூடு நடத்தினர். எதிர்பாராத இத்திடீர் தாக்குதலில் செல்லபாபு மாண்டுபோனார். மற்றவர்கள் படுகாயமடைந்து படகிலேயே சுருண்டு விழுந்தனர். "செல்லபாபுவைத் தூக்கிக் கடலில் வீசியெறிந்துவிட்டு ஓடுங்கடா!" என்று இலங்கை ராணுவத்தினர் எச்சரித்தனர். குண்டுக் காயமும் பீதியும் காரணமாக படகிலிருந்த மூவருமே மயங்கி விழுந்துவிட, அனைவருமே மாண்டுவிட்டதாகக் கருதி இலங்கை கடற்படையினர் திரும்பிச் சென்றனர். சிறிது நேரத்திற்குப் பிறகு எப்படியோ தட்டுத்தடுமாறி எழுந்த மாரியப்பன், தூரத்தே சென்ற ஒரு விசைப்படகை உதவிக்கு அழைக்க, செப். 24-ஆம் நாள் அவர்கள் மூவரும் நாகப்பட்டினம் வந்து சேர்ந்தனர்.

அதிர்ச்சியும் வேதனையும் தரக்கூடிய இத்துயரச் சம்பவம் எதிர்பாராமல் நடந்ததல்ல; புலிகள் எனக் கருதி இலங்கை ராணுவம் தவறுதலாக துப்பாக்கிச் சூடு நடத்திய விவகாரமும் அல்ல. கடந்த ஆகஸ்ட் மாத இறுதியிலிருந்தே தமிழக மீனவர்கள் தொடர்ச்சியாக இலங்கை கடற்படையினரின் தாக்குதலுக்கும் துப்பாக்கிச் சூட்டுக்கும் ஆளாகி வருகிறார்கள்.

● ஜூலை 25-ம் தேதியன்று இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 3 மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிச் சூடு நடத்தி படகுகளையும் நாசப்படுத்தியுள்ளனர்.



இலங்கை அரசின் துப்பாக்கிச் சூட்டிற்கு பலியான ராமேஸ்வரம் மீனவர்கள்; தமிழக மீனவர்கள் கடத்தலில் ஈடுபடுவதாகவும், எல்லையைத் தாண்டியதாகவும் பொய் கூறி துப்பாக்கிச் சூட்டை நியாயப்படுத்துகிறது, சிங்கள அரசு.

● செப். 1-ந் தேதியன்று "முத்துக்குமார்" என்னும் மீன்பிடி படகு தாக்கப்பட்டு நீரில் மூழ்கடிக்கப்பட்டது. அப்படகில் சென்ற மீனவர்களில் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். மற்றவர்கள் படுகாயமடைந்தனர். இதே போல செப். 3,4 தேதிகளிலும் தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

● செப். 21-ந் தேதியன்று யேசுராசா என்ற மீனவர் சுட்டுக் கொல்லப்பட்டார். படகிலிருந்த மற்ற இரு மீனவர்கள் குண்டுக் காயங்களுடன் உயிர் தப்பினர்.

இவை யாவும் சர்வதேசக் கடல் எல்லையை தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்ததால் ஏற்பட்ட விளைவுகள் என்று இலங்கை அரசு நியாயப்படுத்துகிறது. குறிப்பாக, யாழ் வளைகுடாப் பகுதியில் புலிகளை சுற்றி வளைத்து நசுக்கும் போர் நடவடிக்கையில் இறங்கியுள்ள சிங்கள இனவெறி அரசு, இப்பகுதியில் படகுப் போக்குவரத்தை முற்றாகத் தடை செய்துள்ளது. இப்போது இப்பிராந்தியத்தில் புலிகள் உட்பட எந்த அந்நியப் படகு நுழைந்தாலும் சுட்டுத்தள்ள அவசர சட்டத்தைப் போட்டுள்ளது. இவற்றைக் காட்டி, தமிழக மீனவர்கள் அத்துமீறி நுழைந்ததாலேயே துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டதாக தனது செயலுக்கு நியாயம் கற்பிக்கிறது, சிங்கள அரசு.

ஆனால், பாரம்பரிய உரிமைப் படியும், 1974-ல் போடப்பட்ட கச்சத்தீவு ஒப்பந்தப்படியும் 14 கடல் மைல்கள் தொலைவுக்குச் சென்று மீன் பிடிக்க தமிழக மீனவர்களுக்கு முழு உரிமை உண்டு. இவ்வொப்பந்தப்படி கச்சத்தீவிலுள்ள அந்தோனியார் கோயிலில் ஆண்டுதோறும் திருவிழா நடத்தவும், தமிழக மீனவர்கள் தமது வலைகளை உலர்த்திக் கொள்ளவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1976-ல் புதிதாகப் போடப்பட்ட மற்றொரு ஒப்பந்தம் இதை முற்றாக மறுதளித்தது. இதன்படி இரு நாடுகளின் அனுமதியின்றி எல்லையைத் தாண்டி மீன் பிடிக்க முடியாது. இருப்பினும் கச்சத்தீவு வரை சென்று தமிழக மீனவர்கள் மீன் பிடிப்பதை இலங்கை அரசு தடுக்கவில்லை.

ஆனால் 1983-க்குப் பிறகு — ஈழத்தில் சுயநிர்ணய உரிமைப் போர் தீவிரமான பிறகு, சிங்கள அரசு தமிழக மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்துவதும், படகுகளைத் தாக்கி அழிப்பதும் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. 1991-ல் இராமேஸ்வரத்திலிருந்து சென்ற 23 மீனவர்களை இலங்கை ராணுவம் கைது செய்து சிறையிலடைத்து சித்திரவதை செய்தது. ஜெகதாபட்டினம் மீனவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியது. அதன் பிறகு தொடர்ச்சியாக கணக்கற்ற தாக்குதல்கள் நடந்துள்ளன. இவை யாவும் இந்தியக் கடல் எல்லையைத் தாண்டிச் செல்லாத போதே நடந்துள்ளதாக



படிப்பகம்

www.padippakam.com

பாதிக்கப்பட்ட மீனவர்கள் கூறுகிறார்கள். தவறுதலாகவோ, வழிதவறியோ எல்லையைத் தாண்டி அந்நிய நாட்டுக் கடற்பகுதியில் நுழைந்து விட்டாலும், அம்மீனவர்களைக் கைது செய்து சம்பந்தப்பட்ட நாட்டு தூதரிடம் முறையிடுவதுதான் சர்வதேச அளவில் ஏற்கப்பட்ட பொது விதியாகும். ஆனால் இலங்கை அரசோ தமிழக மீனவர்களின் உயிரைக் குடிக்கும் தனது காட்டுமிராண்டித்தனத்தையே நியாயப்படுத்தி வருகிறது.

இராமேஸ்வரம் மீனவர்கள் தன்னெழுச்சியாக சாலை மறியல் போராட்டத்தில் இறங்கிய பிறகே, ஜெயா அரசு டெல்லிக்கு 4 முறை கடிதம் எழுதியது. மத்திய அரசோ நிலைமை தீவிரமான பின்னரும்கூட எந்த நடவடிக்கையுமின்றி மெத்தனமாக இருக்கிறது. 'தமிழக மீனவர்கள் மூலம் புலிகள் கடத்தலில் ஈடுபடுகிறார்கள்; தமிழகத்தில் மீண்டும் புலிகள் நடமாட்டம் பெருகிவிட்டது' என்று குற்றம் சாட்டி ஜெயா அரசை மிரட்டும் நோக்கத்துடன்தான் மத்திய அரசு அரசியல் லாபம் கருதி மௌனம் சாதிக்கிறது. துக்ளக் "சோ"வும் அதே நோக்கத்தோடு, தமிழக மீனவர்கள் கடத்தலில் ஈடுபடுவதாலும், எல்லையைத் தாண்டியதாலும் தான் துப்பாக்கிச் சூடுகள் நடந்துள்ளதாக நியாயப்படுத்துகிறார்.

செல்லபாபு பிணமாகத் திரும்பிய செய்தி அறிந்ததும் செப். 24 அன்று நாகை மாவட்டத்தின் கடற்கரையோர 64 கிராம மக்களும் இப்படுகொலையைக் கண்டித்து கிளர்ந்தெழுந்தனர். இப்பிரச்சினைக்கு மத்திய - மாநில அரசுகள் தீர்வு காணாதவரை கடலுக்குச் செல்ல மாட்டோம் என எச்சரித்தது. சாலை மறியல், ரயில் மறியல், கடையடைப்புப் போராட்டத்தில் மீனவர்கள் இறங்கினர். ஆனால் அ.தி.மு.க.வின் மீனவ சாதியைச் சேர்ந்த எம்.எல்.ஏ. கோடி மாரியும், நாகை நகர அ.தி.மு.க. செயலாளரான கள்ளர் சாதியைச் சேர்ந்த சந்திரமோகனும் செய்த சாதிவெறி சூழ்ச்சியால், மீனவர்களின் நியாயமான போராட்டம் கள்ளர் - மீனவர் சாதிக் கலவரமாக திசைதிருப்பப் பட்டது. இக்கலவரத்தின் போது போலீசு நடத்திய துப்பாக்கிச் சூட்டில் அநியாயமாக இரு மீனவர்கள் கொல்லப்பட்டு பலர் படுகாயமடைந்துள்ளனர்.



நாகையில் துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான மீனவர்; அ.தி.மு.க. பிரமுகர்களின் சுயநல அரசியலுக்கு விலை

கலவரத் தீயில் நாகை பற்றி எரிந்து கொண்டிருந்தபோது, அக். 8-ந் தேதியன்று ராமேஸ்வரத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 4 மீனவர்களை இலங்கை கடற்படை சுட்டுக் கொன்றுள்ளது. இக்கோரக் கொலைக்குப் பின்னரே இலங்கையிலுள்ள இந்தியத் தூதர் நரேஸ்வர் தயாள் இலங்கை அரசுக்குக் கண்டனம் தெரிவித்துள்ளார். இந்திய அரசோ, உரிய நடவடிக்கை எடுப்பதாக சம்பிரதாயமாக அறிவித்துள்ளது.

இலங்கை அரசின் காட்டுமிராண்டித்தனத்துக்கு தமிழக மீனவர்கள் இனிமேலும் பலியாவதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. தமது அரசியல் ஆதாயத்துக்காக மெத்தனமாக நடந்து கொள்ளும் மத்திய அரசையும், சாதிவெறிக்கு மீனவர்களைப் பலியிடும் ஓட்டுப் பொறுக்கிகளையும் இனி மேல் நம்பவும் முடியாது. தமிழக மீனவர்களின் உயிருக்கும், பாரம்பரிய உரிமைப்படி கச்சத்தீவு வரை மீன் பிடிக்கவும் உத்திரவாதம் செய்யப்படாத நிலையில், தமிழக மீனவர்களும் உழைக்கும் மக்களும் அணி திரண்டுப் போராடுவதைத் தவிர வேறு வழியும் கிடையாது.

●பாலன்

## சட்டக்கல்லூரி மாணவர்களின் நூதனப் போராட்டம்

"சட்ட பல்கலைகழகத்தை உருவாக்கு; தடைமுறையை நீக்கு; இளம் வழக்குரைஞர்களுக்கு உதவித் தொகை வழங்கு" முதலான 5 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ்நாடு முழுவதும் சட்டக்கல்லூரி மாணவர்கள் தொடர் போராட்டம் நடத்தி வருகின்றனர். மதுரை சட்டக்கல்லூரி மாணவர்கள் முதல் கட்டமாக கல்லூரியில் உள்ளிருப்பு உண்ணாவிரதத்தை மேற்கொண்டனர். 20 பேர் போலீசால் கைது செய்து விடுவிக்கப்பட்டனர். அடுத்து 14-10-93 அன்று சாலை மறியல், ரயில் மறியல் நடத்தி 50-க்கும் மேற்பட்ட மாணவர்கள் கைதாகி பின் விடுவிக்கப்பட்டனர். அடுத்த நாள் மாவட்ட ஆட்சியாளரிடம் பேச வந்த மாணவர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. இதனால் ஆத்திரமுற்ற மாணவர்கள் முழக்கம் எழுப்பியபடியே மாவட்ட ஆட்சியாளர் அறையை முற்றுகையிட்டுப் போராடினர். 15 பேர் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டனர். அடுத்து மதுரை அண்ணா பேருந்து நிலையம் முன்பாக தொடர் உண்ணாவிரதம் இருந்தனர். இறுதியாக 20 மாணவர்கள் கல்லூரி வளாகத்தில் உள்ள 100 அடி உயரமுள்ள தண்ணீர் தொட்டி மீது ஏறி உண்ணாவிரதம் இருந்தனர். இவர்களை கைது செய்ய முயன்றது போலீசு. "குதித்து தற்கொலை செய்துவிடுவதாக" மாணவர்கள் கூறவே அம்முயற்சி கைவிடப்பட்டது. இறுதியாக உயர் அதிகாரிகளும் துணை வேந்தரும் கோரிக்கை தொடர்பாக பேச முன்வந்த பின்னரே போராட்டத்தைக் கைவிட்டனர். இது தொடர்பாக 13 பேரைக் கைது செய்து போலீசு பின்னர் விடுவித்தது. மாணவர்களின் போராட்டத்தை ஆதரித்துப் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி சுவரொட்டி இயக்கம் எடுத்தது.

திருச்சியில் சட்டக்கல்லூரி மாணவர்களில் இரண்டு பேர் முதலில் சாகும்வரை உண்ணாவிரதம் இருந்தனர். இவர்கள் கைது செய்யப்பட்டு மருத்துவமனையில் கட்டாயமாக திரவ உணவு செலுத்தப்பட்டனர். இதைத் தொடர்ந்து கல்லூரி காலவரையின்றி மூடப்பட்டது. மீண்டும் கோரிக்கை பேசி தீர்க்கப்படாமலேயே கல்லூரி திறந்த போதும் மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்து மீண்டும் உண்ணாவிரதம் இருந்தனர். அடுத்து சாலைமறியல் செய்து பெண்கள் 30 பேர் உட்பட 200 பேர் கைது செய்யப்பட்டனர். அடுத்தகட்டமாக திருச்சி தெப்பக்குளம் முதலைகளுக்கு இரையாகும் போராட்டத்தை அறிவித்து ஊர்வலமாக சென்ற மாணவர்கள் கைது செய்து விடுவிக்கப்பட்டனர். போலீசு காவலை - கைதை மீறி குதித்த மாணவர்களும் பின்னர் கைது செய்யப்பட்டனர். மீண்டும் கல்லூரி, 3-11-93 அன்று தேர்வு வரை இழுத்து மூடப்பட்டது.

ஒருமாத காலமாக வெளியூர் மாணவர்கள் பலர், திருச்சியிலேயே தங்கி போராட்டத்தை முனைப்பாக நடத்தியது குறிப்பிடத்தக்கது. ஆனால் சட்டக்கல்லூரி மாணவர்களின் போராட்டம் இறுதியில் பலனின்றி முடிந்ததற்கு முக்கிய காரணம்; போலிக் கம்யூனிஸ்டுகளின் மாணவர் அமைப்பான எஸ்.எப்.ஐ. (SFI) -ன் தவறான வழிகாட்டலே! உண்ணாவிரதம், கவர்ச்சியான போராட்ட முறைகளால் மாணவர்களின் போர்க்குணம் திசைதிருப்பப்பட்டு வீணடிக்கப்பட்டது. எனினும் திருச்சி மாணவர்கள் எஸ்.எப்.ஐ. தலைமையை மீறி தன்னெழுச்சியாக சாலை மறியலில் ஈடுபட்டதையும், போலீசு நிலையத்தில் தன்னை தலைமையாக முன்னிறுத்திய SFI துரோகிகளுக்கு எதிராக குரல்கொடுத்ததையும் பார்க்க முடிந்தது. சரியான ஒரு போராட்டத் தலைமைக் கமிட்டியை கட்டியமைத்து அதன் வழிகாட்டுதலில் கட்டுக்கோப்பாகவும்; பிற கல்லூரி மாணவர்கள், பொதுமக்கள் மத்தியில் சென்று ஆதரவு திரட்டியும் போர்க்குணமிக்க போராட்டங்களைத் தொடுத்திருந்தால் வெற்றி பெற்றிருக்க முடியும்.



படிப்பகம்




● *ஜூலை '93 "இனி" இதழில் இராமதாஸ் தன் கட்டுரையில் "திராவிடர் கழகத்தினர் பகுத்தறிவும் பிரச்சாரம் பத்தாம் பசலித்தனமானது என்று பேசிவந்த வர்க்க சிந்தனைகளால் வசீகரிக்கப்பட்ட இளைஞர்கள் சிறீரங்கம் கோயிலில் கருவறை நுழைவுப் போராட்டத்தில் குதிக்கும் போது, பகுத்தறிவுப் பிரச்சாரத்தை உயிர்மூச்சாகக் கொண்ட திராவிடர் கழகம் குறிப்பிட்டுச் சொல்லும்படி எதையாவது செய்கிறார்கள் என்று நம்மால் மார்தட்டி மகிழ முடிகிறாதா?" என்று எழுதியுள்ளனர். அவ்வாறு தி.க.வின் பகுத்தறிவப் பிரச்சாரம் பத்தாம் பசலித்தனமானது என்று பேசி வந்ததாக நம் அமைப்பினரைப் பற்றி இராமதாஸ் கூறுவதன் மேல் தங்கள் விளக்கம் என்ன?*

**— இரா.முனுசாமி, அதியமான்கோட்டை**

★ இராமதாஸ் பெயரில் வந்த அந்தக் கட்டுரையின் அந்தப் பகுதியை சொல்லுக்குச் சொல் நேரிடைப் பொருளில் எடுத்துக் கொள்ளத் தேவையில்லை. "பகுத்தறிவுப் பிரச்சாரம் பத்தாம் பசலித்தனமானது" "வர்க்க சிந்தனைகளால் வசீகரிக்கப்பட்ட" "மார்தட்டி மகிழ முடிகிறதா?" ஆகிய சொற்கள் நடை அழகிற்காக அப்படி எழுதப்பட்டவை. திராவிடக் கழகத்தின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தை மொத்தமாகக் கேலி செய்தோ, மொத்தமாகக் குறை கூறியோ நாம் நிராகரித்தில்லை. புராண இதிகாசப் புரட்டுகளை அம்பலப்படுத்துவது, தீமிதிப்பது, அலகுகுத்துவது போன்ற பல மூடநம்பிக்கைகளை பொய்ப்பித்துக் காட்டுவது, பெண்ணடிமைத் தனத்தைத் தோலுரிப்பது போன்ற பல பகுத்தறிவுப் பிரச்சாரங்களைச் சரியானவை என்றே கூறிவந்திருக்கிறோம். ஆனால் திராவிடக் கழகப் பகுத்தறிவு பிரச்சாரம் மார்க்சிய - லெனினிய இயங்கியல், வரலாற்றுப் பொருள் முதல்வாத சித்தாந்த அடிப்படையிலானது அல்ல; இங்கர்சால் போன்ற முதலாளித்துவ சிந்தனாவாதிகளின் கடவுள் மறுப்பியல் அடிப்படையிலானது; இதனால் அதன் பகுத்தறிவு நோக்கு தர்க்கம், குதர்க்கம் என்பதாகவும் இயக்க மறுப்பியல் அணுகுமுறை உடையதாகவும் ஒரு சமயம் பொருள்முதல்வாதம், மறு சமயம் கருத்து முதல்வாத அடிப்படையிலானதாகவும் இருப்பதாக உள்ளது என்று விமர்சித்து வந்திருக்கிறோம். அதே சமயம், போலிக் கம்யூனிஸ்டு கட்சிகள் செய்வதைப் போல் தி.க.வின் பகுத்தறிவுப் பிரச்சாரத்தைக் குறை கூறிக்கொண்டே கடவுள், மத நம்பிக்கைகளைப் பின்பற்றவது என்கிற நடைமுறை ஒருபோதும் நம்மிடம் கிடையாது. அவசியமான பகுத்தறிவுப் பிரச்சாரம் செய்து வந்திருக்கிறோம்; நமது 'மந்திரமா, தந்திரமா?" கலை நிகழ்ச்சி போன்றவற்றை இதற்குச் சான்றாகக் கூற முடியம். இதுவரை பகுத்தறிவுப் பிரச்சாரத்தை நாம் புறக்கணித்து வந்ததாகவும், இப்போதுதான் கருவறை நுழைவுப் போராட்டம் மூலம் புதிதாக அப்படிச் செய்வதாவும் பொருள்படும்படி ராமதாஸ் 'இனி' ஏட்டில் எழுதியுள்ளார். ஆனால் பெரியார் இயக்கத்துக்கு வாரிசுரிமை கொண்டாடும் ராமதாஸ், வீரமணி இருவருமே பகுத்தறிவுக்கு முரணான செயல்களில் ஈடுபட்டுள்ளனர். கருவறை நுழைவுப் போராட்டத்தைக் கண்டித்து எதிர்ப்புத் தெரிவித்துள்ளார் வீரமணி; ராமதாசின் வன்னியர் சங்கம் வைத்துக் கொண்டுள்ள தீச்சட்டி (அக்கினிக்கும்பம்)யுடன் கூடிய மஞ்சள் கொடியே பகுத்தறிவுக்கு மாறானது. அதோடு இன்னொன்றையும் சொல்ல வேண்டும். கருவறை நுழைவுப் போராட்டம் ஒரு பகுத்தறிவுப் பிரச்சாரத்துகாக மட்டும் நடத்தப்பட்டதல்ல; சமூக நீதிகாகவும், இந்து மதவெறி பாசிசத்துக்கு எதிரான அரசியல் நோக்கத்துடனும் நடத்தப்பட்டதாகும். தேர்தல் அரசியலில் மூழ்கிப் போயுள்ள ராமதாசுக்கு இதன் முக்கியத்துவம் எங்கே தெரிகிறது!

● *மாவோ இந்தியாவை ஆக்கிரமித்தார்; அவர் நாடு பிடிக்கும் நோக்கத்தோடுதான் இந்தியாவைத் தாக்கி, போரிட்டு சில இந்தியப் பிரதேசங்களைக் கைப்பற்றி சீனா வசம் வைத்துள்ளார் என்று சி.பி.ஐ., சி.பி.எம். கட்சிகளைச் சேர்ந்தவர்கள் கூறுகிறார்களே, இது உண்மையா?*

**— தமிழன் என்கிற சிவாஜி, திருவான்மியூர்.**

☆ இது ஒரு அப்பட்டமான பொய் என்பது நீண்டகாலத்துக்கு முன்பே ஆதாரபூர்வமாக நிருபிக்கப்பட்டுவிட்டது. இருந்த போதும் சி.பி.ஐ. போன்ற போலிகளும், திராவிட இயக்கத்தினர் உட்பட எல்லா இந்திய பிற்போக்கு அரசியல்வாதிகளும் இப்படிப் பிரச்சாரம் செய்து வருகின்றனர்; சி.பி.எம்.-இன் அதிகாரபூர்வ நிலைப்பாடு அதுவல்ல என்றாலும் அதிகாரபூர்வமற்ற முறையில் அப்படி அவதூறு செய்து வருகின்றனர்.

இந்தியாவின் வடக்கு, வடகிழக்குப் பகுதி சீனாவின் திபேத்திய மாநிலத்தின் எல்லையாக உள்ளன. வடக்கில் உள்ள அக்சை சின் பகுதி இமய மலையின் உயர்ந்த மலைமுகடுகளையும், புல் பூண்டுகூட முளைக்காத பனிமூடிய பிரதேசங்களையும் கொண்டது; ஆகவே அதன் எல்லை எப்போதுமே வரையறுக்கப்படாமல் இருந்தது. சீனத்தில் பாசிச பிற்போக்கு சியாங்கே ஷேக் அரசும், திபேத்தின் மதப் பிற்போக்கு தலாய்லாமாவின் அரசும் அடுத்தடுத்த புரட்சியின் மூலம் வீழ்த்தப்பட்டு சோசலிசக் கட்டுமானம் துவங்கியது. திபேத்தியத் தலைநகரையும், சீனாவின் வடமேற்கு மாநிலத் தலைநகரையும் இணைக்கும் புதிய சாலை ஒன்று அக்சை சின் வழியே போடப்பட்டது. இது இந்திய அரசுக்குத் தெரிவிக்கப்பட்டு மாபெரும் சாதனை எனப் பாராட்டவும்பட்டது. ஆனால் பின்னாளில் அமெரிக்க ஏகாதிபத்தியத் தூண்டுதலாலும் நேரு உட்பட இந்தியப் பிற்போக்குவாதிகளின் "அகண்ட பாரத"க் கனவு காரணமாகவும் சீன ஆக்கிரமிப்பாகச் சித்தரிக்கப்பட்டது.

இந்தியா பிரிட்டிஷ் காலனியாக இருந்தபோது, ஏகாதிபத்தியவாதிகளின் அரசியல் உள்நோக்கம் காரணமாக வடகிழக்குப் பகுதியில் ஒருதலைப்பட்சமாக திபேத்தியப் பகுதிக்குள் ஊடுருவி ஒரு எல்லையை வரையறுத்துக் கொண்டார்கள். பிரிட்டிஷ் "சர்வேயர்" பெயரால் மக்மகோன் 'எல்லைக்கோடு' என அழைக்கப்பட்ட அந்த வரையறையை சீனா ஒருபோதும் ஒப்புக்கொண்டது கிடையாது. இதற்காக பிரிட்டிஷ் காலனி அரசோடும் அதன் வாரிசான நேரு அரசோடும் நடந்த பேச்சுவார்த்தைகள் தோற்றுப் போயின. இந்த நிலையில் ஏகாதிபத்தியவாதிகளின் தூண்டுதல் காரணமாக மக்மகோன் எல்லைக்கோட்டையும் தாண்டி இராணுவச் சோதனைச் சாவடி அமைத்து போருக்கான தயாரிப்பிலும், ஆத்திரமூட்டும் செயலிலும் நேரு அரசு இறங்கியது. எனவே முந்திக்கொண்டு தாக்கிய சீன இராணுவம் பல மைல் முன்னேறிய பிறகு, தானே போர் நிறுத்தம் செய்ததோடு பழைய கட்டுப்பாட்டு எல்லைக்கே திரும்பியது. இப்போரில் இந்திய இராணுவம் அடைந்த தோல்வியை மூடி மறைப்பதற்காக சீனத்திற்கு எதிராக தேசிய வெறியும் அவதூறும் செய்வது தொடர்கிறது. நெவில் மாக்ஸ்வல் என்ற ஆங்கிலேயப் பத்திரிகையாளர் எழுதிய "இந்தியாவின் சீனப் போர்" என்ற நூல் இதை ஆதாரப்பூர்வமாக நிருபிக்கிறது. இது குறித்து 1988-டிசம்பர்-'89-ஜூன் புதிய ஜனநாயகம் பத்திரிகையில் ஒரு தொடரும் வெளியிட்டுள்ளோம்.



www.padippakam.com
படிப்பகம்

www.padippakam.com

# மதுரை விநாயகர் ஊர்வலம்: இந்துவெறிக்கு போலீசு சலாம்!

மதுரையில் கடந்த செப்டம்பர் 19-ந் தேதி விநாயகர் சதுர்த்தி விழாவுக்கான ஊர்வலம் இந்து முன்னணியால் நடத்தப்பட்டது. ஊர்வலத்தில் வந்த நபர்கள் 60 பேர் என்றால் அதைக்காட்டிலும் போலீசு பட்டாளமே அதிகமிருந்தது. ஊர்வலத்தை முடித்துத் திரும்பிய மதுரை, பா.ஜ.க. துணைத் தலைவர் சங்கர்ராமின் கார் மீது வெடி குண்டு வீசப்பட்டது. எவ்வித சேதமும் ஏற்படவில்லை. மோட்டார் சைக்கிளில் வந்தவன் குண்டு வீசியதாக கூறப்படுகிறது. தினமலர் போன்ற பார்ப்பன பத்திரிக்கைகள் இச்செயல் முஸ்லீம் தீவிரவாதிகள், பாகிஸ்தான் - பங்களாதேஷ் உளவாளிகள், நக்சலைட் தீவிரவாதிகள் செயலாகத்தான் இருக்கும் என தனது ஆள்காட்டும் வேலையைச் செய்தன.

இந்த ஊர்வலத்திற்கு முன்பே சுவரொட்டிகள் மூலம் ம.க.இ.க., பு.மா.இ.மு. ஆகிய அமைப்புகள் கண்டனம் தெரிவித்திருந்தன. இந்த குண்டு வெடிப்பு சம்பவத்திற்குப் பின்னும் ''வெடி குண்டு இந்து முன்னணி நடத்திய நாடகமே'' என்று சுவரொட்டிகள் ஒட்டின. பு.மா.இ.மு. வைச் சேர்ந்த சிதம்பரம், மு.இ.அ.வைச் சேர்ந்த நால்வர், தி.க.(ரா)வைச் சேர்ந்த ஒருவர், திலீபன் மன்றத்தில் ஒருவர், இ.ம.மு - வில் இருவர் எனப் பலரைப் போலீசு கைது செய்து விசாரணை என்ற பெயரில் 3 நாள் சட்ட விரோதமாக வைத்திருந்து விடுவித்தது. தல்லாகுளம் போலீசு நிலையத்தில் வைக்கப்பட்ட இவர்களுக்குத் தண்ணீர் கூட முறையாகத் தராமல் சித்திரவதை செய்யப்பட்டனர். கைதைக் கண்டித்து அனைத்து அமைப்புகளும் சுவரொட்டி ஒட்டின.



சிதம்பரத்தை மூன்று நாள் சட்ட விரோதமாக காவலில் வைத்ததற்கு எதிராக பு.மா.இ.மு., நீதிமன்றத்தில் வழக்கு தொடுத்தது. போலீசு சிதம்பரம் வீட்டிற்கு வந்து, கைது செய்து ஒரே நாளில் விட்டு விட்டதாக எழுதி தரும்படி மிரட்டியது. சிதம்பரம் மறுத்து தக்க பதிலுரைக்கவே, ஆத்திரமான போலீசு தரக்குறைவாக திட்டி விட்டுப் போனது.

# அடிப்படை வசதிக்கோரி ஆர்த்தெழுந்த மதுரை மக்கள்

முதலமைச்சர் வருகிறார் என்றால் அந்தப்பகுதி முழுவதும் நன்றாக உள்ள சாலைகள்கூட புதுப்பிக்கப்படுகின்றன. அதிக சக்தி வாய்ந்த மின்விளக்குகள் போடப்படுகின்றன. முதலமைச்சரின் தனி உபயோகத்திற்காக மட்டுமே குளுகுளு வசதி கொண்ட கழிப்பறை கட்டி இடிக்கப்படுகின்றது. ஆனால், ஆயிரக்கணக்கானோர் குடிமியுள்ள எங்கள் பகுதிகளில் இத்தகைய அடிப்படை வசதிகள் எதுவும் பல ஆண்டுகளாக இல்லை — சுகாதார, கழிப்பிட, சாலை வசதி கோரி 27-9-93 அன்று மதுரையில் சாலை மறியல் செய்த சோலை அழகுபுரம், இந்திரா நகர், எம்.கே. புரம், சுப்பிரமணியபுரம் பகுதி வாழ் மக்களின் குரல் இது. 80-க்கும் மேலான மனுக்கள் கொடுத்தும் பயனில்லாததால் புரட்சிகர மாணவர் - இளைஞர் முன்னணி, பாரத ரத்னா மக்கள் முன்னேற்ற இயக்கம் ஆகிய அமைப்புகளின் சார்பில் பகுதி மக்கள் திரண்டு போராடினர். போராட்டம், ஒரு மாதத்திற்கு முன்னால் அறிவிக்கப்பட்டு தொடர் பிரச்சாரம் செய்து நடத்தப்பட்டது. ஒரு மணி நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்ட பின்னர் போலீசு வந்து, கலைந்து போகும்படி மிரட்டியது. நகராட்சி கமிஷனர் வந்து வாக்குறுதி தந்தாலே கலைவோம் என்று போராட்டக்காரர்கள் உறுதியாக இருக்கவே, பிறகு கமிஷனர் வந்து மனு பெற்று நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். இதற்குப்பின்னும் பலனில்லாமல் போனால், மாநகராட்சி மற்றும் குடிசை மாற்று வாரியம் - முன்பு கழிவுநீர், குப்பை கொட்டும் போராட்டம் நடத்தப்போவதாக முன்னணியாளர்கள் அறிவித்துள்ளனர்.



இப்பகுதியில் உள்ள போலிக் கம்யூனிஸ்டுகளின் இந்திய ஜனநாயக வாலிபர் சங்கம் (DYFI), பு.மா.இ.மு. வினரின் சாலை மறியல் போராட்ட அறிவிப்புக்குப் பின்னரே விழித்துக் கொண்டு அதே நாளில் அடிப்படை வசதி கோரி உண்ணாவிரதம் எனப் போட்டியாக அறிவித்தது. பகுதி மக்களிடம் ''பு.மா.இ.மு.வினர் தீவிரவாதிகள் - நக்சலைட்டுகள்; அவர்கள் பக்கம் செல்லாதீர்கள்; தவறான - அழிவுப்பாதையையே காட்டுவார்கள்'' என்று கூறி தடுத்தும் மக்கள் சாலை மறியலில் அதிகம் கலந்து கொண்டனர். ஓட்டுப் பொறுக்கும் சுயநலத்திற்காக பொறாமை - போட்டி மனப்பான்மையில் அவதூறைப் பரப்பிய வாலிபர் சங்கத்தினர் பகுதி மக்களிடம் இருந்து தனிமைப்படவே செய்தனர். ''இத்தனை நாள் எங்கே போயிருந்தார்கள்; இப்ப மட்டும் சொல்ல வந்துவிட்டார்கள்'' என்று பலர் அவர்களை இடித்துரைத்துள்ளனர். மக்களின் சாதாரண பிரச்சினைகளில் கூட அரசியல் ஆதாயம் தேடுமளவிற்கு (சாலை மறியலை இதே DYFI, பல இடங்களில் செய்திருந்தும் தீவிரவாதப் பாதை எனக் கூறுமளவிற்கு) போலிகள் சீரழிந்து நிற்கிறார்கள்.

www.padippakam.com

# காயல்பட்டிண கலவரம்: ஆர்.எஸ்.எஸ்., போலீசு கொலைவெறித் தாக்குதல்

***போலீசார் கைகளில் 'ரக்ஷா பந்தன்' கயிறு கட்டிக்கொண்டு மசூதிகளின் அருகே ''ஆர்.எஸ். எஸ். வாழ்க'' என கோஷமிட்டனர்; முஸ்லீம்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கினர்.***

**கா**யல்பட்டிணத்திலும் அதைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் பல பத்தாண்டுகளாக சகோதரர்கள் போல் வாழ்ந்து வரும் இந்து - முஸ்லீம் மதத்தினரிடையே, சிறு பிரச்னைக்கு வகுப்புவாத சாயம் பூசி, மோதலை உருவாக்க முயற்சி செய்தது ஆர்.எஸ்.எஸ். கும்பல். இந்த நரித் தந்திரம் தோல்வியுறவே பெரும்பான்மை இந்துக்களிடமிருந்தே தனிமைப்பட்டுப் போய் தனது முகத்தில் கரியைப் பூசிக் கொண்டுள்ளது. ஆனாலும் தனது பங்காளி ஜெயாவின் ஏவல் நாயான காவல்துறையுடன் சேர்ந்துகொண்டு திட்டமிட்ட முறையில் முஸ்லீம் மக்களின் மீதும் அவர்களது உடமைகளின் மீதும் கொலை வெறித் தாக்குதலை நடத்தியுள்ளது.

காயல்பட்டிணத்தில் முஸ்லீம்கள் பெரும்பான்மையாக வாழ்ந்து வருகின்றனர். இவர்களையடுத்து நாடார், ஆசாரி, தேவர் எனும் மேல்சாதி இந்துக்களும் வண்ணார், பறையர் போன்ற தாழ்த்தப்பட்டவர்களும் உள்ளனர். இவ்வூரைச் சுற்றியுள்ள ஆறுமுகநேரி, பேயன்விளை பகுதிகளில் நாடார் சாதியைச் சேர்ந்தவர்கள் அதிகம்.

அருகிலுள்ள திருச்செந்தூரில் அனைத்துச் சாதிப் பிரிவைச் சேர்ந்த இந்துக்களும் வாழ்ந்து வருகின்றனர். நாடார்கள் பலசரக்கு, ஜவுளி மற்றும் சிறு வர்த்தகத்திலும் ஆசாரிமார் தங்கம் மற்றும் தச்சுப்பட்டறைத் தொழிலிலும் ஈடுபட்டுள்ளனர். தேவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் பெரும்பான்மையோர் பேரூராட்சி ஊழியர்கள்; தாழ்த்தப்பட்ட மக்கள் கட்டிட கூலித் தொழிலாளிகளாகவும் முஸ்லீம்கள் மீன் வியாபாரிகளாகவும் வெளிநாடுகளில் வேலை செய்பவர்களாகவும் உள்ளனர். இப்பகுதிக்கே காயல்பட்டிணம்தான் வர்த்தகக் கேந்திரமாக விளங்குகிறது.

செப்டம்பர் 14 மற்றும் 15-ஆம் தேதிகளில் நடந்த 'மோதலு'க்கு காயல்பட்டிணம் கூலக்கடை பஜாரில் இருந்த மீன் சந்தையை வேறு இடத்திற்கு மாற்ற இஸ்லாமிய ஐக்கிய முன்னணியினர் முயற்சியெடுத்ததுதான் காரணம் என ஆர்.எஸ்.எஸ். ஒப்பாரி வைத்துள்ளது. விஜயபாரதம், தினமலர் போன்ற அவாளின் பத்திரிகைகள் மட்டுமல்ல 'தராசு'ம், ஆர்.எஸ்.எஸ்-ன் விஷப் பிரச்சாரத்தை அப்படியே கக்கியுள்ளன. ஆனால் இதனை முன்னணியினர் தங்களது சுயநலன் கருதிச் செய்யவில்லை. அந்த மீன் சந்தை வெகு ஆண்டுகளாக சட்டத்திற்குப் புறம்பான பகுதியில் இயங்கி வந்தது. அருகிலிருந்த பள்ளிக்கூடத்திற்குச் சுகாதார கேட்டினை விளைவிப்பதாக இருந்தது. இதனால் முன்னணியினர் பேரூராட்சியின் ஒப்புதலோடு நகரப் பஞ்சாயத்து அனுமதித்திருந்த இடத்திற்கு மாற்றினர்.

இம்மாற்றத்தினை அவ்வூரிலுள்ள ஓடக்கரை பகுதியினைச் சேர்ந்த சுகு என்ற ரங்கநாதன், சேகர், கண்ணன் ஆகிய மூவரும் எதிர்த்துள்ளனர். இவர்கள் மூவரும் நாடார் சாதியைச் சேர்ந்தவர்கள். இவர்களது கள்ளச் சாராய வியாபாரம் கூலக்கடை பஜார் ஆடு அறுக்கும் கூடத்தினை ஒட்டி நடந்து வருகிறது; மீன் சந்தை மாற்றப்படுவதால் வியாபாரம் பாதிக்கப்படும் என்பதுதான் பிரதான காரணம். அதனுடன் மீன் வாங்க வரும் பெண்களை உரசிச் செல்வது, ஆபாசமாகப் பேசுவது, அப்பகுதிக்கே தங்களது சாதி பின்னணியை வைத்துக் கொண்டு 'தாதா' போல் நடப்பது என்ற இவர்களின் அராஜகத்திற்கும் இம்மாற்றம் முடிவு ஏற்படுத்தியதால் இவர்களின் ஆத்திரத்தை அதிகப்படுத்தியுள்ளது.

இம்மூவரில் சுகு என்பவன் ஆர்.எஸ்.எஸ்.-ஐச் சேர்ந்தவன். பாபர் மசூதி இடிக்கப்பட்டபின் நடந்த கடையடைப்பின் போது இவன் தனது கடைகளை மூட மறுத்துள்ளான். அதுபோல் சேகர் என்பவனை முன்னணியினர் தாக்கிவிட்டனர் என்ற வதந்தியினைப் பரப்பி முன்னணியினரை இம்மூவர் கும்பல் ஆயுதங்களுடன் தாக்கியது. இதனை எதிர்த்து ஊர்ப் பொது மக்கள் நடத்திய 'பந்த்'-ன் போதும் இவன் கடையைத் திறந்து வைத்திருந்தான்.

இதனுடன் முஸ்லீம் மதத்தினரை இழிவுபடுத்தி மிக ஆபாசமான சுவரெழுத்துகளை இந்த கும்பல் எழுதியுள்ளது. முன்னணியினர் உடனே இந்து மதத்தையும், பா.ஜ.க.-வையும் அம்பலப்படுத்தி சுவரெழுத்து எழுதியுள்ளனர். இதனால் மூக்கறுபட்டு போன இந்த மூவர் கும்பல் தக்க தருணம் பார்த்திருந்து இடமாற்றத்தைத் தங்களது சுயநலனுக்கும் இந்து மதவெறியூட்டலுக்கும் பயன்படுத்திக் கொண்டுள்ளது. இம்மூவர் கும்பலுக்கு உறுதுணையாக இருந்தவன் வி.இ.ப. பொறுப்பாளர் இசக்கி ஆசாரி.

இடமாற்ற உத்தரவு வந்ததுமே மீன் வியாபாரிகள் — அனைவரும் முஸ்லீம்கள் — தங்களது கடைகளைப் புதிய இடத்துக்கு மாற்றிக் கொண்டனர். உடனே இம்மூவர் கோஷ்டி வெளியூரில் இருந்து ஆட்களைக் கொணர்ந்து போட்டி சந்தையை பழைய இடத்திலேயே நடத்தியுள்ளது. இதனை எதிர்த்து எல்.கே. மேனிலைப்பள்ளி மாணவர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதனால் மேலும் ஆத்திரமடைந்த அக்கும்பலின் அடியாட்கள் 10 பேர் மணலில் புதைத்து வைத்திருந்த ஆயுதங்களைக் கொண்டு மாணவர்களைத் தாக்கி, ஓட ஓட விரட்டியுள்ளனர். இத்தாக்குதலில் ஒரு மாணவனுக்கு கையில் அரிவாள் வெட்டு விழுந்துள்ளது. இதனால் ஆவேசங்கொண்ட பொதுமக்கள் ஓடக்கரை கும்பலை கற்களால் தாக்கி விரட்டினர்; அதனுடன் தாக்குதலுக்குத் தலைமை தாங்கிய சுகு, சேகர் மற்றும் பிறரின் எட்டு கடைகளைத் தாக்கி தீ வைத்தனர்.

தங்களது கடைகள் தீக்கிரையானதைக் காரணமாகக் கொண்டு பக்கத்து ஊர்களுக்குச் சென்று வதந்திகளைப் பரப்பி முஸ்லீம் எதிர்ப்பு வெறியைக் கிளப்ப முயன்றது இக்கும்பல். ஆனாலும் நிதானமான ஊர்ப்பெரியவர்கள் காயல்பட்டிணம் வந்து 'விசமிகளின் கடைகள்தான் எரிக்கப்பட்டுள்ளன; இந்துக்கள் அனைவரும் தாக்கப்படுகின்றனர் என்பது பொய்' என்பதனைப் புரிந்து கொண்டனர். அதனுடன் போக்குவரத்து இல்லாததால் பக்கத்து ஊர்களில் இருந்து காயல்பட்டிணம் திரும்ப இயலாத முஸ்லீம் பெண்களுக்கு உணவும் அடைக்கலமும் கொடுத்து பாதுகாப்பு அளித்துள்ளனர்.

ஆனாலும் தனிமைப்பட்டுப்போன இவர்கள் 14-ந் தேதியன்றே சமூக விரோதிகளைச் சேர்த்துக் கொண்டு முஸ்லீம் மக்களைத் தாக்கத் தொடங்கினர். ஹமீதியா பள்ளிவாசலின் மேற்கூரை ஓடு முழுவதும் அடித்து நொறுக்கப்பட்டது; அதனுடன் பள்ளிவாசலினுள் நுழைந்து சுவர்க்கடிகாரத்தைத் திருடிக் கொண்டனர். பேயன்விளையைச் சேர்ந்த சையத் இப்ராகிம் என்பவரின் புதிய வீட்டினைத் தாக்கி சேதப்படுத்தியதுடன், ஹபீபு என்பவரின் தோட்டத்தில் புகுந்து, காய்க்கும் பருவத்திலிருந்த பல தென்னை மரங்களை வெட்டிச் சாய்த்தனர். பலரின் பைக்குகள் தீயிட்டுக் கொளுத்தப்பட்

**உடைக்கப்பட்ட மசூதியின் மேற்கூரை**





படிப்பகம்

www.padippakam.com

டன; கார் கண்ணாடிகள் அடித்து நொறுக்கப்பட்டன. குழந்தைகளின் பள்ளிக்கூட வேனைக்கூட இக்கும்பல் விட்டு வைக்கவில்லை. இவற்றுடன் ஊர்ப்பொதுச் சொத்தான 10 ஏக்கர் வேலி அப்படியே கொளுத்தப்பட்டது; அரசு மருத்துவமனையின் துயரர் ஊர்தியினைத் (Ambulance) தாக்கி சேதப்படுத்தினர்.

14-ந் தேதி மாலை அமைதி திரும்பிய பின்னும் அடுத்த நாள் காலை மேலும் திட்டமிட்ட முறையில் தாக்குதலைத் தொடர்ந்தது இக்கும்பல். அன்று தலைமையை வி.இ.ப. பொறுப்பாளர் இசக்கி ஆசாரி எடுத்துக் கொண்டு பொற்கொல்லர்களைத் திரட்டி முஸ்லீம்களின் மீது கல்லெறிந்து தாக்கியுள்ளான். இதனால் ஆத்திரமடைந்த முஸ்லீம்கள் இசக்கி ஆசாரியின் கடையினைத் தாக்கினர். ஆனால் முதல் நாள் இரவே 10 லட்சம் பெறுமான நகைகளை இடம் மாற்றி விட்டபடியால் சேதம் அதிகமில்லை; இது தவிர இரண்டு தங்கப்பட்டறைகள் சேதமடைந்தன. அதிலொன்று கரசேவைக்குச் சென்று வந்த மணி என்பவனுக்குச் சொந்தமானது. இதோடு மட்டுமின்றி ஓடக்கரை மூவர் கும்பல் 'இது நியாயமா' எனக் கேட்ட அப்துல் காதரை நண்பர் எனக்கூட பாராமல் தாக்கியது; அவரின் புது ஸ்கூட்டரை எரித்துச் சாம்பலாக்கியது.

144 தடையுத்தரவு போடப்பட்ட நிலையில் போலீசின் அராஜகம் துணைக் கண்காணிப்பாளர் சுப்பையன், வட்ட ஆய்வாளர் அல்லல் காத்தான், துணை ஆய்வாளர் பிரசன்னா தலைமையில் கட்டவிழ்த்துவிடப்பட்டது. 14-ந் தேதியே வந்திறங்கிய ஆயுதப் படை பிரிவினைச் சேர்ந்த போலீசார் அனைவரும் 'ரக்ஷா பந்தன்' கயிறு கட்டியிருந்தனர்; மசூதிகளின் அருகே 'ஆர்.எஸ்.எஸ். வாழ்க' எனக் கோஷமிட்டுள்ளதுடன், 'லெப்ட், ரைட்' என்பதற்குப் பதிலாக 'ஜெய்ராம், சீதாராம்' என முழங்கினர். பள்ளிவாசலுக்குள் புகுந்து அங்கிருக்கும் தண்ணீர் தொட்டிகளில் உள்ளாடைகளுடன் ஆபாச நடனம் ஆடினர். லத்தி கம்பு, மரத்தடிகளால் தெருக்களில் எதிர்ப்பட்டவர்கள் மட்டுமின்றி, தாக்குதலுக்குப் பயந்து மசூதிகளுக்குள் ஓடி ஒளிந்து கொண்டவர்களும் தேடிப் பிடித்துத் தாக்கப்பட்டுள்ளனர். இதில் யஷ்யா என்பவரின் கை முறிந்தது; அரபி என்பவரின் மண்டை பிளந்து போனது. அவருக்குச் சொந்தமான தொப்பிக் கடையை உடைத்து ரூ. 9500/- ஐத் திருடிக் கொண்டனர் போலீசார். சுக்கூர் என்பவரின் கடையும் கொள்ளையடிக்கப்பட்டது. கிறிஸ்தவருக்குச் சொந்தமான பலகாரக் கடையொன்றில் நுழைந்து தின்று தீர்த்ததுடன், பொருட்களை தெருவில் வீசியெறிந்து ஆட்டம் போட்டுள்ளது இக்கும்பல்.

ஆத்திரமடைந்த இளைஞர்கள் கற்களை வீசி எதிர்த்தாக்குதல் தொடுத்துள்ளனர். உடனே போலீசார் ஜும்மா பள்ளிவாசலுக்குள் நுழைந்து அங்கிருந்தவர்களைக் கைது செய்து வேனுள் தூக்கியெறிந்தனர். அங்கிருந்து ஆறுமுகநேரி செல்லும் வரை அனைவரையும் லத்தி, இயந்திரத் துப்பாக்கி, பூட்ஸ் கொண்டு தாக்கியதுடன், எழுத முடியாத வார்த்தைகளால் திட்டி அவமானப்படுத்தியுள்ளனர். அபுபக்கர் பதினைந்து போலீசாரால் தாக்கப்பட்டார்; உமர் பாரூக் என்பவரின் முழங்கால் மூட்டு அடித்து நொறுக்கப்பட்டது; இனி அவருக்கு செயற்கை மூட்டுதான் பொருத்த முடியும். சித்திக் மற்றும் முன்னணியின் தலைவர்களான லியாகத் அலி, பஷீர் மூவரையும் பிடித்து அவர்களின் மர்ம உறுப்பிலேயே குறிவைத்துத் தாக்கியுள்ளது போலீசு. சித்திக்கின் ஆணுறுப்பு பூட்ஸ் லாடம் பட்டு இரணமானது; சமீபத்தில்தான் அவர் ஹிரணியா அறுவைச் சிகிச்சை செய்து



முஸ்லீம்களின் உடமைகளும் நாசப்படுத்தப்பட்டன

கொண்டார். சிறையில் வைத்திருந்த நாட்களில் அவருக்கு மருத்துவ சிகிச்சை செய்யாததால் புண் சீழ் பிடித்துப் புரையோடிப் போனது.

முன்னணியின் தலைவர்கள் இருவரும் தற்பொழுது குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். மீண்டும் செப்டம்பர் மாத இறுதியில் பதட்டம் உருவானபொழுது போலீசே தோட்டங்களுக்கும் சிறு குடிசைகளுக்கும் தீ வைத்தது. தீப்பிடித்த சிறிது நேரத்திலேயே தீயணைப்பு வண்டி உடனுக்கு உடன் வந்ததால் போலீசாரின் சதிச் செயல் அம்பலமானது. இப்பிரச்சனை தொடர்பாக முஸ்லீம் சமுதாயத்தைச் சேர்ந்த 106 பேர் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர்.

அமைதி பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருந்த பொழுதே இந்து மத வெறியர்கள் இரு முஸ்லீம் இளைஞர்களை வெட்டிச் சாய்த்துள்ளனர். மேலும் ஆர்.எஸ்.எஸ். வெறியன் சுகு திருச்செந்தூரில் பொதுக்கூட்டம் நடத்தி முஸ்லீம்களை அவமானப்படுத்திப் பேசியுள்ளான்; தொடர்ந்து இந்துக்கள் தாக்கப்படுகின்றார்கள் என வதந்தியைப் பரப்பி உண்ணாவிரதம் நடத்தப்பட்டது. 'காயல்பட்டிணத்தில் இந்துக்கள் தாக்கப்படவில்லை' என திருச்செந்தூர் வர்த்தக சங்கத்தினர் தட்டி எழுதி வைத்து இக்கும்பலை அம்பலப்படுத்தினர். மாநில இந்து முன்னணித் தலைமையோ இன்னும் ஒருபடி மேலே சென்று ''அங்கு 150 இந்து மதத்தைச் சேர்ந்தவர்களின் கடைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன'' என அண்டப்புளுகினை அவிழ்த்து விட்டுள்ளது. அதனுடன் 'அரசு ஒரு கோடி நஷ்ட ஈடு தர வேண்டும்' எனத் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

பிரச்சனையின் பொழுதோ அதன் பின்போ எந்த இந்து மதக் கோயிலும் காயல் பட்டிணத்தில் தாக்கப்படவில்லை; இப்பொழுதும் கூட வெளிப்பகுதிகளிலிருந்து 300 க்கும் அதிகமான பிற சாதி இந்துக்கள் காயல்பட்டிணத்துக்குக் கூலி வேலைக்கு எவ்விதத் தொந்தரவுமின்றி வந்து செல்கின்றனர்; கலவரத்திற்குத் தலைமையேற்ற இந்து மதவெறியர்களின் கடைகளைத் தவிர பிற இந்துக்களின் வியாபாரத்திற்கு இன்றுவரை எப்பிரச்சனையுமில்லை.

பாதிக்கப்பட்ட மக்கள், 'ஆயுதப்படை போலீசாரின் மீதும் தலைமையேற்று நடத்திய அதிகாரிகளான சுப்பையன், அல்லல் காத்தான் மற்றும் பிரசன்னா ஆகிய மூவரின் மீதும் குற்றவியல் நடவடிக்கை எடுக்க வேண்டும்; நீதி விசாரணைக்கு உத்திரவிட வேண்டும்' எனக் கோருகின்றனர். அரசோ துணை ஆய்வாளர் பிரசன்னாவை மட்டும் ஒப்புக்காக வேறு ஊருக்கு மாற்றல் செய்துள்ளது. 'பாதிக்கப்பட்டத் தங்களுக்கு எந்தவித நீதியும் வழங்காது தங்களை இரண்டாந்தர குடிமக்கள் போல் நடத்தும்' பா.ஜ. கட்சியின் ஊது குழலான ஜெயாவின் ஆட்சியினைக் கண்டு வேதனையும் வெறுப்புமடைந்துள்ளனர், முஸ்லீம் மக்கள்.

— கலவரப்பகுதியிலிருந்து தோழர். ... செந்தில்.

காயல்பட்டிணச் சம்பவம் நடந்து முடிந்து அதன் சுவடுகள் மறைவதற்கு முன்னரேயே தமிழக காவல்துறை நாகர்கோவில் அருகிலுள்ள ரவிபுதூர் கடையில் வாழும் முஸ்லீம்களின் வீடுகளில் நள்ளிரவில் புகுந்து தாக்கியுள்ளது. கடந்த செப்டம்பரில் குடி போதையிலிருந்த நான்கு போலீசார் பாருக் என்ற இளைஞரை துரத்திப் பிடித்து நிர்வாணமாக்கி, முஸ்லீம் என உறுதிப்படுத்திக் கொண்டு, மர்ம ஸ்தானத்திலேயே தாக்கியுள்ளனர். இதனால் அவர் நடு ரோட்டிலேயே மயக்கமுற்று விழுந்தார். இச்செய்தி ஊருக்குள் பரவி போலீசாருக்கும் பொதுமக்களுக்கும் இடையே தகராறு ஏற்பட்டுள்ளது. இதற்குப் பழிவாங்கும் முகமாக ஆர்.எஸ்.எஸ்-ன் அடியாட்களாகச் செயல்பட்டுவரும் துணைக் கண்காணிப்பாளர் சொக்கலிங்கம், குழித்துறை வட்ட ஆய்வாளர் சந்திரசேகர் இருவரின் தலைமையில் இத்தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

Published and owned by R.SHANMUGARAJ, 4, Samiyar Thottam, Alandur Road, Saidapet, Madras - 600 015
Printed by him at EZHIL PRINTS, 321, Arcot Road, Madras - 600 024, Editor: R.SHANMUGA...

படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM R.N. 42648/85 Regd.No. TN/MS(S) 3

மேல் தட்டு வர்க்கத்தினரின் மாறிவிட்ட உடையலங்கார பகட்டைக் காட்டும் படமிது. முன்னர் போல் அவர்கள் அணியும் ஆடைகள் சர்வதேசத் தரம் குன்றியவையல்ல; அதற்காக அவர்கள் தற்பொழுது வெளிநாடுகளுக்கும் சுங்கத் தீர்வை விலக்களிக்கப்பட்ட கடைகளுக்கும் ஓட வேண்டிய அவசியமுமில்லை. சர்வதேசிய தொழில் நுட்பத்துடன் இணைந்து மெல்லிய கம்பளி மற்றும் செயற்கை நூலிழைகளாலான துணிகளைத் தயாரிக்கக் கூடிய நிறுவனங்கள் 'ரேமாண்ட்ஸ், தினேஷ், டிக்ஜாம்' என இங்கேயே உள்ளன. 'பெனிட்டோன்', 'ஜோடியாக்' என சர்வதேச ஆயத்த ஆடை விற்பனை நிலையங்கள் நகரங்களில் பெருக ஆரம்பித்துவிட்டன. பருவகாலம் மாறும் பொழுது அவர்கள் அணியும் துணி வகைகளும் மாறிவிடுகின்றன. அது போல்தான் அவர்களின் ஆடை வடிவமைப்பும்; நேற்றிருந்தது இன்று கிடையாது. இதற்காகவே வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சிபெற்ற வடிவமைப்பு வல்லுநர்கள் இருக்கிறார்கள். செயற்கைகோள் ஒளிபரப்பும் உடையலங்கார போட்டிகளும் சர்வதேசிய அளவில் மாறிவரும் வடிவமைப்புகளை உடனுக்குடன் இங்கு கொண்டு வருகின்றன. அவர்கள் அணியும் சாதாரண குர்தாவே ஆயிரம் ரூபாய்; எனில் மற்றதெல்லாம்... நினைத்துப் பார்த்தால் மலைத்து போவோம் நாம்.




## இதுதான் இன்றைய இந்தியா



இது பழனியில் இலவச சேலை கொடுத்ததைப் பெற வந்து கூட்ட நெரிசலில் சிக்கி இறந்து போன தாய்மார்களின் பிண வரிசை. உணவுகூட அருந்தாமல் காலை முதல் காத்திருந்த மக்கள் கூட்டம் சேலை-கொடுக்க ஆரம்பித்ததும் 'எப்படியேனும் தான் ஒன்று பெற்றிட வேண்டும்' என்ற ஆவலில் ஒருவரை ஒருவர் முந்த, இவ்விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்திற்கான காரணங்கள் பலவற்றை அரசு அடுக்குகிறது. ஆனால், அரசின் 'தாரளமயமாக்கலும்' 'நவீன மயமாக்கலும்'தான் இத்தாய்மார்களைக் கையேந்த வைத்துள்ளது. 'புதிய ஜவுளிக் கொள்கை'யைச் செயற்படுத்தி செயற்கை நூலிழை இறக்குமதிக்கு வாரிவாரி கொட்டினார்கள்; மானியத்தை வெட்டி நெசவுத் தொழிலை சீரழித்து கோடிக்கணக்கான கைத்தறி துணி ரகம் தயாரிப்பதே நிறுத்தப்பட்டது. இதன் மூலம் வறிய மக்களுக்குக் குறைந்த விலையில் துணிமணிகள் கிடைப்பதில் மண்ணை அள்ளிப் போட்டனர். மறுபுறம் ஆட்சியைப் பிடிக்கும் ஓட்டுக் கட்சிகள் ஒவ்வொன்று போட்டிபோட்டு 'இலவச - கவர்ச்சித் தி[illegible]டங்களை' அறிவித்து அடித்தட்டு மக்களிடம், கையேந்துவதையே ஒரு கலாச்சாரமாக வ்ளர்த்துச் சீரழித்துள்ளனர்.

கையளவேயான ஐந்து சதவீத மேல் தட்டுக் குடியினர் உடுத்தும் ஆடைகளின் நளினத்திற்கு இத்தனை அக்கறை எடுத்துக் கொள்ளும் இந்த அரசுகள், மறுபுறம் அதற்காக கோடிக்கணக்கான உழைப்பாளி மக்களின் இடுப்புத் துணியில்தான் தங்கள் கைகளை வைக்கின்றன. நம்மிடம் பறி[illegible]தையே நமக்குக் கொடுத்துத் தமக்கு '[illegible]ளல்' பட்டம் சூட்டிக் கொள்கிறார் [illegible] வாழ்வையும் மானத்தையும் பறித்த இ[illegible] கைகளை நாம் முறிக்க து[illegible] எப்போது?

படிப்பகம்